KALKI
25.2.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



கண்ணீர் வியாபாரிகள்!



Team Health Shoppe
For Wellness
ALOE VERA
குளிர்முறை தொழில்நுட்பம்.
தண்ணீருக்கு பதிலாக ஆலோ வீரா ஜெல். உடலிற்கு
ஒவ்வாத ரசாயனங்களோ,
இதர பொருட்களோ இல்லாதது
தேங்காய் பால் மற்றும்
ஆலோ வீராவினை கொண்டு
தயாரிக்கப்பட்டதால்
இயற்கையான Moisturiser
மற்றும் க்ளீன்ஸர் -
சருமத்தை மென்மையாக
வைத்துக் கொள்ள
உதவுகிறது.
Healthy Alternative to regular soap
ALOE VERA COCONUT MILK BIOCLEANZER
ALOE VERA JUICE
An edge over the rest
பயனுள்ள உட்பொருட்களை குளிர்முறை
தொழில்நுட்பத்தினால் பாதுகாத்து
அளிக்கிறது. முதிர்ந்த இலையின்
கூழினாலான அசல் சாறு.
தண்ணீர் மற்றும் சுவை /
வண்ண சேர்க்கை
இல்லாதது.
பதிக்கப்பட்ட
சில மணி
நேரங்களிலேயே
100% சீர்படுத்தப்
படுகிறது.
ஆரோக்கியமான
குடும்பங்களிற்கு...
ரசாயனங்களில்லாத
குளிர் முறை
தொழில்நுட்பம்
இயற்கையிலேயே
உள்ள சத்துப் பொருட்கள்
மற்றும் வாசனைகளின்
தன்மை மாறாமல் பாதுகாக்கிறது.
TEAM CHEKKU SESAME OIL & COCONUT OIL
Beauty Care The Natural Way
TEAM BEAUTY PRODUCTS
• Aloe Care Facial Gel
• Aloe Multi-purpose Gel
• Aloe Care Fairness Oil
• Moisturising Cream உடலிற்கு
உகந்த எண்ணெய்
வகைகளுடன் சேர்க்கப்பட்ட
ஆலோ வீரா இயற்கையான
ஈரப்பதனி மற்றும் க்ளீன்ஸர் - சருமத்தை
மென்மையாக வைத்துக் கொள்ள உதவுகிறது.
ஆரோக்கியம் இயற்கையான வழியில்...
வருமுன் காப்பது நியதி என்பது ஆன்றோர் வாக்கு. நாம் உண்ணும் உணவு, பருகும் பானங்கள் மற்றும் சுவாசிக்கும் காற்றை இயற்கையோடு ஒன்றும் விதமாக அமைத்துக் கொண்டால், இன்றைய நவீன யுகத்தின் பல நோய்களை தடுக்க முடியும். மக்கள் உடல் நலம் காக்கவே தனது பல்வகையான தயாரிப்புகளை டீம் ஹெல்த் ஷாப்பி வழங்குகிறது.
டீம் ஹெல்த் ஷாப்பின் இதர தயாரிப்புகள்
• டீம் சோடியம் அல்லாத உப்பு • டீம் அரை உப்பு • டீம் நல்லெண்ணெய் (ரசாயனமற்ற குளிர்முறை தொழில்நுட்பம்) • டீம் தேங்காய் எண்ணெய் (ரசாயனமற்ற குளிர்முறை தொழில்நுட்பம்)
• கற்றாழை - சருமம் மற்றும் மேனிப் பராமரிப்பு பொருட்கள் • தேன் பொருட்கள்
• டீம் எனர்ஜி வாட்டர் மரபு முறை, கைகுத்தல் உணவுப் பொருட்கள்
• கொடைக்கானல் மலை தைலம் • பனைப்பொருட்கள்
FREE
Wellness of Body and mind
Fullness of Life and Living
NEW
Now Available
FLAXSEED OIL
FLAXSEED POWDER
ORGANIC PULSES
Team EUBIO CARE FOR WELLNESS
Team Eubio Care
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)
வண்டலூர்: டீம் ஹவுஸ், ஜி.எஸ்.டி. ரோடு, சென்னை - 48. போன்: 2275 0502
அண்ணாநகர்: பிளாட் 1200, Z பிளாக், 6வது அவென்யு, சென்னை - 40. (கோகிலோ கராத்தே ஸ்கூல் எதிர்புறம்) போன்: 4269 3332
அடையார்: எண்.26, தரைதளம், கார்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 3வது அவென்யு, இந்திரா நகர், சென்னை - 20. போன்: 4269 5115
E-mail : teamhealthshoppe@drraoholdings.com • Web : www.teamhealthshoppe.com


கல்கி
அடுத்த இதழ்...
+16
மங்கலகரமான ஆரம்பம்!
4.3.07 இதழ் முதல்...
அசத்தலான...
அழகான...
பாதுகாக்க வேண்டிய...
இலவச இணைப்புகளின்
அணிவரிசை!
கெட்டிமேளம் முழங்கிட...
முதல் புத்தகமாக
திருமணத்துக்கான
A to Z
தகவல்கள்!
கல்கி
கல்யாண ஜோடிகளுக்குப் பரிசும் காத்திருக்கு! விவரங்கள் அடுத்த இதழில்...

சரவெடியாகப் பேட்டியளித்து, சலசலப்பை ஏற்படுத்துவதில் கைதேர்ந்தவர் திருமாவளவன். சமீபகாலமாக ஆரவாரம் எதுவும் இன்றி அமைதியாக இருக்கிறார். ஒருவேளை சிறுத்தை பதுங்குவது சீறுவதற்கோ என்ற சந்தேகத்தோடு அவரிடம் பேசினோம்.

"விஜயகாந்தை கொச்சைப் படுத்துகிறார்கள்!"

"இப்போதுதான் சென்னையில் 'சமூக நீதி மீட்சி மாநாட்'டைப் பெரிய அளவில் நடத்தினோம். தமிழகம் முழுக்க மண்டல வாரியாக, தமிழகப் பொன்விழா மாநாடுகளை நடத்தி வருகிறோம். தொடர்ந்து பல கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டங்களை நடத்தி வருகிறோம். வருகின்ற ஏப்ரல் 14 அன்று நெல்லையில் 'அனைவருக்கும் வீடு - அனைவருக்கும் நிலம்' என்பதை வலியுறுத்தி மண்ணுரிமை மாநாடு நடத்தவிருக்கிறோம். ஊடகங்களில் பரபரப்பாகச் செய்தி வராததால் சிறுத்தைகள் பதுங்குவதாக உங்களுக்குத் தோன்றலாம்" என்றார்.

நீங்கள் ஆளும் கூட்டணியில் இருப்பதால், அரசை விமர்சிக்க முடிவதில்லை. இது உங்கள் கட்சி வளர்ச்சிக்குத் தடை தானே?

"கட்சி வளர வேண்டும் என்பதற்காக எல்லா விஷயங்களையும் எதிர்த்துப் பேச வேண்டுமா என்ன? சமீபத்தில் பெரியார் சிலை அவமதிக்கப்பட்டபோது அந்த விவகாரத்தை மாநிலக் காவல்துறை சரியாகக் கையாளவில்லை என்று எங்களுக்குத் தோன்றியது. உடனடியாக அதனைச் சுட்டிக்காட்டிப் போராட்டம் நடத்தினோமே! அதேபோல், பொது மக்களுக்குப் பிரச்னை என்று வருமானால் எங்களுடைய நிலைப்பாட்டிலும், கொள்கையிலும் எந்தவித சமரசத்துக்கும் இடம் கொடுக்க மாட்டோம்."

வருமான வரிச் சோதனை மூலம் விஜயகாந்துக்கு மக்கள் மத்தியில் அனுதாபம் உருவாகி, அவர் வளர்ந்து கொண்டே போவார் என்கிறார்களே?

"இப்படிப்பட்ட கருத்தை ஊடகங்கள்தான் வியாபார நோக்கில் சொல்கின்றன. இதன்மூலம் கொள்கை, கோட்பாடு, உழைப்பின் மூலம் விஜயகாந்த் வளரப் போவதில்லை, அனுதாபத்தின் மூலம்தான் வளருவார் என்று சொல்வது விஜயகாந்தை கொச்சைப்படுத்துவதற்குச் சமம்."



உங்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்ப் பாதுகாப்பு

"பொது மக்களுக்குப் பிரச்னை என்றால் சமரசத்துக்கு இடமில்லை!"



இயக்கத்துக்கு மாற்றாகவே பா.ம.க. 'தமிழர் மானம் மீட்பு இயக்கத்தை' ஆரம்பித்துள்ளதாமே?

"தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் முழுக்க முழுக்க மொழி தொடர்பானது. ஆனால், தமிழர் மானம் மீட்பு இயக்கமோ இனம் தொடர்பானது. இரண்டுமே அவசியமான தேவைகள்தாம். தற்போது தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் போராட்டம் நடத்தித்தான் எதையும் பெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை."

கூட்டணிக் கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு தர வேண்டும் என்கிற கருத்தை மாற்று முகாமில் இருந்தபோது வலியுறுத்தினீர்கள். இப்போது?

"கூட்டணி ஆட்சி வந்தால், ஆட்சி அதிகாரம் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்படும், அரசின் ஸ்திரத்தன்மை அதிகரிக்கும் என்ற பொதுவான கருத்தை நாங்கள் முன் வைத்தது உண்மைதான். ஆனால், இன்றைக்கு அதை வலியுறுத்திக் கேட்கும் அளவுக்கு எங்களுக்கு உறுப்பினர்கள் பலம் இல்லை. ஆகவே, கூட்டணி ஆட்சி என்பது எங்களுடைய கோரிக்கை அல்ல."

- ஆர்.முத்துக்குமார்

படம் : ஸ்ரீஹரி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

கண்ணீர்

சீரியல் சீர்திருத்தம் தொடர்பான வாசகர்களின் கண்டனக் கடிதங்களை சென்ற இதழில் பிரசுரித்திருந்தோம். இது குறித்த சின்னத் திரையினரின் கருத்து தொடர்கிறது...

ஜெ.கிருஷ்ணசாமி *(தயாரிப்பாளர், அபிநயா கிரியேஷன்ஸ்) :*

கலாசாரத்தைக் கேடயமாக வைத்துக் கொண்டு குறுக்குப் புத்தியோடு செயல்படும் மனோநிலை பெரும்பாலானோருக்கு வந்துவிட்டது.

குடும்பங்களில் நடைபெறுவதாகக் காட்டும் மிகைப்படுத்தப்பட்ட சோகக் காட்சிகள், கள்ளத் தொடர்பு விவகாரங்கள், மாமியார் - மருமகள் பிரச்னைகள் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவைதான். கண்ணீர் வியாபாரமாக சின்னத் திரை மாறிவிட்டதென்பது உண்மைதான்.

எங்கே இறங்குவது என்ற தீர்மானமில்லாத பஸ் பயணியைப் போல, எங்கே எப்படி முடிக்கப் போகிறோம் என்று தெரியாமலே சீரியலைக் கொண்டு செல்பவர்களால்தான் இந்த அபத்தங்கள் ஏற்படுகின்றன.

பெண்களின் வீக்னஸை வைத்து வியாபாரம் செய்யும் இந்தத் தன்மை மாற வேண்டும்; மாறும். மாற்றம் மக்கள் கையில் உள்ளது.



• சி.ஜே.பாஸ்கர்

சி.ஜே.பாஸ்கர் *(இயக்குநர்) :*

சீரியல்களில் சோகம் சோகம் என்று ஒரே பாடலைப் பாடுகிறீர்கள். சோகத்தைத் தாண்டி அந்தப் பெண் ஜெயிக்கிறாளா, இல்லையா? அதைப் பாருங்கள்.

டீவி. என்பது சினிமா மாதிரி இல்லை. ஒரு தொடரினை இயக்குநர் தொடங்குவதற்கு முன்பே அந்தக் கதையைப் பற்றி விவாதங்கள் நடத்தி முடிவுகள் எடுக்கப்பட்டு விடுகின்றன.

அதையும் மீறி புதுமைகள், மாற்றங்கள், சீர்திருத்தம் என்று இறங்கினால் டி.ஆர்.பி. ரேட்டிங்கில் அந்தத் தொடர், பின்னுக்குப் போய்த் தொழிலில் நஷ்டம் ஏற்படும். இது ஒரு நபர் முடிவு செய்கிற விஷயமல்ல.


ஏதோ நீங்கள் பார்க்கிற ஒரு சீன், ரெண்டு சீன் அழுகையாய் இருப்பதை வைத்து சீரியலே அழுகை சமாசாரம் என்பது வீண் வாதமாகத்தான் தெரிகிறது.

ஒன்றை மட்டும்



• தேவயானி

ஒப்புக் கொள்ளலாம்... 'பெண்ணுக்குப் பெண்ணே எதிரி' என்கிற விஷயத்தை நாங்கள் புளித்துப் போகும் அளவுக்கு எடுத்துவிட்டோம். எங்களுக்கே அது அலுத்துவிட்டது. நிச்சயம் இனி அதைத் தவிர்த்தாக வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.



* அபிஷேக்

அபிஷேக் *(நடிகர்)* :

இப்போதைக்கு இருபது, இருபத்தைந்து சீரியல்கள் வந்து கொண்டிருக்கின்றன. நான்கைந்துதான் முன்னிலையில் இருக்கின்றன. அவற்றில் சோகம் என்கிற விஷயம் எல்லா அம்சங்களையும் போலத்தான் இருக்கிறது. முழுக்க முழுக்க இருந்தால் யார்தான் பார்ப்பார்கள்?

டி.வி. சீரியலை இருபத்தைந்திலிருந்து அறுபத்தைந்து வயது வரையிலானவர்கள்தான் பார்சனலாக எடுத்துக் கொள்கின்றனர். ஆனால்

வியாபாரிகள்!

குழந்தைகள், கல்லூரிப் பருவத்தினர் ஈஸியாகத்தான் எடுத்துக் கொள்கின்றனர். இதையெல்லாம் தாண்டி ஒட்டுமொத்தமாய் சீரியலின் போக்கு மாற வேண்டும் என்கிற கருத்தை நான் வரவேற்கிறேன்.

சினிமா நடிகைகள் தொடரில் வர வேண்டும்; சோகக் காட்சிகள் சற்றுத் தூக்கலாக இருக்க வேண்டும்; இந்த சினிமா நடிகை நடித்தால் சீரியல் நன்றாகப் பேசப்படும் என்பது போன்ற தவறான சில கருத்துகள் தயாரிப்பாளர்கள் மூளைக்குள் முகாமிட்டுள்ளன. இது மாறினால், சீரியல் சீர்திருந்தும்.

கூடவே மக்களிடமிருந்து மாறுபட்ட ரசனைகள், எதிர்பார்ப்புகள் உண்டானால், சீரியலுக்கு மோட்சம் உண்டு. இல்லையெனில் அரைத்த மாவுதான் மீண்டும் மீண்டும்...



* கிருஷ்ணசாமி

தேவயானி *(நடிகை)* :

நான் நடிக்கிற 'கோலங்கள்' தொடரில் வாழ்க்கையில் உள்ள போட்டிகளை, பிரச்னைகளைத் தாண்டி சாதிக்கிற ஒரு பெண்ணாகத்தான் 'அபி' கேரக்டரைப் பார்க்க முடியும்.

ரொம்ப போராடிச்சாலோ, அழுகையும், சோகமுமா இருந்தாலோ எப்படி நம்பர் ஒன் இடத்தைக் கோலங்கள் பிடிக்க முடியும்?



● பிருந்தா ஜெயராமன்



● பாலமுரளி வர்மன்

பார்க்கறவங்களுக்குப் பிடிக்காது போனா, ஒரு செகண்டிலேயே அடுத்த சேனலுக்குப் போயிடமாட்டாங்களா?

சினிமாவில்கூட மூன்று மணி நேரம் உட்கார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் இருக்கு. ஆனா சீரியல்ல பிடிக்காத நொடியே அடுத்த சேனலுக்கு மாறுவதற்கு கையில் ரிமோட் இருக்கு. அதையும் தாண்டி சீரியல் சீர்திருத்தப்படணும்னு விரும்பினா, அது பார்வையாளர்கள் கையிலதான் இருக்கு!

பாலமுரளிவர்மன் *(திரைக்கதை, வசனகர்த்தா) :*

வாழ்க்கையைப் பற்றி நிறைய ஆய்வுகளைத் தொடரில் செய்ய முடியும். ஆனால் சோகம், அழுகை, பழி வாங்குதல் என்று ஒரே பாணியில் தொடர்கள் வருவது கொடுமையான விஷயம்தான். எங்கேயோ இருந்தபடி தனது சூட்சுமக் கயிறுகளால் சீரியலை இயக்குகிற டி.ஆர்.பியும் இதற்கு ஒரு முக்கியக் காரணம்.

திரைக்கதை, வசனம் என்று பார்க்கிறபோது வாழ்க்கை அனுபவமும், பட்டறிவும், புத்தக வாசிப்பும், சமூகப் பொறுப்பும் இல்லாமல் எழுதுகிறவர்களின் பங்களிப்பு இருக்கும்வரை இந் நிலை மாறாது.

மேலும் வசனகர்த்தாவாகிய எங்களுக்குப் போதிய மெட்டீரியல் கொடுக்கப்படுவதில்லை. கதையின் அடுத்தடுத்த நிலைகள் சொல்லப்படுவதில்லை.

ஒரு சிரட்டையைக் கொடுத்து அதிலேயே சட்னி வை, சாம்பார் வை, குருமா வை என்றால், நாங்கள் என்னதான் செய்ய முடியும்?

இவர்களுடைய எண்ணங்களை மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமனிடம் கூறி, 'சின்னத்திரை எவ்வாறு மக்களின் மனநிலையில் மாற்றங்களை உண்டாக்குகிறது' என்று கேட்டோம்.

"சீரியல்கள் பெண்களை மையப்படுத்தித்தான் எடுக்கப்படுகின்றன. ஆனால் எந்த சீரியலிலும் சமநிலையில் இருந்து பிரச்னைகளைப் பார்க்கிற, கையாள்கிற பெண்களைக் காண முடிவதே இல்லை. சோகமே வடிவமாய், கண்ணீரும் கம்பலையுமாய் அழுது வடியும் கதாபாத்திரங்கள்தான் இன்று உலா வருகின்றன. இது மனரீதியான சோர்வையும் நெகட்டிவ் சிந்தனையையும்தான் வளர்க்கும். பெண்ணுக்குத்தான் பிரச்னைகளா? ஆண்களுக்கு இருக்காதா? என்ற கேள்விகளும் கூடவே எழத்தான் செய்கின்றன.

'பெண்கள் விரும்புகிறார்கள், டி.ஆர்.பி. கொடுக்கமாட்டார்கள்' என்ற பதில்களெல்லாம் தொழில்ரீதியான பதில்களாக இருந்தாலும், அதில் ஓரளவு உண்மையிருந்தாலும் அதையும் தாண்டி ஆக்கபூர்வச் சிந்தனைகளைத் தொலைக்காட்சித் தொடர்கள் தர வேண்டும்.

கணவன், மனைவியோடும் பெற்றோர், குழந்தைகளோடும் பேசிப் பழகுகின்ற குறைந்த நேரத்தைக்கூடத் தம்வசம் ஈர்க்கின்ற தொலைக்காட்சித் தொடர்கள் சீர்திருத்தப்பட வேண்டியது அவசியம் மட்டுமல்ல, அவசரமும்கூட" என்றார் பிருந்தா ஜெயராமன்.

சந்திப்பு : அருணா செந்தில்

அட்டைப் படங்கள் : ஸ்ரீஹரி

இனி சனிக்கிழமைதோறும் . . .

சங்கீதத்தின் உச்சக்கட்டம்!





அரங்கேற்றம்

சனிக்கிழமை
காலை 8–10





சனிக்கிழமைதோறும் உங்கள் செவிகளுக்கு சுகம்வார்க்கும் இனிமையான அரங்கேற்றம் - வழங்குகிறது ஆஹா FM. பூபாளம் இசைக்கும் காலைப் பொழுதில், உங்கள் அபிமான சாஸ்திரீய சங்கீத விற்பன்னர்களின் ரம்யமான கர்நாடக இசை நிகழ்ச்சி. வாராவாரம் ஒவ்வொரு இசைக்கலைஞர் பங்கேற்கும் இந்நிகழ்ச்சி, வானொலியில் நிகழும் ஓர் இனிமையான இசை உற்சவமல்லவா!



91.9 ஆஹா! fm

பொழுதுபோக்கின் உச்சக்கட்டம்!

நீங்கள் கேட்டவை

ஜெயலலிதா சொன்னது எதைக்

● **வி.ஷியாம், கும்பகோணம்**

? காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை எதிர்த்து கர்நாடக மக்கள் நடத்தும் போராட்டத்தால் தமிழக வியாபாரிகளுக்குப் பல கோடிகள் நஷ்டமாகியிருக்கின்றனவே?

! இது மக்கள் போராட்டம் என்பதை ஏற்க முடியவில்லை. அரசியல்வாதிகளின் சுயநலப் போராட்டம்தான். ஒட்டுமொத்தத்தில் நஷ்டம் வியாபாரிகளுக்கு மட்டுமல்ல; விவசாயிகளுக்கும்தான் - இரு மாநிலங்களிலும்தான்.

● **ஆர்.கோபாலகிருஷ்ணன், ஜோடர்பாளையம்**

? மறுபடியும் வேலையில்லா திண்டாட்டம் பெரிதாகும் என்கிறார்களே - நிஜமா?

! அதென்னய்யா மறுபடியும்...? இப்ப என்னவோ வேலையில்லா திண்டாட்டமே இல்லாத மாதிரி...! எல்லாருக்கும் வேலை இருந்தா, எதுக்குக் கோடிக்கணக்குல மானியம் வினியோகிக்கிறார்களாம்?

● **ஜி.ஜெயராமன், கூந்தலூர்**

? "நீதித் துறையும் நிர்வாகத் துறையும் மோதலின்றிச் செயல்பட வேண்டும்; அதுதான் ஜனநாயகச் செயல்பாடுகளுக்கு நல்லது" என முதல்வர் குறிப்பிட்டுள்ளாரே...?

! பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் கதையைத்தான் கேட்டிருக்கிறோம். முகத்திலே குத்திவிட்டு நேசக்கரம் நீட்டும் கதையை இப்போதுதான் கேட்கிறோம்!

● **எஸ்.கே.மூர்த்தி, சாக்கோட்டை** ✱

? பெரும்பாலான சாலை விபத்துகள் குறித்து வெளியாகும் செய்திகளில், மருத்துவமனை வசதிகள் இல்லாததால்தான் பாதிக்கப்பட்டவர்கள் இறந்ததாகச் சொல்கிறார்கள் - கவனித்தீர்களா...?

! டி.ஆர்.பாலு - அன்புமணி கவனத்துக்கு : சாலை மேம்பாட்டுத் திட்டங்களுடன், விபத்து நேரும்போது உடனடி மருத்துவ உதவித் திட்டம் இணைய வேண்டும்.

● **பி.சாய்குரு, மதுரை**

? தனியார் கல்வி நிறுவனங்களில் ஐம்பது சதவிகித அன்னிய முதலீட்டை அனுமதிக்கலாம் என்று அமைச்சர்கள் குழு பரிந்துரைத்திருக்கிறதே?

! தங்க ஊசி என்பதற்

ரூ.100/- பரிசு பெறும் இருவர் :

லெ.நா.சிவகுமார், 13, பாலாஜி ஃப்ளாட்ஸ், புது எண்.32, ஆர்ய கௌடா சாலை, சென்னை - 600 033.

இரா.சாந்தகுமார், 7, மெயின் ரோடு, ஜெயா நகர், திருவள்ளூர் - 602 001.

✱ **ரூ.50 பரிசு பெறுபவர் :**

எஸ்.கே.மூர்த்தி, 6/202எ, சீனிவாச நகர், சாக்கோட்டை அஞ்சல், கும்பகோணம் - 612 401

• ஆட்சியும் ஆசையும்...



• சாலைகளும்...



• ... சவால்களும்!



காட்டுகிறது?



• மலரும் ம'ன்'னும்!



• குத்தும் காரும்!

காகக் கண்ணைக் குத்திக் கொள்ளலாமா? கல்வி மற்றும் பத்திரிகைத் துறைகளில் அயல்நாட்டு நிறுவனங்களுடன் கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் இருக்கலாமே தவிர, நேரடி அந்நிய முதலீடு அறவே கூடாது. இதனால் நமது விழுமியங்கள், கலாசாரம் அனைத்தும் காணாமல் போய்விடும்.

● வசீகரன்,
சென்னை - 18

? 33 கவுன்சிலர்கள் போட்டியின்றியே வென்றதை ஏற்க முடிகிறதா?

! இதை அந்த கவுன்சிலர்களின் வெற்றி என்று கருதவே முடியாது. ஆனால், அ.தி.மு.க.வுடைய புறக்கணிப்பு பாலிசி பெற்ற படுதோல்வி என்று உறுதியாகச் சொல்லலாம்.

● பா.அச்சுதன்,
வயலூர்

? பகவத் கீதையில் உங்களுக்குப் பிடித்த வரிகள்...?

! காலை 6.30 மணிக்கு 'பொதிகை'யில் வேளுக்குடி கிருஷ்ணன் விளக்கக் கேட்கும்போது, கீதையின் எல்லா வரிகளுமேதான் பிடிக்கின்றன - நன்றாகப் புரிகின்றன; மனத்தில் பதிகின்றன.

● குவளை எழில்,
சென்னை - 92

? "பத்மஸ்ரீ விருதைக் காண்பித்தால் ரயிலில் உட்காரக்கூட இடம் கிடைக்காது. என் பெயரைச் சொன்னாலாவது யாரேனும் இடம் தர வாய்ப்பு உண்டு" என நடிகை சுகுமாரி கூறியிருக்கிறாரே... மத்திய அரசு விருது அவ்வளவு 'சீப்'பா?

! ரயிலில் இடம் பதிவு பண்ணுவது போன்ற சலுகைகளுக்காகத் தரப்படுவதில்லை இந்த விருதுகள்... மிக அதிகமானோருக்குத் தரப்படுவதால் பத்ம விருதுகளின் மதிப்பு குறைவதென்னவோ உண்மைதான். ஆனால் அகந்தையோடு நிராகரிக்கிறபோது, நிராகரிப்பவரின் தகுதியும் மலினமடைகிறது.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33 ❐

? டாடா நிறுவனம் கோரஸ் நிறுவனத்தைக்

தராசு

கைப்பற்றியதன் மூலம் நம் நாடு பெறப் போகும் நன்மை என்ன...?

! ஹூ....ம்! டாடா நிர்வாகத்தில் கோரஸ் நிறுவனம் அபரிமித வருவாய் காண வேண்டும்; டாடா வாங்கியுள்ள விண்ணளாவும் கடன் தீர வேண்டும். அதன் பிறகு கோரஸ் அடையும் லாபத்தின் பங்கு இந்தியாவுக்கு வந்து சேர்ந்து, டாடா பங்குதாரர்களுக்கு விநியோகமாக வேண்டும். 'சிறுகக் கட்டி பெருக வாழ்' மந்திரம் இப்போதெல்லாம் பழசாயிருச்சு; 'அகலக் கால் வைச்சு அளந்து பார்!' என்பதுதான் இப்போ புது மந்திரம்!

● **இரா.சாந்தகுமார், திருவள்ளூர்** □

? பரிசு, பதவி உயர்வுக்காக காஷ்மீரில் காவல் துறையினர் போலி என்கவுன்டர் நடத்தியுள்ளனரே...?

! ஆயுதப் பயிற்சியும் ராணுவ வாழ்க்கையும் குரூரத்தை வளர்க்கும் இயல்புடைய உலக வரலாற்றில் எந்தக் காலகட்டத்திலும் எச் சந்தர்ப்பத்திலும், ராணுவத்தின் வெற்றியோடு அதன் வெறியும் உடன் கலந்தே பதிவாகியிருக்கிறது. எனவே ராணுவத்தை அனுப்புவதைத் தொடர்ந்து, உடனடியாக அரசியல் தீர்வுக்கும் அமைதி நிலவுவதற்கும் வழிகாண வேண்டும்; ராணுவத்தைப் படிப்படியாக, குறுகிய காலத்துக்குள் வாபஸ் பெற வேண்டும். ராணுவத்தின் அடக்குமுறை நீடித்தால் அராஜகமும் நீடிக்கவே செய்யும்!

● **அ.யாழினி பர்வதம், சென்னை - 112**

? க்ரைம் எழுத்தாளர்களுக்கும் ஞான பீடம், சாகித்ய அகாடமி போன்ற விருதுகள் தரப்பட வேண்டும் என்று சொல்கிறாரே ராஜேஷ்குமார்?

! வழங்கலாம். இலக்கிய நயத்துடனும் மனிதநேய அணுகுமுறையுடனும் எழுதினால்.

• விருதும் விருப்பமும்!





• வரிகளும் விளக்கமும்

● **பொன்விழி, அன்னூர்**

? காதலர் தினத்துக்காக ரோஜா 'மணம்' வீசும் தபால் தலையை தயாநிதி மாறன் வெளியிட்டது சரியா?

! ரோஜா 'மணம்' வீசும் தபால் தலையை அவரால் வெளியிட முடியும். ரோஜா 'மனத்தை' அவரால் யாருக்கும் கொடுக்க முடியாது, சகோதரி! அதை நமக்கு நாமே உருவாக்கிக் கொண்டால்தான் உண்டு!

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21**

? "நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் உள்ளாட்சித் தேர்தலை ரத்து செய்துவிட்டு மறுதேர்தல் நடத்துவோம்" என்று ஜெயலலிதா சொன்னது எதைக் காட்டுகிறது?

! "ஜனநாயகத்தைக் கேலிக்கூத்து ஆக்குவோம்" என்று சொல்வதுபோல் இருக்கிறது.

● **எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம்**

? நீதிபதிகள் தங்கள் சொத்துக் கணக்கைக் காட்டத் தேவையில்லை என்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் கருத்துச் சொல்லியிருக்கிறாரே...?

! "கணக்குக் காட்டத் தேவையில்லை" என்பது இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றதாக இல்லை. பிறருக்கு இல்லாத சிறப்பு உரிமைகளை நீதிபதிகளுக்கு வழங்குவதாகவும் உள்ளது. நீதிபதிகள் தாங்களாகவே முன்வந்து சொத்துக் கணக்கு அளிப்பது பிறருக்கு முன்மாதிரியாக இருப்பதுடன், நீதித் துறையின் மதிப்பையும் உயர்த்தும். ●



தென்னாப்பிரிக்கத் தீவுகளில் அழகு சிகிச்சை!

முகச் சீரமைப்பு மருத்துவம் இன்றைக்கு முக்கியத்துவம் வாய்ந்த துறையாக மாறிவிட்டது. தமிழக முகச் சீரமைப்பு மருத்துவர்களில் நிபுணத்துவம் வாய்ந்தவர் சென்னை தேனாம்பேட்டை எஸ்.ஐ.இ.டி. கல்லூரி எதிரிலுள்ள முகச் சீரமைப்பு மருத்துவமனையின் தலைமை மருத்துவர் எஸ்.எம்.பாலாஜி.

சொந்த மாநிலத்தோடு தமது பணிகளைச் சுருக்கிவிடாமல், இந்தியா வெங்கிலும் தமது மருத்துவ சேவையை பரப்பியவர். அண்மைக் காலமாக உலக அளவிலும் அவரது கவனம் திரும்பியுள்ளது. சமீபத்தில் மருத்துவ சேவை புரிய தென்னாப்பிரிக்கத் தீவுகளுக்குச் சென்றவரை 9841007934 என்ற செல்ஃபோன் எண்ணுக்குத் தொடர்பு கொண்டு பேசினோம்...

தென்னாப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள மேடகேஸ்கர், கோமோ ரோஸ், கேனரி ஐலேண்ட்ஸ், கேப்வேர்டு போன்ற தீவுக்கூட்டங்களோட அழகைச் சொல்லி மாளாது. இயற்கை எழில் கொஞ்சுற அந்த இடங்களை நினைச்சாலே நெஞ்சுல தேனூறும். அங்குள்ள மக்கள் கூட ரொம்ப வித்தியாசமானவங்க. அவங்க வாழ்க்கை முறை, பழக்கவழக்கம் எல்லாத்துலயும் ஒரு தனித் தன்மை இருக்கும். இங்கெல்லாம் அடிக்கடி உலக அழகிப் போட்டி நடக்கும். நம்ம இந்தியாவைச் சேர்ந்த யுக்தாமுகி, பிரியங்கா சோப்ரா, ஐஸ்வர்யாராய்னு பலபேர் உலக அழகியா முடிசூட்டப்பட்டது இந்தத் தீவுகள்லதான். இத்தனை நல்ல ஊர்கள்ல ஒரு பிரச்சனையும் இருக்குன்னா நம்புவீங்களா? நம்புங்க!

இங்குள்ள பலபேர் முகக் குறைபாடு பிரச்னைகளால பாதிக்கப்பட்டிருக்காங்க. குறிப்பாக, இங்க பல குழந்தைகள் அண்ணப்பிளவு, உதடுப்பிளவு பாதிப்பு கொண்டவையா பிறக்குது. இன்னொரு விஷயம் தெரியுமா? நம்மூர் மாதிரி முகச் சீரமைப்பு நிபுணர்களோ, முகச் சீரமைப்பு சார்ந்த பயிற்சிக் கல்லூரிகளோ குறிப்பிட்டுச்

சொல்ற அளவுக்கு இந்தத் தீவுகள்ல கிடை யாது.

இந்த நிலைமையிலதான் அங்குள்ள கவர்ன்மெண்ட் இதுபோல கஷ்டப்படுற வங்களுக்கு ட்ரீட்மெண்ட் தர இந்தியாவி லிருக்கற என்னைத் தொடர்பு கொண்டு, 'வருடத்திற்கு ஒரு முறையாவது வரமுடி யுமா'ன்னு கேட்டாங்க. நானும் கடந்த நான்கு ஆண்டுகளாக வருடந்தோறும் இங்கு வந்து அறுவை சிகிச்சை செய்வதோடு, இங்குள்ள மருத்துவர்களையும் பயிற்றுவித்து வரு கிறேன்.

இங்குள்ள தீவுகளைப் பார்க்கக் கண் கோடி வேண்டும். அவ்ளோ அழகு! புத்து ணர்ச்சியா ஃபீல் பண் ணணும்னா தூங்கி எழச் சொல்லுவாங்க. ஆனா தூங்காம இங்குள்ள இயற்கைக் காட்சிகளை மட்டும் பார்த்துக் கிட்டே இருந்தா போதும்... புத்துணர்ச்சி கிடைச்சிடும். பச்சைக் கம்பளம் விரிச்சா மாதிரி இருக்குற ஊர்ல கறுப்பி னர், வெள்ளை இன மக்கள்னு சரிசமமான மக்கள் தொகை. ரொம்ப இயல்பான மனுஷங்க. தான் உண்டு, தன் வேலை உண்டுன்னு இருப்பாங்க. ஏற் கெனவே - என்கிட்ட 'எங்க ஊர் மக்கள்ல பலபேர் முகக் குறை பாடு பிரச்னைகளால பாதிக்கப்பட்டிருக் காங்க'ன்னு சொல்லப்பட்டிருந்த தால, என்னோட முதல் வேலையே அந்த மக்களை வாட்ச் பண்றதாத்தான் இருந் தது.





எனக்கு இங்குள்ள குயின் விக்டோரியா மருத்துவமனை தான் சென்டர். நாளொன்றுக்கு- பத்துக்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள். தாய், குழந்தை, தகப் பன்னு, இராத்திரி, பகல்னு பார்க் காம தொடர்ந்து இப் பிரச்னை களால மருத்துவமனைக்குப் படை எடுத்துக்கிட்டே இருந்தாங்க. எல்லாத் தையும் அமைதியா கவனிப்பேன். சமயங்கள்ல பேசிப் பார்ப்பேன். குடும்ப உறவுகளைப் பத்தி விசாரிப்பேன். இப்படிப் பலபேரை என்னோட மருத்துவ விசார ணைக்கு உட்படுத்திக் கண்காணிச்சேன். ஒரு உண்மை புலப்பட்டுச்சு. கறுப்பின ஆட்களுக்கு உதடுப் பிளவு அதிகமாவும், வெள்ளை மக்களுக்கு அண்ணப்பிளவு அதிகமாவும் இங்க காணப்பட்டது. உடனே அடுத்தடுத்த கேள்விகள் தலை தூக்குச்சு. ஏன் இப்படி? என்ன காரணம்? மறுபடி விசாரணை; மருத்துவப் பரிசோதனைகள். கடைசியா ஏன்ங்கற கேள்விக்கு விடையைக் கண்டுபிடிச்சேன். ஆனா, அந்த விடை மர்மம் நிறைஞ்சதா, அதிர்ச்சி தரக்கூடியதா இருந்ததுதான் சோகம்!

(பேசுவேன்)



கல்கி



2007 பிப்ரவரி 25
விய மாசி 13
மலர் : 65
இதழ் : 30

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- *பாரதியார்*

அத்துமீறிய ஆர்க்காட்டார்; கண்ணியம் காத்த நீதிமன்றம்!

'நீதிமன்றங்கள் கட்டப்பஞ்சாயத்துகளாகச் செயல்படுகின்றன' என்கிற ஆர்க்காடு வீராசாமியின் விமர்சனம் நீதிமன்ற அவமதிப்புக்குச் சமம். எனினும் அவமதிப்பு நடவடிக்கைகளை எடுக்காமல் அவரிடம் விளக்கம் கேட்டது சென்னை உயர்நீதி மன்றம் - அதுவும் ஒரு பொதுநல வழக்குத் தொடரப்பட்டதால்.


அத்துமீறிப் பேசிய ஆர்க்காட்டார், உணர்ச்சிவசப்பட்டுக் கொட்டிய வார்த்தைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு தவறுக்கு மன்னிப்புக் கேட்டிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும்.


ஆனால், அவர் தமது தவறை நேரடியாக ஒப்புக்கொள்ளாமல், ''நான் சொன்னது எதுவுமே நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கில் சொல்லப்படவில்லை'' என்று விளக்கெண்ணெய்த்தனமான விளக்கத்தை அளித்திருக்கிறார்!

அந்த விளக்கத்தை ஏற்க மறுத்து நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க முகாந்திரம் நிறையவே இருந்தபோதிலும் தலைமை நீதிபதி ஏ.பி.ஷா அவ்வாறு செய்யாமல், ''நீதிமன்றம் இவ் விளக்கத்தை ஏற்கிறது; இந்த விவகாரத்துக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது'' என்று கூறிவிட்டார்.

ஜனநாயக அமைப்பில் நீதித்துறைக்கும் மக்கள் மன்றத்துக்கும் இடையே மோதல்கள் ஏற்படுவதும் நீடிப்பதும் நல்லதல்ல என்கிற நோக்கில் இயங்கிய தலைமை நீதிபதி, தமக்கும் தமது துறைக்கும் கௌரவம் சேர்த்திருக்கிறார். இத்தகைய பெருந்தன்மையை முதல்வர் கருணாநிதியிடமும் ஆர்க்காடு வீராசாமியிடமும் நம்மால் காண முடியாமல் போனதுதான் துரதிர்ஷ்டம்!

ஒரு திருமண விழாவில், சம்பந்தா சம்பந்தமின்றி நீதிமன்றங்களை விமர்சித்த அமைச்சர், ''தமிழகத்தை ஆள்வதே தாங்கள் தான் என்று நீதிபதிகள் நினைக்கிறார்கள்...'' என உண்மைக்குப்





புறம்பாகப் பேசியதுடன், "நீதிபதிகள் தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தவர்களல்லர்" என்றும் கிண்டலடித்து அவமதித்திருக்கிறார்.

தமிழக முதல்வர், அமைச்சருடைய பேச்சைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும் அல்லது அவரை மறுத்து எச்சரித்தாவது பேசியிருக்க வேண்டும். ஆனால், அவரோ 'பூனைக்கு மணி கட்டிய ஆர்க்காட்டாரை'ப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறார்!

இச் சம்பவம் அனைத்து வட்டாரங்களிலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தும் என்பது பழுத்த அரசியல் தலைவரான கலைஞருக்கும் மூத்த அரசியல் தலைவரான ஆர்க்காட்டாருக்கும் தெரியாமலிருக்க வாய்ப்பே இல்லை. இருந்தும் அவர்கள் துணிந்து பேசியிருக்கிறார்கள்.

தேர்தல் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே மறுதேர்தலுக்கு உத்தரவிட்டுப் பெருமை தேடிக்கொண்ட முதல்வர், இன்னொருபுறம் நீதிமன்றத்தை ஆர்க்காட்டார் விமர்சித்தபோது அதற்கு ஏன் துணைபோக வேண்டும்?

ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் விருப்பு - வெறுப்புகளாலும் அதிகார மமதையாலும் தவறிழைக்கக்கூடும் என்பதை உணர்ந்தே நமது ஜனநாயக அமைப்பில் சட்டமன்றம்- நீதிமன்றம் - நிர்வாகம் ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் தனி அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருப்பதுடன், தவறுகளைத் தட்டிக் கேட்கும் அதிகாரமும் நீதிமன்றத் துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதை ஏற்க மறுத்து மோதலை ஏற்படுத்தியதோடு அல்லாமல், புகைச்சலுக்கு 'வேறு யாரோ மூன்றாவது பிரிவினர்தான் காரணம்' எனப் புனைந்து பேசி, தமது கௌரவத்துக்கு இழுக்குத் தேடிக்கொண்டு விட்டார் முதல்வர்.

எதிர்கட்சி வழக்குரைஞர்களோ இந்த விவகாரத்தை அரசியலாக்கித் தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொள்ள, அருவருக்கத்தக்க மலின யுக்திகளைக் கையாண்டிருக்கின்றனர். மாண்பமை நீதிபதி ஏ.பி.ஷா இந்த அபத்தத்தையும் கண்டித்திருப்பது, நீதிமன்றத்திடமுள்ள நமது நம்பிக்கையை மேலும் பலப்படுத்துகிறது.

அரசியல்வாதிகளைப்போல் தனிநபர் மோதலாக இந்த விவகாரத்தை அணுகாமல், ஜனநாயக அமைப்பின் பிரிவுகளுக்கிடையேயான போராட்டமாக மட்டுமே கருதி, நீதிபதிகள் பிரச்னைக்குத் துரிதமாக முடிவு கட்டியிருக்கிறார்கள். அவர்கள் நீதிமன்றத்தின் கண்ணியத்தைக் காத்திருப்பது வரவேற்றுப் பாராட்டத்தக்கது. ○

பரபரப்பு கடிதம்!

கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திய கையோடு, பில் கேட்ஸ் வேறொரு பெரிய மாற்றத்துக்கும் தயாராக வேண்டியிருந்தது. அதுவரை கம்ப்யூட்டரில் ப்ரோக்ராம் எழுதுவதென்பது அவருக்கு ஒரு விளையாட்டான விஷயமாகவே இருந்து வந்தது. அதிலும் கஷ்டமான ப்ரோக்ராம்கள் எழுதுவதென்றால் அவருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. எவ்வளவு சிக்கலான விஷயமானாலும் நீயா, நானா பார்த்துவிடலாம் என்று டி ஷர்ட்டை மடித்துக்கொண்டு களத்தில் இறங்கிவிடுவார்.

இப்படிச் சுறுசுறுப்பாக ப்ரோக்ராம் எழுதி முடித்த பிறகு கேட்ஸின் ஈகோ திருப்தியடைந்துவிடும். தமக்குள் ஒரு சந்தோஷச் சிரிப்பைப் பொங்கவிட்டபடி, அடுத்த வேலையைக் கவனிக்கச் சென்றுவிடுவார். அதன்பிறகு அவர் எழுதி முடித்த அந்தப் ப்ரோக்ராம் முற்றிலும் அவருடைய ஞாபகத்திலிருந்து விலகிப் போய்விடும்.

எதையும் ஒரு தீவிரமான விளையாட்டுபோல், போட்டி போல் எண்ணுகிற இந்த அணுகுமுறை, பில் கேட்ஸ் பள்ளி, கல்லூரி மாணவராக கம்ப்யூட்டர் பழகிக் கொண்டிருந்தபோது நன்கு கை கொடுத்தது.

ஆனால், இப்போது தனி நிறுவனம் தொடங்கி, சாஃப்ட்வேர் எழுதி விற்கத் தொடங்கிய பிறகு, இப்படி விளையாட்டுத்தனமாக இருக்க முடியவில்லை.

மைக்ரோசாஃப்ட்டில் எல்லா வேலைகளையும் கேட்ஸ், ஆலென் இருவரும்தான் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

தினந்தோறும் காலையில் அலுவலகப் பூட்டைத் திறந்து ஷட்டரை உயர்த்துவதில் தொடங்கி, நள்ளிரவு தாண்டியும் அவர்கள் உழைத்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போதெல்லாம் ஒரு நாளைக்குப் பதினைந்து மணி நேரத்துக்குக் குறையாமல் அலுவலகத்திலேயேதான் தவம் கிடப்பார் பில் கேட்ஸ். அப்படியும் தொடர்ந்து புதுப்புது வேலைகள், வாய்ப்புகள் வந்துகொண்டே இருந்ததால், புதிய ப்ரோக்ராமர்களை வேலைக்குச் சேர்க்க வேண்டியிருந்தது.

இப்படி அரைமனதாகச் சிலரை மைக்ரோசாஃப்டுக்குள் அனுமதித்த பில் கேட்ஸுக்கு, அவர்கள் மீது முழு நம்பிக்கை உண்டாகியிருக்கவில்லை. இதனால், ஒவ்வொருவரும் எழுதுகிற ப்ரோக்ராம்களையெல்லாம் தன்னிடம் கொண்டுவந்து காண்பிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்.


இதுபோல் பில் கேட்ஸின் மேஜைக்கு வருகிற ப்ரோக்ராம்கள் ஒவ்வொன்றையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்வது அவருடைய பழக்கம். மற்றவர்கள் மணிக்கணக்காக உட்கார்ந்து எழுதிய ப்ரோக்ராம்களையெல்லாம் தலை வேறு, கால் வேறாகப் பிய்த்துப் போட்டுவிட்டு, கடைசியில் 'படுமோசம்' என்று ஒற்றை வார்த்தையில் ஒதுக்கித் தள்ளிவிடுவார்.

பிறகு? அதே ப்ரோக்ராமை தாமே உட்கார்ந்து மறுபடியும் புதிதாக எழுதத் தொடங்குவார். தன்னைத் தவிர மற்றவர்கள் எழுதுகிற ப்ரோக்ராம்களெல்லாம் நன்றாக இருக்காது என்று நம்பிய பில் கேட்ஸின் மனோநிலையால், மைக்ரோசாஃப்டுக்கு எதிலும் இரட்டை வேலை!

பில்கேட்ஸ் சாதனை சரித்திரம் 7

என்.சொக்கன்





ப்ரோக்ராம் எழுதுவதோடு மட்டும் நிறுத்திவிடாமல், புதிய நிறுவனமான மைக்ரோசாஃப்டுக்கு வாடிக்கையாளர்கள் சேர்ப்பது. அதன் தயாரிப்புகளைப் பற்றி வெளியே விளம்பரப்படுத்தி வாய்ப்பு தேடுவது, கம்ப்யூட்டர் கண்காட்சிகள், கருத்தரங்குகளில் பங்கேற்பது, வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்களை நேரில் சந்திப்பது, நிதி விவகாரங்களைக் கையாள்வது என்று எல்லா வேலைகளையும் தம் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தார்.

இதனால் பில் கேட்ஸுக்கு இருபத்து நான்கு மணி நேரம் போதவில்லை. எப்போதும் பிஸினஸ் பயணத்தில், இல்லாவிட்டால் அலுவலகத்தில் கம்ப்யூட்டருக்கு முன்னால்தான் மணிக்கணக்காக நேரம் செலவிட்டுக் கொண்டிருந்தார். அங்கேயே சாப்பாடு, நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடியே தூக்கம், மீண்டும் எழுந்து உட்கார்ந்து வேலை, வேலை, வேலை.

வருடம் முழுவதும் இப்படித் துளி ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருந்த பில் கேட்ஸ், மற்றவர்களும் தம்மைப் போலவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். இதனால், அப்போது மைக்ரோசாஃப்ட்டில் பணி புரிந்து கொண்டிருந்த பெரும்பாலானோர் இராக் கோழிகளாகி விட்டார்கள்.

‘அல்டெய்ர்’ கணினிக்காக பில் கேட்ஸும் பால் ஆலெனும் எழுதியிருந்த மென்பொருள்களை, எம்ஐடிஎஸ் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்து கொண்டிருந்தது. இதற்காக, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை ‘ராயல்டி’யாக வழங்கப்பட்டது.

அதே மென்பொருள்களை, வேறு கணினிகளுக்காகவும் மாற்றி அமைத்து விற்பனை செய்தது மைக்ரோசாஃப்ட். இதைத் தவிர, புதிய மென்பொருள்களை உருவாக்குகிற பொறுப்புகளும் அவர்களைத் தேடி வந்தன.

இப்படித் தொடர்ச்சியாகக் கஷ்டப்

பட்டு வேலை செய்துங்கூட, அந்நாளைய மைக்ரோசாஃப்ட் ஊழியர்கள் தங்களது உற்சாகத்தையோ, போராடும் வேகத்தையோ இழந்துவிடவில்லை. ஒரு பெரிய புரட்சியின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறோம் என்கிற எண்ணம்தான் அவர்களை அப்படிக் களைப்பில்லாமல் உழைக்கத் தூண்டியது.



• மைக்ரோசாஃப்ட் குழு...

இதனால் என்னதான் கடினமான வேலைகளை ஏற்றுக்கொண்டாலும், அவற்றை உரிய நேரத்தில் முடித்துத் தந்து, வாடிக்கையாளர்களிடம் 'சபாஷ்' பெற்றது மைக்ரோசாஃப்ட். இதற்குப் பரிசாக அவர்கள் மைக்ரோசாஃப்ட் தலையில் மேலும் மேலும் வேலைகளைச் சுமத்தினார்கள்.

இனிமேலும் எல்லா வேலைகளையும் தான் ஒருவனே பார்த்துக் கொண்டிருப்பது சாத்தியமில்லை என்பதை உணர்ந்தார் பில் கேட்ஸ். தன்னைப் போலவே அதிபுத்திசாலியான, கஷ்டப்பட்டு உழைக்கக்கூடிய சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் மைக்ரோசாஃப்டின் முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க முடிவு செய்தார்.

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில், பில் கேட்ஸ் எழுதிய ஒரு கடிதம், கம்ப்யூட்டர் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

(தொடரும்)

நடந்து வந்த ராமன்; நர்த்தனமாடிய கிருஷ்ணன்!



● நாட்டிய பல்லக்கு!

“பாண்டுரங்கன் கோயிலில் இன்னைக்குத் திருப்பதி பெருமாள் அலங்காரம்...”

- தென்னாங்கூர் போய் இறங்கியதுமே சொல்கிறார்கள்.

“சனிக்கிழமையில்லையா, அதனால அலமேலுமங்கையோட ஸ்ரீநிவாஸபெருமாளா காட்சியளிப்பார் பாண்டுரங்கன்.”

கண்ணனை எப்படிப் பார்த்தாலும் அழகுதான் என்றாலும் ரகுமாயி ஸமேதனாக இடுப்பில் கை வைத்துக் கொண்டு அவன் நிற்பதைக் காணும் ஆவலுடன் வந்த நமக்குச் சற்றே ஏமாற்றம்...

அதைத் தணிக்கிறான் அதே தென்னாங்கூரில், லக்ஷ்மி நரசிம்மர் ஆலயத்துத் திருச்சுற்றில் நின்றபடி சிரிக்கும் குட்டி பாண்டுரங்கன்.

“இந்தப் பெருமான் பாதத்தைத் தொட்டு சேவிக்கலாம்” என்று பட்டர் அனுமதி தர, அவனுடைய சிறு பாதங்களைத் தொட்டுத் தலைவணங்கி சில கணங்கள் நிற்கிறோம்.

மாலை வெயிலில் ஈசுவரன் கோயிலையும் தரிசித்துவிட்டு, வந்தவாசி அருகே உள்ள தென்னாங்கூர் கிராமத்தில் நாட்டியரங்கம் அமைப்பு நடத்தும் நாட்டிய சங்க்ரஹம் முகாமுக்கு வருகிறோம்.

சென்னையின் முன்னணி நடனக் கலைஞர்களிடம் பயிலும் மாணவிகள் மூன்று நாட்களாகத் தென்னாங்கூரில் தங்கி நாட்டிய நுணுக்கங்கள் குறித்த பயிலரங்கத்தில் பங்கேற்று வருகிறார்கள். சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவில் உள்ள தென்னாங்கூரில், அவர்கள் தங்குவதற்கு இடமும் தெம்புடன் ஆடிப்பாடி மகிழ ஏதுவாக சத்தான உணவும் அளித்து உதவுகிறது சுவாமி ஞானானந்தகிரி அறக்கட்டளை அதன் அறங்காவலர் ஆர்.கிருஷ்ணசாமி முன்னின்று ஏற்பாடுகளைக் கவனித்துவர, ஞானாம்பிகா கேடரிங் நிறுவனத்தின் விட்டல் பாய்ந்து பாய்ந்து உபசரிக்கிறார்.

நாட்டியப் பயிலரங்கத்துக்கேற்ற வசதியான மேடையுடன்கூடிய மண்டபம்; அதன் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் நாம ஸங்கீர்த்தன மகான்களின் அழகான

திருவுருவங்கள். பக்கத்திலேயே பாண்டு ரங்கன் கோயில், எதிரிலேயே தபோவன அதிஷ்டானம்... கலையுணர்வையும் இறை யுணர்வையும் பெருக்கி ஆடலை அர்ப் பணமாக உயர்த்தவல்ல சூழல். தங்கள் அனுபவத்தையும் ஆற்றலையும் பகிர்ந்து கொள்ள சி.வி.சந்திரசேகர், பிரகா பிரஸெல், புஷ்கலா கோபால், லீலா ஸாம்ஸன் போன்ற நாட்டிய குருமார்கள், இசை நுணுக்கங் களை விளக்க குமரேஷ், ஜெயந்தி குமரேஷ், கவிதையுணர்வைத் தூண்டி விளக்கம் தர சுதா சேஷய்யன், யோகாசனப் பயிற்சி தர கோபாலகிருஷ்ணன் என்று பயிலரங்கில் பங்கேற்கும் மாணவர்களுக்குப் பல்முனைகளிலும் வித்தகர்கள் வழி காட்டுகிறார்கள்.

அவற்றால் பய னடைந்த அனைவரும் தனித்தனியே ஆடிக் காட்டித் தங்கள் திற மையை வெளிப்படுத்தி முடிக்கவும் பாண்டுரங் கன் கோயிலில் கருட ஸேவை ஆரம்பிக்கிறது...



• கருடவாகனம் புறப்பாடு



• காளஹஸ்தியிலிருந்து வந்த நாதசுரக் கலைஞர்கள்

நாட்டியப் பயிலரங்கம் அப்படியே கோயில் பிராகாரத்துக்கு இடம் பெயர்கிறது.

கருடாழ்வார் பெருமிதத்துடன் தாங்கும் பெருமாளை, சென்னையிலிருந்து வந்த திடகாத்திர இளைஞர்கள் தூக்கித் தோளில் இருத்திக் கொள்கிறார்கள். நாதஸ்வரத்தில் மல்லாரி ஒலிக்க, பெரு மான் கருட ஸேவை மண்டபத்திலிருந்து துவஜஸ்தம்பம் நோக்கி சர்வ அலங் காரங்களுடன் வருகிறார். அவர் முன்னே, அவரை நோக்கிக் கூப்பிய கரங்களும் பரவசம் ததும்பும் விழிகளுமாக நடனக் கலைஞர்கள் ஆடியபடி வருகிறார்கள். துவஜஸ்தம்பம் அருகே நின்று ஆட, வெங்கடாசலபதி - அலமேலுமங்கா கோலத்தில் மூலஸ்தான பெருமாளும் தாயாரும்கூட அக்காட்சியை உத்ஸவ பெருமாளுடன் சேர்ந்து கண்டு மகிழ்கிறார்கள்!

நாதஸ்வரம் 'நன்னு பாலிம்ப நடசி வச் சிதிவோ' என்று தியாகராஜரின் உருக்க மான கேள்வியை மோகனத்தில் பொழி கிறது. வானிலும் மோகன நிலவு மெள்ள உயர்ந்தெழுந்து வருகிறது. "என்னைக் காத்தருள கால் நோக நடந்து வந்தாயா ராமா?" என்று பேராசிரியர் சந்திரசேகர் அபிநயம் பிடிக்கிறார். "தாமரைக் கண் ணல்லவா உன்னுடையது?" (வனஜ நயனவோ...) என்று அடுத்த வரிக்கு அவர் கரங்கள் தாமரைக் கொடியாகவும், மொட்டாகவும், மலராகவும், அதில் மொய்க்கும் வண்டாகவும், பெருமானின் விழியாகவும், அதில் ததும்பும் கருணை யாகவும் மாறி மாறி முத்திரைகளைப் பதிக்கின்றன... கோயிலையும் வழி பாட்டையும் ஒட்டி வளர்ந்த பரதக் கலை தொன்மையில் எப்படி இருந்திருக்கும் என்பதைக் கலைஞர்களும் பார்வை யாளர்களும் உணர்ந்து லயிக்கிறார்கள்...

"ராதா ஸமேதா கிருஷ்ணா" என்று நாதஸ்வரம் குதூகலிக்க, அனைத்துக் கலைஞர்களும் அங்கே பெருமான் முன்னிலையில் கோபிகளாகவும் கண்ணன்களாகவும் மாறி, சுழன்று, சுழன்று ஆடுகின்றனர்.

பார்வையாளர்கள் மத்தியில் உள்ள தென்னாங்கூர் கிராமத்துச் சிறுமிகளின் கைகளைப் பிடித்திழுத்து வந்து நடனத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள், கலைஞர்கள். பழைய பாவாடைகளும் பிளாஸ்டிக் வளையல்களும் அணிந்து, பட்டுக்கும் நகைக்கும் நடுவே நுழையும் சிறுமிகளின் விழிகளில் ஒளிரும் சந்தோஷம் பெருமாளுக்கே ஆபரணமாகிறது. வெகு இயல்பாக, லயத்தில் ஒன்றி ஆடும் அந்தச் சின்னச் சின்னப் பாதங்களில் விட்டல நாமம் ஒலிக்கிறது. நிலவொளியில் அவர்களோடு கண்ணனும் நர்த்தனமாடுவதாகவே தோன்றுகிறது.

நாட்டிய உபசாரம் முடிந்து உத்ஸவ பெருமாள் பாண்டுரங்கன் சன்னிதியில் யதாஸ்தானம் பெறுகிறார். அதுவரை மூடியிருக்கும் திரைகள் விலக, வெங்கடாசலபதி - அலமேலுமங்கா கோலத்திலிருந்து மாறி, விட்டல - ரகுமாயியாக விச்ராந்தி கோலத்தில் நின்று சிரிக்கிறார்கள் மூலஸ்தானத்துப் பெருமாளும் தாயாரும்! அவர்களின் பாதங்களில் சலங்கைகள் மின்னுகின்றன... "என்ன...? பார்த்தாச்சா - பாண்டுரங்கனை?" என்று கேட்பது போல் கண் சிமிட்டி ஜொலிக்கின்றன!

• நடனக் கலைஞர்களுடன் பேராசிரியர் சந்திரசேகர்



- சீதா ரவி

படங்கள் : சித்தார்த்

லைவ் டாக் லஜ்ஜாவதி



ஹாய் வாசகாஸ்! எப்படியிருக்கீங்க? நேத்து ஒரு ஃபங்ஷன்ல நம்ம 'வெயில்' தங்கத்தை–அதாம்பா... நடிகை பிரியங்காவைப் பார்த்தேன்.

"அடுத்து படம் பண்ணலையா?"ன்னேன்.

"ஏன் பண்ணாம? 'தூத்துக்குடி' ஹீரோ ஹரிகுமாருக்கு ஜோடியா 'திருத்தம்' பண்றேன். ரெண்டு பேருக்குமே இது ரெண்டாவது படம்ங்கறதால ஹார்டு ஒர்க் பண்ணி நடிக்கிறோம். படப்பிடிப்பு ஊட்டியில் போயிட்டிருக்கு"ன்னார்.

"இப்ப பயங்கர குளிராச்சே, எப்படிச் சமாளிக்கிறீங்க?"

"வேற வழி! சமாளிச்சுத்தானே ஆகணும்! இந்த சீசன்தான் காட்சியமைப்புக்கு ஏற்றதா இருக்கும்ங்கறது டைரக்டர், ஒளிப்பதிவாளர் முடிவு."

"திருத்தத்துக்குத் தயாரிப்பாளர் யாரு... ஹரிகுமார்தானே?"

"எப்படிக் கண்டு பிடிச்ச லஜ்ஜா?" என்றார் பிரியங்கா.

"அதான் தெரிஞ்ச கதையாச்சே!" என்று நடையைக் கட்டினேன்.



• 'கூடல்நகரில்' பரத்துடன் சந்தியா...

பரத்துக்குக் கல்யாணப்

'**கூ**டல்நகர்' படத்தோட ஆடியோ ரிலீஸ் ஃபங்ஷனுக்குப் போயிருந்தேன். பரத் முதல் முறையா, சூரியன், சந்திரன்னு ரெண்டு வேஷம் கட்டி நடிக்கிற படம். புது டைரக்டர் சீனு ராமசாமி பரத்தை ,பெண்டு எடுத்திருக்கறதாச் சொன்



• 'சென்னை - 600 028'

இன்னொரு விஷயம் தெரியுமா? இந்தப் படத்தோட டைரக்டர் சீனு ராமசாமி, பாடலாசிரியர் தேன்மொழியைத்தான் கல்யாணம் பண்ணியிருக்காரு.

''உங்க கல்யாணம் எப்ப பரத்?''னேன்.

''வாக்கா சொல்றேன்''னு அப்படியே தனியாக் கூட்டிட்டு வந்தவர், ''நான் நல்லா இருக்கறது உனக்குப் பிடிக்கலையா? த்தோ, இதுதான் வெளில போற வழி, கிளம்புக்கா''ன்னுட்டார்.



• 'திருத்தம்' படத்தில் ஹரிகுமாருடன் பிரியங்கா...

னாரு. படிக்காத கிராமத்துப் பெண்ணா நடிச்சிருக்கறதாச் சொன்ன சந்தியா, 'பரத்தோட நடிச்ச 'காதல்' மாதிரி இந்தப் படமும் ஹிட் தான்'னு நம்பிக்கையா பேசினாங்க.

கடைசிவரை விழாவுக்கு பாவனா வரவே இல்லை. போன் பண்ணிக் கேட்டேன்.

''லஜ்ஜா, ஏதாவது கதைகட்டி விட்டுடப் போறாங்க. கொஞ்சம் பர்சனல் காரணம், அதான் வரலை''ன்னார்.

எப்போ ?

சென்னை - 600 028 - பின்கோடு இல்லம்மா, நம்ம கங்கை அமரன் பையன் வெங்கட் பிரபு டைரக்ட் பண்ற படம்! கிரிக்கெட் பத்தின படமாம். 'லகான்' மாதிரியான்னு கேட்டேன்.

''லகான்ல கிரிக்கெட் தெரியாதவங்க கிரிக்கெட் விளையாடற மாதிரி கதை இருக்கும். 'சென்னை - 600 028'ல கிரிக்கெட் விளையாடத் தெரிஞ்சவங்க லோக்கல் டோர்னமெண்ட்ல சந்திக்கிற பிரச்னைதான் கதை''ன்னார் வெங்கட்.

''வேறென்ன புதுமை?''

''இருக்கே. நம்ம யுவன், முதல் முறையா இந்தப் படத்துல பாடலாசிரியரா பட்டையைக் கிளப்புறார். உலகக் கோப்பை நெருங்கற சமயத்துல ரிலீஸ் பண்ணி உள்ளூர்க் கோப்பையை வாங்கப் போறேன்''னார்.

சிக்ஸர் அடிங்க பாஸ்! ●

சிறப்புச் சிறுகதை

பொன்விழா!

இந்திரா பார்த்தசாரதி

நந்திதா மணியைப் பார்த்தாள். பன்னிரண்டு! விமான நிலையத்திலிருந்து அவசர அவசரமாய் வெளியே வந்து, அங்கு பார்க் செய்திருந்த தன் காரை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டாள்.

ஷிகாகோவில் அவள் பிடித்திருக்க வேண்டிய எட்டு மணி ஃப்ளைட் ரத்தாகி விடவே, அடுத்த விமானத்தைத்தான் பிடிக்க வேண்டியதாயிற்று. ரமேஷுக்கு ஃபோன் செய்து விமானம் ரத்தாகிவிட்ட செய்தியைச் சொன்னாள். மௌனம்தான் அவன் பதில். கோபமாக இருக்கிறான் என்று அர்த்தம். அவளும் ஃபோனில் வழக்காட விரும்பவில்லை.

கல்யாணத்துக்கு முன் நடந்த சந்திப்பில், அவள் அமெரிக்காவிலும், தொடர்ந்து பத்திரிகைத் தொழிலிலும் இருக்கலாம் என்று சொன்னவனுக்கு, இப்பொழுது அவள் அந்த வேலையில் இருப்பது பிடிக்கவில்லை. ஆனால், நிருபர் வேலை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. சமூகத்திலும், அரசியலிலும் புரையோடிக் கிடக்கும் ஊழல்களை அம்பலப்படுத்த ஒரு வாய்ப்பு. தனக்கென்று ஓர் அடையாளம் இருக்கின்றது என்பதை அவள் தனக்குத் தானே உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

அவள் அப்பாவும் அம்மாவும் அவளுக்குச் சிறு வயதிலிருந்தே பூரண சுதந்திரம் கொடுத்திருந்தார்கள். இருவருமே பேராசிரியர்கள். அப்பா அடிக்கடிச் சொல்வார்: 'உனக்கு எது சரியென்று படுகின்றதோ அதைச் செய்யத் தயங்காதே. அதனால் உனக்குத் தொல்லைகள் வந்தால், அவற்றை எதிர்நோக்கக்கூடிய துணிவு உனக்கு வேண்டும்.'

டில்லியில் அவள் 'டைம்ஸி'ல் வேலை செய்யும் போதுதான் ரமேஷைச் சந்தித்தாள். ஒரு சர்வதேச விஞ்ஞான 'செமினாரு'க்கு அமெரிக்காவிலிருந்து வந்திருந்த இளம் விஞ்ஞானி. ஒரு பிரபல அமெரிக்க விஞ்ஞானியை அவள் நேர்முகம் காண்பதற்கும் அவன், அவளுக்கு உதவி செய்தான். அவன் அவளை மிகவும் விரும்பியதாக அவளுக்குத் தோன்றியது. இதையே காரணமாகக் கொண்டு அவள் அவனைத் திருமணம் செய்துகொள்ள இசைந்தது, ஓர் உணர்ச்சிகரமான முடிவோ என்று அவளுக்கு இப்பொழுது நினைக்கத் தோன்றுகிறது.

அவன் தன்னைச் சுற்றி ஒரு குறுகிய வட்டத்தை அமைத்துக் கொண்டு அதுவே சொர்க்கமென்று இருப்பவன். சமூக, அரசியல் அக்கறை எதுவும் அவனுக்குக் கிடையாது. தன் மனைவியும் அப்படி இருக்க வேண்டுமென்று அவன் விரும்பியதால்தான் இருவருக்குமிடையே ஏற்பட்ட பிரச்னைகள்.

கேரேஜில் ரமேஷ் காரைச் சரியாக நிறுத்தி வைத்திருக்கவில்லை. தன் காரை அங்கே நிறுத்த முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. வெளியே நிறுத்திவிட்டு, வீட்டுக்குள் சென்றாள். சமையல் கூடத்தில், விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சாப்பாட்டு மேஜையில் அவளுக்கு உணவு மூடி வைக்கப்பட்டிருந்தது; சைனீஸ் உணவு; கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான்.

அவளுக்குப் பசியில்லை. மேஜையிலிருந்த உணவை ஃப்ரிஜ்ஜில் வைத்தாள். 'ஓவர்கோட்டை'க் கழற்றி நாற்காலியின் மீது போட்டாள். அவளுக்கு மிகவும் களைப்பாக இருந்தது.

மாடி ஏறிச் சென்றாள். படுக்கை அறையில் ரமேஷ் படுத்திருந்தான்.

அவனுடைய கண்கள் மூடியிருந்தனவே தவிர, அவன் தூங்கி விட்டானா இல்லையா என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவள் உடை மாற்றிக்கொண்டு வந்த



போது, ரமேஷ் படுக்கையில் இல்லை. நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். சண்டைக்கு ஆயத்தம்போல் அவளுக்குப் பட்டது. அவள் ஒன்றும் பேசாமல் படுத்துக் கொண்டாள்.

"சாப்பிடலியா?" என்றான் ரமேஷ்- நிதானமான குரலில். அவளைப் பார்க்காமலேயே அவன் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

"பசிக்கலே."

"உனக்கு 'சைனீஸ் ஃபுட்' பிடிக்குமேன்னு வாங்கிண்டு வந்தேன்; இதுதான் நீ என் மேலே வச்சிருக்கற மதிப்பா?"

"சாப்பிடறதுக்கும், மதிப்புக்கும் என்ன சம்பந்தம் ரமேஷ்? ஃப்ரிஜ்லே வச்சிருக்கேன்; நாளைக்குச் சாப்பிடறேன்."

சிறிது நேரம் மௌனம். நந்திதா திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

"என்ன, ஷிகாகோவிலே பெரிய 'பார்ட்டி'யா?" என்று கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை.

"என்ன பேசாம இருக்கே?"

அவள் எழுந்து கட்டிலில் உட்கார்ந்தாள்.


"உனக்குத் தெரியும், அந்த செனட்டர் விஷயமா விசாரிக்கறதுக்கு நான் ஷிகாகோ போனேன்னு. 'பார்ட்டியா'ன்னு கேட்டா என்ன அர்த்தம்?"

"அப்போ இந்த வருஷம் 'புலிட்சர் ப்ரைஸ்' உனக்குத்தான்னு சொல்லு. எந்த செனட்டர் யாரோட போறான்னு உலகத்துக்கு உபயோகமான விஷயத்தைப் பத்தியெல்லாம் ஆராய்ச்சி பண்றே இல்லையா?" என்று கூறிவிட்டு அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"என்னோட சண்டை போடறதுன்னு பிடிவாதமாயிருக்கே. எனக்குக் களைப்பா இருக்கு, குட் நைட்" என்று கூறிவிட்டு, மறுபடியும் படுத்துக்கொண்டாள்.

ரமேஷ் எழுந்து, அவளருகில் வந்து உட்கார்ந்தான்.

"லுக் நந்து, உலகத்திலேயே பாதுகாப்பு மிகக் குறைவான நகரம் எது தெரியுமா? நியூயார்க்! நீ இப்படி நேரம் கழிச்சு வரும் போதெல்லாம், நான் வயத்திலே நெருப்பைக் கட்டிண்டிருக்கேன். டோன்ட் யூ அண்டர்



"என் மனைவி என்னை தெய்வமா மதிக்கிறா."

"தினமும் பூஜைன்னு சொல்லுங்க!"

- ஆர். ஆர். பூபதி

ஸ்டாண்ட்?"

"நாம் பயப்படறதுன்னு ஆரம்பிச்சா எல்லாத்துக்குந்தான் பயப்படணும். வேலைக்கே போக முடியாது..."

"சுட்...நீ எதுக்காக வேலைக்குப் போகணும்? நாம ரெண்டு பேருக்கும் சேர்த்து நான் சம்பாதிக்கிறேன்... கல்யாணம் ஆகி அஞ்சு வருஷமாச்சு, நீயோ குழந்தை வேண்டாம்னு பிடிவாதமா இருக்கே!"

"வேலைக்குப் போகாம வீட்டிலே உட்கார்ந்துண்டு, குழந்தையைப் பெத்துண்டு, எனக்குன்னு ஒரு அடையாளம் இல்லாம, சும்மா இருக்கணும்; அப்படித்தானே?"என்று கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள் நந்திதா.

" 'இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிஸம்'னு அங்கே இங்கென்னு இப்படி அலையறது எவ்வளவு பெரிய 'ரிஸ்க்'னு தெரியுமா உனக்கு? வீணா செத்துப் போறதா உன் அடையாளம்?" என்றான் ரமேஷ்.

" 'ரிஸ்க்'னு எல்லாரும் சும்மா இருந்துட்டா, அயோக்கியர்கள்தான் நாட்டை ஆளுவாங்க...."

"அவங்கதான் ஆள்றாங்க, சந்தேகம் என்ன? ஸ்தாபனத்தை எதிர்த்துப் போராடறதுங்கிறது வீண் வேலை..." என்று கூறிக் கொண்டே அவளுடைய தோளைப் பரிவுடன் தடவினான் ரமேஷ்.

அவள், அவனுடைய கையைத் தன் தோளிலிருந்து விலக்கினாள்.

"நீ என்ன சொன்னாலும் இந்த மாதிரி 'ஜர்னலிஸம்'தான் எனக்குப் பிடிச்சிருக்கு" என்றாள்.

ரமேஷ் சிறிது நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

"உனக்குப் பிடிச்சிருக்கிறதுக்கெல்லாம் நான் 'சரி'ன்னு சொல்றேன், இல்லியா? எனக்குப் பிடிச்சதுக்கு மட்டும் நீ பிடிவாதமா முடியாதுன்னு சொல்றியே?" என்றான் சில நிமிஷங்களுக்குப் பிறகு.

"உனக்குப் பிடிச்சது என்ன? நான் வேலைக்குப் போகக் கூடாது. அதானே?"

"அது இல்லே."


"பின்னே என்ன?"

"ஐ வாண்ட் அவர் சைல்ட்."

நந்திதா 'சடக்'கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

"உனக்கு இன்னிக்கு என்ன ஆச்சு?" என்றாள் அதிர்ச்சியுடன்.

"ஆகறதுக்கு என்ன இருக்கு இதிலே?



"பட்டிமன்றத் தலைப்பு ரொம்ப லேட்டஸ்ட்."

"என்ன அது...?"

"செல்போன் பில் அதிகம் கட்டுவது ஆண்களா...? பெண்களா...?"

- வசந்தரா குருமூர்த்தி

நான் உன்னோட புருஷன், நீ என்னோட பொண்டாட்டி. நமக்குக் குழந்தை பொறக்கிறது 'நார்மல்'தானே? 'ஷாக்' ஆனவ மாதிரி எதுக்குப் பேசறே?"

அவள் அவனையே பார்த்துக்கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள்.

"என்ன பாக்கறே?" என்றான்.

"ஓ.கே. உனக்குக் குழந்தை வேணும்கிறது ரொம்ப அவசியம்னா, ஒரு குழந்தையை நாம தத்து எடுத்துண்டா என்ன?"

ரமேஷ் அதிர்ச்சி அடைந்தான். "ஆர் யூ க்ரேஸி?" என்று கத்தினான்.

"வொய் ஷுட் ஐ பி க்ரேஸி? இப்போ ரொம்ப பேர் தத்துதான் எடுத்துக்கிறா. உலகத்திலே எத்தனை அனாதைக் குழந்தைகள் இருக்கு, தெரியுமா? அந்தக் குழந்தைகளுக்கு அப்பா, அம்மா வேண்டாமா? டோன்ட் தே டிஸர்வ்?" என்றாள் நந்திதா. ரமேஷ் கோபமாக எழுந்தான்.

போய் நாற்காலியில் உட்கார்ந்தான். அப்பொழுது நிலவிய மௌனச்சுமை இறுக்கமாக இருந்தது.

"நீ கல்யாணத்துக்கு முன்னாடியே சொல்லியிருக்கலாம்" என்றான் ரமேஷ்.

"என்னன்னு?" என்று கேட்டாள் நந்திதா.

"உனக்குக் குழந்தைப் பெத்துக்க இஷ்டமில்லேன்னு..."

"அப்போ என்ன பண்ணியிருப்பே?"

"நாம இப்போ இந்த மாதிரி சண்டை போட அவசியமே இருந்திருக்காது, இல்லையா?"

"நீயும் சொல்லியிருக்கலாமில்லையா— 'எனக்கு வேலைக்குப் போற பொண்டாட்டி வேண்டாம். வீட்டிலே இருந்திண்டு, எனக்குச் சமைச்சுப் போட்டுண்டு, சமத்தா பதினாறு குழந்தைகளைப் பெத்துத் தரத் தயாரா இருக்கிற பொண்டாட்டிதான் வேணும்'னு! ஏன் சொல்லலே?"

"குழந்தையே பெத்துக்க மாட்டேங்கிறது ஒரு 'மேஜர் டிஸிஷன்'. டெல் மீ, நந்து, எனக்கு என் குழந்தைதான் வேணும்னு இருக்கிற மாதிரி, உனக்கு உன் குழந்தைதான் வேணும்னு இல்லையா? இதுதான் இயற்கையான மனித சுபாவம். குழந்தையைப் பெத்துக்க முடியாதவங்க தத்து எடுத்துக்கலாம். வொய் ஷுட் வி?" என்று கேட்டான் ரமேஷ்.

"ரமேஷினுடைய 'ஜீன்ஸு'க்குத் தொடர்ச்சி இல்லாட்டா மனித வரலாறே

எல்லாத் தரப்புகளுக்கும்...

பிரபல தயாரிப்பு நிறுவனமான பிரமிட் சாய் மீரா தியேட்டர் லிமிடெட், தமிழ்நாட்டில் 150 அடுக்குத் திரையரங்குகளைத் திறக்க உத்தேசித்துள்ளது. உலகத் தரத்தில் மலேசியப் படங்களைத் தயாரிக்கவும் பிரமிட் நிறுவனம் முடிவெடுத்துள்ளது. இதற்காக மலேசியாவைச் சேர்ந்த ஆசியா இண்டெக்ரேடட் இண்டஸ்ட்ரீஸ் என்கிற நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளது. இதோடு நிற்கவில்லை... மும்பையைச் சேர்ந்த இன்ஃபினிட்டி ஃபிலிம் கம்ப்ளீஷன் சர்வீஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து படத் தயாரிப்பாளர்களுக்கு வங்கிகளிடமிருந்து நிதியுதவியினைப் பெற்றுத் தரவிருக்கிறது. நடப்பாண்டில் இருபத்தைந்து தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதுடன் மிக விரைவில் பத்துப் படங்க்ளுக்கான தொடக்க விழாவை முதல்வர் கலைஞர் தலைமையில் நடத்தவிருக்கிறது.

• நடராஜன், வேள்பாரி



"உலகத் தரம் வாய்ந்த நிகழ்ச்சிகளை நகரம், கிராமம் என்று இனம் பிரிக்காமல் எல்லாத் தரப்பு மக்களுக்கும் எடுத்துச் செல்வதுதான் எங்கள் நிறுவனத்தின் நோக்கம்" என்கிறார்கள் இதன் நிர்வாகிகளான நடராஜனும், வேள்பாரியும்.

மிக விரைவில் வெளிவரவுள்ள பிரகாஷ்ராஜின் 'மொழி' திரைப்படம், பிரமிட் சாய்மீராவின் உதவியோடு தயாராகி வருகிறது.

- தேவி

ஸ்தம்பித்துப் போயிடுமா?" என்றாள் அவள்.

திடீரென்று அவனுக்கு அசாத்திய கோபம் ஏற்பட்டது. அவள் தன்னைக் கிண்டல் செய்கிறாள் என்ற ஆத்திரம். அவன், அவள் அருகில் சென்று அவளுடைய தோள்களைப் பற்றி அவளை உலுக்கினான்.

"என்ன சொன்னே, என்ன சொன்னே? என்னைத் தூக்கி எறிஞ்சா பேசறே?" என்று உரத்த குரலில் கத்தினான்.

நந்திதா பயந்து போய்விட்டாள். அவன் இப்படி நடந்து கொள்வான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, கட்டிலிலிருந்து இறங்கி அறையைவிட்டு வெளியே போகத் தொடங்கினாள்.

"எங்கே போறே?" என்றான் அவன்.

அவள் பதில் சொல்லவில்லை.

"உனக்கு அவ்வளவு திமிரா?"

அவள் ஒன்றும் கூறாமல் இன்னொரு அறைக்குள் சென்றாள்.

அவள் செல்வதைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்துவிட்டு அவன் நாற்காலியில் உட்கார்ந்து குனிந்து தன் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான்.

அந்த இன்னொரு அறையிலிருந்த கட்டிலில் அவள் படுத்துக் கொண்டாள்.

அவனுக்குள் ஏதாவது பூதம் புகுந்து கொண்டு விட்டதா, ஏன் இப்படி ஆவேசத்துடன் கத்துகிறான் என்று அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவள் 'ஜீன்ஸை'ப் பற்றிச் சொன்னது, அவன் ஆண்மைக்குச் சவால் என்று நினைக்கிறானோ என்று அவளுக்குப் பட்டது. அவள் எப்பொழுது, எவ்வளவு நேரம் தூங்கினாள் என்று அவளுக்கே தெரியாது.

திடீரென்று விழிப்பு வந்தது.

கட்டிலில் யாரோ உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது.

எழுந்து உட்கார்ந்தாள்.

"பயந்து போயிட்டியா?" என்றான் ரமேஷ்.

"உனக்கு என்ன வேணும்?" என்றாள் நந்திதா.

"நீ" என்றான் அவன்.

"கெட் அவுட்" என்று அவள் கோபத்தில் கத்தினாள். மிகவும் களைப்படைந்திருந்த அவனால் அதற்கு மேல் அவளுடன் போராட முடியவில்லை. அவன் எழுந்து போன பிறகு அவளால் அழத்தான் முடிந்தது.

அவள் குளித்துவிட்டுக் கீழே வந்தாள்.

ரமேஷ் 'ப்ரேக் ஃபாஸ்ட்' சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"ஹலோ நந்து, குட் மார்னிங். உனக்கும் டோஸ்ட் பண்ணியிருக்கேன். டோஸ்டர்லேந்து எடுத்துக்கோ, 'லேட்' ஆயிடுத்துல்லே?" என்றான்.

அவள் பதில் கூறவில்லை.


மௌனமாகக் காபியை மட்டும் எடுத்துக் கொண்டு அவன் எதிரே உட்கார்ந்தாள்.

"நேத்து ராத்திரி அப்படி நடந்ததுக்கு, ஐ ஆம் ஸாரி" என்றான்.

"தொடர்ந்து நாம புருஷன் - பொண்டாட்டி விளையாட்டு விளையாட வேண்டாம்னு எனக்குத் தோணறது. நீ இப்படி ஒரு மிருகம் மாதிரி நடந்துப்பேன்னு நான் எதிர்பாக்கலே. நாம விலகிக்கிறதுதான் நல்லது" என்றாள் நந்திதா.

"என்ன மிருகம் மாதிரி! நமக்குக் கல்யாணம் ஆயிடுத்து, நந்து."

"நான் அதைப் பத்திப் பேச விரும்பலே. விலகிக்கிறதுதான் ரெண்டு பேருக்குமே நல்லது. நன்னா யோசிச்சுத்தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்திருக்கேன்" என்றாள்



"ஃபேமிலி ரூம்ல என்னய்யா சத்தம்?"

"ஃபேமிலி ரோஸ்ட்ல பாகம் பிரிக்கறதுல தகராறு நடக்குது முதலாளி!"

- லீலாஜி

மீண்டும் குணால்!

குணாலை நினைவிருக்கிறதா? 'காதலர் தினம்', 'புன்னகை தேசம்', 'பார்வை ஒன்றே போதுமே' போன்ற படங்கள் மூலம் பரபரப்பாகப் பேசப்பட்டவர், திடீரென்று காணாமல் போய்விட்டார். இப்போது 'நண்பனின் காதலி' படத்தின் மூலம் மீண்டும் திரும்பி வந்துள்ளார்.

"நல்ல கதைக்காகக் காத்திருந்தேன். 'நண்பனின் காதலி' நான் எதிர்பார்த்த எல்லா அம்சங்களும் நிறைஞ்ச கதை. உடனே ஒப்புக்கிட்டேன். படம் நல்லா வந்திருக்கிறதால என் சம்பள பாக்கியைக்கூட நான் வேண்டாம்னுட்டேன்னா பார்த்துக்கோங்க" என்கிறார் குணால். இவரது நண்பராக நடிக்கிறார் விக்ரமாதித்யா.



ஒரு சிறுவன் மீது தவறுதலாக காரை மோதி விடும் நடிகர் வினுசக்ரவர்த்தியை அடிக்க வேண்டிய காட்சியில் விக்ரமாதித்யா நிஜமாகவே அடித்துவிட, இருவரும் கட்டிப் புரண்டு சண்டை போட்டிருக்கின்றனர். இதனால் பாதி நாள் ஷூட்டிங் ரத்தாகி விட, படத்தின் டைரக்டர் கிச்சா தலையிட்டு இருவரையும் சமாதானப்படுத்தியிருக்கிறார். குணால், விக்ரமாதித்யா இருவருக்கும் நாயகி ஷிவானி சிங் தன்னைத்தான் காதலிக்க வேண்டும் என்று படத்தில் போட்டி. நிஜத்திலும் இப் போட்டி தொடர்ந்ததுதான் சுவாரஸ்யம்.

- அனு

நந்திதா.

திடீரென்று ரமேஷ் அவளுடைய தோள்களை இறுகப் பற்றி, "ப்ளீஸ், நந்து, ஐ ஆம் ஸாரி ஃபர் வாட் ஹாப்பெண்ட் லாஸ்ட் நைட். ஐ லவ் யூ. ஐ லவ் யூ. இதை நீ புரிஞ்சுக்கவே மாட்டியா?" என்று அழ மாட்டாத குரலில் இறைஞ்சினான்.

டெலிஃபோன் ஒலித்தது. சில விநாடிகள் அதை உற்றுப் பார்த்துவிட்டு, பிறகு அதை எடுக்கப் போனான் ரமேஷ்.

"ஓ, நீங்களா? எப்படி இருக்கீங்க? ஓ! அப்படியா? 'எ குட் டிஸிஷன்'! நான் எல்லா ஏற்பாடும் செய்யறேன். நந்து நிச்சயமா சந்தோஷப்படுவா உங்க முடிவுக்கு. நந்து பாத்ரூம்லே இருக்கா.. வந்தவுடனே ஃபோன் பண்ணச் சொல்றேன்" என்றான் ரமேஷ்.

"எதுக்குப் பொய் சொன்னே? யாரு, என்னோட அப்பாதானே ஃபோன் பண்ணது?" என்றாள் நந்திதா கோபத்துடன்.

"கோபப்படாதே, உன்னோட அப்பா தான்! நான் சொல்றத முழுசாக் கேளு... உன்னோட அப்பா - அம்மாவோட கல்யாணப் பொன்விழாவை இங்கே வந்து நம்மனோட கொண்டாடலாம்னுருக்காளாம்... புரியறதா, ஐம்பதாவது வருஷக் கல்யாண நாள்! நாம இங்கே கல்யாணமாகி அந்த வருஷத்திலே பிரியப் போறோம்னு சொல்லச் சொல்றியா! மை காட்! என்ன 'ஐர்னி'!" என்றான் ரமேஷ்.

நந்திதா இந்தச் செய்தியைக் கேட்டுச் சற்றுத் திடுக்கிட்டாள்.

அவர்களை இப்பொழுது 'வர வேண்டாம்' என்று சொல்ல முடியுமா? ஐம்பது வருஷங்கள் அவர்கள் ஒன்றாக இருந்திருக்கிறார்கள்! பல சமயங்களில் பல விஷயங்களில் அவர்களுக்கிடையே வாக்குவாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று அவளுக்குத் தெரியாமலில்லை. அவர்கள் எப்படிச் சமாளித்தார்கள்?

"நந்து, ப்ளீஸ், அவர்கள் வந்துட்டுப் போகிற வரைக்கும் நமக்குள்ளே இருக்கிற பிரச்னையை ஆறப் போடுவோம். அப்புறம் இதைப் பத்தி யோசிப்போம்... ஓ.கே?" என்றான் ரமேஷ்.

நந்திதா பதில் கூறாமல் காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். ●

எந்த வாரம் இந்த வாரம்... 19

தஞ்சைப் பகுதியில் நிலச் சொந்தக்காரர்களையும் குத்தகைக்காரர்களையும் மேல்வாரம் குடிவாரம் என்று இன்றும் சொல்கிறார்கள். திருப்பாணாழ்வாரின் இந்தப் பாடலில் 'வாரம்' வருகிறது. விளக்கம் நான் கேட்டதில்லை. முழுசாக இரண்டரை மணி நேரம் ஒரே ஒரு பாசுரம்!

உத்யோகக் கட்டாயங்களினால் நான் என் பெற்றோரைப் பிரிந்து பல ஊர்களுக்குச் சென்று அலைந்து திரிந்து ஸ்ரீரங்கம் வந்து அவசரத்தில் திரும்பும்போது 'ஸாரிப்பா! உன்னோட அதிகம் பேச முடியல' என்று மன்னிப்புக் கேட்பேன். அதற்கு அவர் 'பரவாயில்லை, உனக்கும் எனக்கும் உள்ள உறவு 'ஒழிக்க ஒழியாது' என்பார். இந்தச் சொற்றொடர் திருப்பாவை 28ஆம் பாசுரத்தில் வருகிறது.

"கறவைகள் பின்சென்று கானம்
சேர்ந்து (உ)ண்போம்
அறிவொன்றும் இல்லாத
ஆய்க்குலத்து (உ)ன்தன்னை
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாம்
உடையோம்
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா!
உன் தன்னோ(டு)
உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம்
அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீ தாராய் பறை ஏலோர்
எம்பாவாய். (திருப்பாவை, 28)

(கறவை - பசு, சிறுபேர் - செல்லப்பெயர்)

பசுக்களின் பின்னால் போய்க் காட்டை அடைந்து கட்டுச்சோறு தின்பவர்கள் நாங்கள். அதிக அறிவில்லாத எங்கள் இடைக்குலத்தில் நீ வந்து பிறக்கும் புண்ணியம் எங்களுக்குக் கிடைத்தது. குறையற்றவனே! கோவிந்தனே! உன்னோடு எங்கள் உறவு ஒழித்தாலும் ஒழியாதது. அறியாத சிறுமிகள் உன்னை அன்பினால் 'நீ', 'வா' என்றெல்லாம் அழைக்கிறோம். கோபிக்காதே! எங்களுக்கு வேண்டியதைத் தருவாய்.

கல்வியற்றவர்களும் பக்தியால் அவனுடைய அருளைப் பெறலாம். பகவானுக்கும் ஆத்மாக்களுக்கும் உள்ள தொடர்பு ஆரம்பமற்றது; எப்போதும் இருப்பது. அதை பகவானாலும் ஆத்மாக்களாலும் தனியாகவோ சேர்ந்தோ ஒழிக்க முடியாது. 'என்று நீ அன்று நான்' என்று தாயுமானவர் சொல்



வதுபோல... உண்மையான உறவுகள் அனைத்துமே ஒழிக்க ஒழியாதவை. கணவன்-மனைவி, அப்பா-பிள்ளை, தாய்-மகள், நண்பர்கள்-காதலர்கள் - ஏன், எதிரிகளேகூட ஒழிக்க முடியாது உறவுகள்தாம்!

பாரமாய பழவினை பற்றறுத்து
என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி
யென்னுள்புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்
கொலறியேனரங்கத்தம்மான் திரு
ஆரமார்பதன்றோ அடியேனை
யாட்கொண்டதே

'கனமயாக நின்ற பழைய பாவங்களின் சம்பந்தத்தைத் தொலைத்து என்னைத் தன்னிடத்தில் அன்புடையவனாகப் பண்ணி வைத்தான். அதுமட்டுமல்லாமல் என் இதயத்துக்குள் நுழைந்துவிட்டான். உக்ரமான தவம் ஏதாவது நான் முற்பிறவியில் செய்திருக்க வேண்டும், தெரியவில்லை. திருவரங்கனின் மார்பன்றோ என்னை ஆட்கொண்டது.'

திருப்பாணாழ்வார் திவ்யப் பிரபந்தத்தில் பத்துப் பாடல்களைத்தாம் பாடியுள்ளார். பத்தும் முத்துக்கள்.

இந்த உருக்கமான பாடலில் உள்ள 'வாரம்' என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. 'என்னைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுவிட்டான். பகவான் என் எஜமானன்; நான் அவரிடம் வாடகைக்கு இருக்கிறேன்' என்கிற அர்த்தம், கவிதை நயமும் ஆழமும் மிக்கது. 'பங்காகப் பற்றும்படி செய்தான்' என்கிற பொருளும் வாரம் என்பதற்கு உண்டு. 'வாரமாக ஓதுவார்கள்' என்றால் நிஷ்டையாக நியமமாக ஓதுகிறவர்கள். 'வாரம் நடப்பது' என்பது கோயிலுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டு போவது. 'வாரமோதல்' என்பது உருச் சொல்வது. Litany. நியமமாகச் சொல்லுதல். இப்படிப் பல படிமங்கள் கொண்ட சொல்லில் திருப்பாணாழ்வார் சொல்வது எந்த வாரம் என்று நீங்களே தீர்மானிக்கலாம்.

'வாரம் ஒரு பாசுரம்' என்ற ஒரே ஒரு பிரயோகத்தில் மட்டும் இன்று இந்தச் சொல் முடங்கிக் கிடக்கிறது.

(படிக்கலாம்)

சுஜாதா

வில்லங்க வீராங்கனை!

விண்வெளி வீராங்கனைகள் என்றாலே வாலன்டினா, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் போன்றவர்கள்தான் நினைவுக்கு வர வேண்டுமா? இனி லிசா மேரியும் நினைவுக்கு வருவார்; ஆனால் வேறு மாதிரி காரணத்துக்காக.

• லிசா மேரி



அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாஸா'வைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை லிசா மேரி நோவக் மீது கொலை முயற்சிக்காக வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. மற்றொரு விண்வெளி வீராங்கனை கோலின் ஷிப்மன் என்கிற பெண்மணியைக் கொலை செய்ய முயன்றதாக வழக்கு!

அதுவும் எப்படி? ஃப்ளோரிடாவிலிருந்து 900 மைல் தொலைவில் உள்ள டெக்ஸாஸுக்குக் காரில் வந்து இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் (வழியில் இயற்கை அழைப்புகளுக்கு வண்டியை நிறுத்தக் கூடாது என்று டயபர் கட்டிக் கொண்டாராம். அந்த அளவுக்கு வெறி!). தம் எதிரியைப் பார்த்ததும் முதலில் மிளகுப் பொடியைத் தூவி முதல் தாக்குதலை நடத்தி இருக்கிறார்.

அதற்குள் காவல்துறையினர் வந்ததால் கோலின் உயிர் தப்பினார்.

லிசா மேரியின் உடைமைகளைப் பரிசோதித்ததில் அவர் கைப்பையில் ஒரு கத்தி, ஒரு சிறிய கைத்துப்பாக்கி ஆகியவையும் இருந்தது தெரிய வந்துள்ளது.


எதற்காக இந்த வெறி? கமாண்டர் வில்லியம் காரணமாகத்தான்! வில்லியமும் லிசா மேரியும் சமீபத்தில் விவாகரத்து செய்து கொண்டனர். குழந்தைகள் வில்லியம் வசம்தான் உள்ளனர்.

இந்த நிலையில் கோலின், வில்லியம் இருவருக்குமிடையே காதல் ஏற்பட்டதாக செய்திகள் கசிய, ஆத்திரத்தில் இந்தக் கொலை முயற்சி. விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

விண்வெளி வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் மனப்பயிற்சி வகுப்புகள் தேவை என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இதைத் தொடர்ந்து பல்வேறு விண்வெளி வீரர்களின் குடும்பங்களை மீடியா முற்றுகையிட்டுள்ளது - புதிய பரபரப்புச் செய்திகள் கிடைக்குமா என்று நோண்டிப் பார்க்க!

- ஜி.எஸ்.எஸ்.

சொற்களின் குப்பைத் தொட்டி!



இறுதியில்
சொற்களின் குப்பைத் தொட்டியாய்
உருமாறுகிறேனோ என்று
அச்சமாயிருக்கிறது
ஏதோ கோபத்தில் வீசுகிறீர்களென்று
குனிந்து பொறுக்கி
வீசியபடியிருந்தேன்

அதிகாரம் உங்கள் கையிலிருக்கிற
கட்டாயத்தில்
எறிந்த குப்பைகளை
அள்ளிக் கொட்டிவிடுகிறேன்
நண்பர்களெனில் சிலவற்றை
சகித்துக்கொள்ள வேண்டுமென்கிற
விதிமுறைகளுக்கு ஒப்ப
எதிர்கொள்ளும் குப்பைகளை
உடனுக்குடன் தீவைத்து விடுகிறேன்

கோபம் மகிழ்ச்சி தோல்வி வெற்றி
ஏதாவதொன்று அத்துமீறுகிறது
எனக்கெதிரான ஒரு வார்த்தையாக

எனினும் என்னால்
சொல்லாமல் இருக்க முடியவில்லை
உங்கள் சொல்லொன்று
இடைவிடாமல் என் விழிகளுக்குள்
நெருடிக் கொண்டிருப்பதையும்
இதயத்திலிருந்து வடியும்
இரத்தத்தை
இந்தக் கவிதை
ஒற்றியெடுக்கிறது என்பதையும்


க.அம்சப்ரியா

அமரர் கல்கி



விவாதம் ஏன்?





விவாதம் ஏன் ஏற்படுகிறது? அபிப்ராய பேதத்தினால். "சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் வெயில் கடுமை" என்று நான் அபிப்ராயப் படுகிறேன். "ஆமாம், வெயில் கடுமை தான்" என்று நீரும் அபிப்ராயப்படுகிறீர். நமக்குள் விவாதம் இல்லை. "இந்தக் கட்டுரை நன்றாயிருக்கிறது" என்று நான் அபிப்ராயப்படுகிறேன். "நன்றாயில்லை" என்று நீர் அபிப்ராயப்படுகிறீர். நமக்குள் விவாதம் எழுகின்றது. ஆதலின், விவாதத்துக்கு அடிப்படை அபிப்ராய பேதம் என்று ஏற்படுகிறது.

இரண்டு பேர் சண்டை போட்டால், அவர்கள் எதற்காகச் சண்டை பிடிக்கிறார்களோ, அது சண்டை பிடிக்கும்படியான யோக்யதை உள்ளதா என்று பார்க்க வேண்டும். ஆறறிவுள்ள மனிதனுக்கும், ஐந்தே அறிவுள்ள பிராணிகளுக்கும் வித்தியாசம் இதுதான். ஒரு நாய், ஒரு தெருவில் வாசம் செய்கின்றது. இன்னொரு நாய் தனது தேச யாத்திரையினிடையே அந்தத் தெருவின் வழியே போக நேர்கின்றது. "என் தெருவில் நீ எப்படி வரலாம்?" என்று ஊர் நாய் கேட்கிறது. "உன் அப்பன் வீட்டுத் தெருவோ? பொதுச் சாலையில் போவதற்கு நீ என்ன கேட்கிறது?" என்று அசலூர் நாய் சொல்லுகிறது. இதிலிருந்து அவற்றுக்குள் விவாதம் எழுகிறது. "அட முட்டாள் நாய்களா!" என்று நாம் சொல்லுவோம்.

'எந்த நாய் தெருவோடு போனால் எனக்கென்ன?' என்று ஊர் நாய் சும்மா இருந்திருக்கலாம். 'உன் தெருவும் ஆச்சு, உன் மூஞ்சியும் ஆச்சு' என்று அயலூர் நாய் வேறு வழியாய்ப் போயிருக்கலாம்.


ஆகவே, ஆறறிவுடைய மனிதர்களாகிய நாம் விவாதம் தொடங்குவதற்கு முன்னால், விவாதிப்பதற்குரிய விஷயம் தக்க பெறுமானமுள்ளதா என்று பார்த்தல் அவசியம். விவாதம் என்பது அபிப்ராயத்துக்காகத்தான் எழுகின்றது என்று முன்னமே பார்த்தோம். எனவே, அபிப்ராயத்தின் பெறுமானம் என்னவென்பதை ஆராய வேண்டும். இது விஷயமாக நான் தீவிர ஆராய்ச்சி நடத்தி, மனிதர்களுடைய அபிப்ராயத்தின் பெறுமானம் என்னவென்பதை ஐயந்திரிபறக் கண்டுபிடித்திருக்கிறேன்.

- 'கல்கி களஞ்சியம்'
வானதி வெளியீடு

அழுகை... ஆனந்தம்... அட்டகாசம்!

கீழ்ப்பாக்கம் சிதா கிங்ஸ்டன் பள்ளிக் கூடத்துக்கு ஜாலியாக போய்க் கொண்டிருந்த எனக்கு, அந்த மகிழ்ச்சி வெகு நாட்கள் நீடிக்கவில்லை. காரணம், நாங்கள் கீழ்ப்பாக்கத்திலிருந்து தி.நகருக்கு வீடு மாறிவிட்டோம். அந்த வருட பரீட்சை முடிந்த கடைசி நாளன்று, 'அடுத்த வருடம் பள்ளிக்கூடம் திறக்கிறபோது இப்போதுள்ள என் நண்பர்களைச் சந்திக்க முடியாதே' என்று நினைத்தபோது அழுகையாக வந்தது. தி.நகரில் எங்கள் வீட்டுக்கு அருகிலேயே இருந்த ஆதர்ஷ் வித்யாலயாவில் என்னைச் சேர்த்து விட்டார்கள்.

நான் ஒன்றும் புத்திசாலியான பையன் இல்லை. ஏதோ படித்து பாஸ் பண்ணி விடுவேன். எப்போதும் கலகலவென்று பேசி, மற்றவர்களைக் கலாய்த்துக் கொண்டிருப்பேன். கிரிக்கெட் வெறியன். பள்ளிக் கூடத்துக்கு புத்தகங்களை எடுத்துக் கொண்டு போகிறேனோ இல்லையோ, கிரிக்கெட் பந்தும் பேட்டும் எடுத்துக் கொண்டு போய்விடுவேன். ஒரு பீரியட் முடிந்து அடுத்த பீரியட் ஆசிரியை வருவதற்குள் நாலைந்து நண்பர்களுடன் போய் கொஞ்ச நேரம் கிரிக்கெட் ஆடிவிட்டு வந்துவிடுவேன். யாராவது ஒரு டீச்சர் லீவு என்றால், அது எங்களுக்குக் காலையிலேயே தெரிந்துவிடும். அவ்வளவுதான், காலையிலிருந்தே அந்த பீரியடுக்காகக் காத்துக் கொண்டிருப்போம். அந்த பீரியட் வந்ததும் குஷியாய் விளையாடப் போய்விடுவோம். 'ஏண்டா சனி, ஞாயிறு லீவு வருது' என்று நினைத்துக் கொள்வோம். இரண்டு நாட்கள் கிரிக்கெட் விளையாட முடியாதே!



லஞ்ச் நேரத்திலும் நாங்கள் செய்யாத அட்டகாசம் இல்லை. வகுப்பில் போடப்பட்டிருக்கும் பெஞ்ச், டெஸ்க்குகள் மீது ஏறி தடதடவென்று ஓடுவோம்; திடீரென்று குதிப்போம். ஒரு நாள் அப்படி

டெஸ்க் மீது ஏறி ஓடுகிறபோது, அங்கே உட்கார்ந்து சாப்பிடுவதற்குத் தயாராக இருந்த சில மாணவிகளுடைய லஞ்ச் டப்பாக்கள் கீழே விழுந்து உருள, ஏக கலாட்டாகிவிட்டது. உடனே நாங்கள் எல்லோரும் ஆளுக்கு இரண்டு, மூன்று ரூபாய் போட்டு, ஸ்கூல் கேன்டீனிலிருந்து பிரட் - சன்னா வாங்கிக்கொண்டு வந்து அந்த மாணவிகளிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னோம். அவர்களுக்கோ எங்கள் மீது பயங்கர கோபம். நாங்கள் வாங்கிக் கொடுத்ததைச் சாப்பிட மறுத்து விட்டார்கள். 'வேணும்னா போங்க, எங்களுக்குப் பசிக்கிறது' என்று சொல்லி அவற்றை நாங்களே சாப்பிட்டு விட்டோம்.

வகுப்புக்கு வெளியில் நிறுத்துவது, பெஞ்ச் மேல் ஏறி நிற்க வைப்பது என்று மாணவச் சமுதாயத்தைக் கண்டிக்க என்னென்ன உபாயங்களை ஆசிரியர்கள் கடைப்பிடிப்பார்களோ, அனைத்தையும் நான் அனுபவித்திருக்கிறேன். 'உனக்குப் படிப்பில் அக்கறை இல்லை. ஆனால் மூளை இருக்கு. கொஞ்சம் படிப்பில் கவனம் செலுத்தினால், உன்னால் நல்ல மார்க் வாங்க முடியும்' என்று சில டீச்சர்கள் என்னிடம் அட்வைஸ் செய்வார்கள். ஆனால், அதெல்லாம் என் மண்டையில் ஏறவே ஏறாது.

என் கிரிக்கெட் ஆர்வத்தைப் பார்த்த உடற்பயிற்சி ஆசிரியர், அந்த ஆண்டு பஞ்சாப் அசோசியேஷன் என்ற அமைப்பின் கீழ் சென்னையில் நடத்தப்பட்டு வந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து



7

ஆக்ஷன் ஸ்டார் ஜீவா

கொள்ள என் பெயரைக் கொடுத்து விட்டார். இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் நான் கலந்துகொண்டேன். ஆனால், எனக்குப் பரிசு ஏதும் கிடைக்க வில்லை. ஏழாம் வகுப்புப் படிக்கும்போது மறுபடியும் நான் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டேன். முதல் சுற்றில் ஜெயித்தேன். ஆனால் இறுதிச் சுற்றுக்குப் போனபோது, என்னால் வெற்றிபெற முடியவில்லை. நானூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கை யில்கூட மாணவர்கள் பங்கேற்க முன்வர வில்லை. எனவே என்னை நானூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ளும்படி உடற்பயிற்சி ஆசிரியர் கூறியபோது, என்னால் அதை மீற முடிய வில்லை.



ஓடுவதற்குத் தயாராகப் பந்தய டிராக்கில் காத்துக் கொண்டிருந்தேன். ஆனால், மனசு என்னவோ 'இருநூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்திலேயே ஜெயிக்க முடியவில்லையே... இவ்வளவு தூரம் நம்மால் ஓட முடியுமா?' என்று நினைத் தது. என் அருகில் நின்று கொண்டிருந் தவர் 'தம்பி! துப்பாக்கிச் சத்தம் உனக்குக் கேட்கலையா? எல்லாரும் ஓடறாங்க பாரு! நீயும் ஓடு!' என்றார் திடீரென்று. அப் போதுதான் எல்லோரும் ஓடிக்கொண்டி ருப்பதை கவனித்தேன். உடனே மற்ற மாணவர்களைப் பின் தொடர்ந்து ஓட ஆரம்பித்தேன். முதல் சுற்று, இரண்டா வது, மூன்றாவது சுற்றுகளின்போது மடமடவென்று நிறைய மாணவர்களை ஓரம் கட்டிவிட்டேன். எனக்குள்ளே ஆனந்தம் பிறந்தது. இன்னும் வேகம் எடுத்தேன். எப்படியாவது ஜெயித்தே தீருவது என்ற வெறியுடன் ஓடினேன். கடைசி நிமிடத்தில் எனக்கு முன்னால், பந்தயத்தில் மூன்றாவதாக ஓடிக்கொண்டி ருந்த மாணவனைச் சட்டென்று ஓவர்டேக் செய்து, நான் மூன்றாவது இடத்தைப் பிடித்தேன். யாரும் எதிர் பாராது கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட சம்பவம் இது. ஆனால், ஓட்டப்பந்தயம் முடியுமிடத்தில் வெற்றி பெறும் மாணவர்களைக் கண்டறிவதற் காக நிறுத்தப்பட்டிருந்தவர்களில் ஒருவர், என்னைக் கவனிக்காமல், நான் ஓவர்டேக் செய்த மாணவனை மூன்றாவது இடம் பெற்றுவிட்டதாகப் பதிவு செய்துவிட் டார். நான் தைரியத்துடன் 'நான்தான் சார் மூன்றாவது வந்தேன்! எனக்குத்தான் பரிசு தர வேண்டும்' என்றேன். அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'சார்! சார்!' என்று கெஞ்சினேன். ஓட்டப் பந்தயத்தைப் பார்க்கக் கூடியிருந்த மாணவ, மாணவிகள் மத்தியில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. எனக்குத் துக்கம் தாங்கவில்லை. அழ ஆரம்பித்தேன்.

(பேசுவேன்)

அருள்வாக்கு

சலனமும் சப்தமும்

சப்தமும் அசைவும் சேர்ந்து சேர்ந்து, ஒன்றாகவே உண்டாகின்றன. இப்படி உண்டான அப்புறம் அந்த அசைவுகளிலிருந்து ஒரு ஸ்தூலமான வஸ்து அல்லது மனோபாவம் உண்டாகிறது. ஆகக்கூடி, சப்தத்திலிருந்தே



சிருஷ்டி ஏற்படுகிறது. வழி வழி வந்த இந்தத் தத்துவம் விஞ்ஞான ரீதியான பகுத்தறிவுப்படியும்கூட சரியானதுதான் என்று தெரிகிறது.

சிருஷ்டி, அதிலே நடக்கிற பல காரியங்கள், எண்ணங்கள் ஆகியவற்றின் மூலமான சப்தங்கள் ஆகாசத்தில் அப்படியே நிறைந்துதான் இருக்கின்றன. நாம் கையைத் தட்டினால் ஒரு சத்தம் உண்டாகிறது என்றால் அது என்ன ஆகிறது? அது அப்படியே ஆகாசத்தில் தான் தங்கி விடுகிறது. நல்ல காரியங்கள், கெட்ட காரியங்கள் எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு சலனம், சப்தம் இருக்கிறது. இந்த சப்தத்தை உண்டாக்கிவிட்டால், அந்த நல்லது அல்லது கெட்டதும் வந்துதான் ஆகவேண்டும். நல்லெண்ணங்கள் ஜனங்களுக்கு உண்டாகின்றன என்றால் அப்படி உண்டாக்குகிற சலனங்கள் இருக்க வேண்டும்; அவற்றுக்கான சப்தங்கள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சப்தங்களை நாம் உண்டாக்க முடியுமானால், லோகத்தில் ஜனங்களுக்கு நல்ல எண்ணங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். ஜனங்களுக்கு உயர்ந்த எண்ணங்கள் இருப்பதைவிட லோகத்துக்குப் பெரிய க்ஷேமம் என்ன இருக்கிறது? அப்படி எண்ணுவதற்கு அவர்களைத் தூண்டுகிற சக்தியைப் பெற்ற சப்தங்கள்தாம் வேத மந்திரங்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்




அன்று 'எனக்கு 20 உனக்கு 18'ல் துக்கடா கதாபாத்திரத்தில் நடித்த ஸ்ரேயா, இன்று ரஜினியின் ஹீரோயின். ஒரே வருடத்தில் உச்ச நட்சத்திர அந்தஸ்து. இப்போது ரஜினியுடன் டூயட் எல்லாம் பாடி முடித்துவிட்ட ஸ்ரேயா, அடுத்து 'அழகிய தமிழ் மகன்' படத்துக்காக விஜய்யுடன் கைகோக்கிறார்.

இப்போ கிடைச்சிருக்கிற புகழைப் பார்க்கும்போது, பல வருடங்களுக்கு முன்பு *'எனக்கு 20 உனக்கு 18'ல அவனோ சின்ன ரோல்ல நடிச்சிருக்கணுமா?*

"இதுல வருத்தப்பட ஒண்ணுமே இல்லை. ஆரம்பத்திலேயே எனக்கு அதுல அவ்வளவா ஸ்கோப் இல்லைன்னு தெரியும். இருந்தாலும் ஏ.ஆர்.ரஹ்மான் பாட்டுல நான் நடிச்சே ஆகணும்னுதான் பண்ணேன்."

கிளாமர் நடிகையாவே காலம் தள்ளப் போறீங்களா?

"சினிமாவுல கமர்ஷியலுக்காக ஹீரோயினை கிளாமரா காட்டுறது சகஜம்தானே. ஹீரோவுக்கு முக்கியத்துவம் இருக்கிற படங்கள்ல எங்களுக்கும் வாய்ப்புகள் குறைவாத்தானே கிடைக்குது. அதேசமயம் எனக்கும் நந்திதாதாஸ் மாதிரியான அர்த்தமுள்ள



படங்கள் செய்ய ஆசைதான். பார்க்கலாம்; யாருக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கப்போகுதோ!"

ஏன் ஹிந்தியில நடிக்க முயற்சி செய்யலை?

"அடுத்து அங்கதான் பெருசா லாஞ்ச் ஆகப் போறேன். அதுக்கான வேலைகள் நடந்துட்டு இருக்கு. கண்டிப்பா தமிழ், தெலுங்குல நடிப்பதோடு என் சினிமா கேரியரை முடிச்சுக்க மாட்டேன். இந்தியா முழுக்க நான் புகழ் பெறாம விடமாட்டேன்."

'தெலுங்கு ஹீரோயின்' என்கிற அடையாளத்தை எப்போ கழட்டி எறியப் போறீங்க?

"கூடிய விரைவுல. 'மழை' படத்துல வந்த 'நீ வரும் போது' பாட்டுக்காகவே எனக்கு தமிழ்நாடு முழுக்க ஏராளமான ரசிகர்கள் கிடைச்சிருக்காங்க. இங்கேதான் பல சினிமா ஜாம்பவான்கள் இருக்காங்க. ரஜினி, ஷங்கர், கே.வி.ஆனந்த், ரஹ்மான் டீம்ல நடிக்க எத்தனை பேருக்குக் கொடுத்து வைச்சிருக்கு! இதுக் கெல்லாம் காரணம் என்மேல அன்பு காட்டின ரசிகர்கள்தான். அதனால் என் தனி கவனம் எல்லாம் தமிழ்ப் படங்கள்லதான்."

கல்யாணத்துக்குப் பிறகு நீங்களும் நடிக்க மாட்டீங்களா?

"ஏன் நான் நடிக்காம இருக்கணும்? பேரப்பிள்ளை களைப் பெத்தெடுத்த பிறகும்கூட கண்டிப்பா நடிப்பேன். அதுக்குச் சம்மதம் தர்றவர்தான் எனக்குக் கணவரா வர முடியும். இன்று ஆண்களும் மாறிட்டாங்க. தன் மனைவி நடிகையா இருக்கறது பலருக்கும் ஒரு பிரச்னையாவே இல்லை. நடிகைகளும் சினிமாவை யாருக்காகவும் விட்டுக்கொடுக்காம இருக்காங்க. கஜோல், கரிஷ்மா கபூர் இதுக்கு ஒரு நல்ல உதாரணம்."

ரஜினி..?

"வாழ்க்கையில முன்னேறணுமா, முதல்ல நாம கத்துக்க வேண்டியது தன்னடக்கம்தான் என்பதை அவர்கிட்டே பழகும்போது தெரிஞ்சுக்க முடிஞ்சுது. இன்னைக்கு தமிழ்நாடே சிவாஜியை ஆவலோட எதிர்பார்க்கிறதைப் பார்க்கும்போது அவரோட பவர் எந்த அளவுக்குன்னு தெரியுது."

நீங்க சினிமா விழாக்களுக்குக் கவர்ச்சியா உடை அணிஞ்சு வர்றது சர்ச்சைக்குள்ளாகுதே?

"எனக்குப் பிடிச்ச உடையில நான் வர்றேன். இதுல என்ன தப்பு? உடம்பு முழுக்க போர்த்தி வந்தாத்தான் நல்ல பொண்ணுன்னு சொல்வீங்களா! ஒரு சினிமா விழாவுக்கு எப்படி உடை அணியணுமோ அதைத்தான் அணிஞ்சேன். நாளைக்கே இன்னொரு விழாவுக்கு நான் சேலைதான் கட்டணும்னா அதையும் செய்வேன். மத்தவங்க கமெண்ட் கொடுக்கறதைப் பத்தி எனக்குக் கவலையில்லை."

\- ச.ந.கண்ணன்



ராசிபலன்



18.2.2007 முதல் 24.2.2007 வரை

தஞ்சை பரத்வாஜ்

மேஷம் : அற்புதமான வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். திருமண காரியம் கைகூடும். புதிய தொழில் முயற்சி கைகூடும். குரு / ராகு / கேது / சனி வழிபாடு செய்து வரவும்.

ரிஷபம் : சுபக் காரியம் கைகூடும் வாரம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ஸ்திர சொத்துகள் வாங்க நேரிடும். கல்வி வளம் மேலோங்கும். நீண்ட தூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படும். குழந்தை பாக்கியம் கிட்டும். ராகு / கேது வழிபாடு செய்து வர, நற்பலன் கிட்டும்.

மிதுனம் : தெய்வ பலம் மிகுந்த வாரம். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கல்வி வளம் மேலோங்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். திருமண காரியம் கைகூடும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கும். வராத பணம் வந்து சேரும். குரு / சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கடகம் : நெருங்கிய கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். சுபக்காரியம் கைகூடும். சொத்துகள் வாங்க நேரிடும். வேலைப்பளு அதிகரிக்கும். குழந்தைகள் வழியில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் சற்று மந்த நிலை இருக்கும். பொருளாதாரக் கஷ்டம் சமாளிக்கப்படும். ராகு / கேது / சனி /குரு வழிபாடு செய்ய நற்பலன் கிடைக்கும்.

சிம்மம் : சுமாரான வாரம். வாக்கு நாணயம் காப்பாற்றப்படும். உடல்நிலை சீராகும். திருமணம் கைகூடும். வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். கல்வி வளம் மேலோங்கும். நண்பர், உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வருதல் நற்பலன் தரும்.

கன்னி : யோகமான வாரம். சுப நிகழ்ச்சிகள் கைகூடும் வெளிதேச அழைப்பு வந்து சேரும். வராத பணம் வரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சொத்து, மனை வாங்க நல்ல தருணம். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குரு

வழிபாடு நற்பலனை அளிக்கும்.

துலாம் : திருமண காரியம் கைகூடும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வீடு, மனை வாங்க நல்ல தருணம். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். புதிய தொழில் முயற்சி கைகொடுக்கும். தன வரவு உண்டாகும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். உடன்பிறப்பால் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம் : செல்வச் செழிப்புள்ள வாரம். பண நடமாட்டம் நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். வீடு, மனை வாங்க நல்ல காலம். பணக் கஷ்டம் இருக்காது. குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கும்பம் : மேன்மையான வாரம். திருமண காரியம் கைகூடும். புதிய தொழில் அபிவிருத்தி ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். நீண்டகால கடன் தொல்லை ஒழியும். வீடு, மனை வாங்க நல்ல தருணம். மனக் குழப்பம் தீரும். தூரதேசம் அழைப்பு கிட்டும். ராகு/ கேது / குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம் : உல்லாசப் பிரயாணம் செல்ல நேரிடும். பணக் கஷ்டம் இருக்காது.

நடக்குமென்பார்: நடக்கும்!

நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். உத்தியோகத்தில் நற்பலன் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

தனுசு : தெய்வீக அனுகூலம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். கல்வி வளம் மேலோங்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். நண்பர், உறவினர்கள் ஆதாயம் கிட்டும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். திருமண காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். குரு / சனி வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.

மகரம் : மன உலைச்சல் இருக்கும். வாக்கு வாதத்தைத் தவிர்க்கவும். யாருக்கும் ஜாமீன் போடுதல் கூடாது. உணவுக் கட்டுப்பாடு அவசியம். திருமண காரியம் கைகூடும். சொத்துகள் விற்பனை ஆகும். புதிய வீடு, வாகனம் வாங்க நல்ல தருணம். குழந்தைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும். உடல்நிலை நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவர, நற்பலன் மிகுதி ஆகும்.

பரத்வாஜ் பதில்கள்

என்னுடைய அண்ணன் மகன்களின் ஜாதகங்களை அனுப்பியுள்ளேன். அவர்களுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- ஜி.லலிதா, குரோம்பேட்டை

மூத்தவருக்கு ஜாதகத்தில் சர்ப்பதோஷம் உள்ளது. அவருக்கு 39 வயதில் திருமணம் கைகூடும்.

இளையவருக்கு 2007ல் திருமணம் நடக்கும். நல்ல படித்த பெண் அமைவாள். உறவு கிடையாது.

பொம்மக்கா... திம்மக்கா!

மேற்குத் தொடர்ச்சி மலையில, கேரள நாட்டு எல்லை மலை உச்சியில இருக்கு 'பான தீர்த்தம்'ங்கிற அருவி. அந்த அருவியில குளிச்சுட்டு, அடுத்து மலையடிவாரத்துல இருக்கிற அகத்தியர் அருவியில குளிக்கறதுக்காக மலங்காட்டு வழியா நடந்து வந்துக்கிட்டு இருந்தான் ஒரு எளவட்டம்.

அவம் பேரு முத்துப்பட்டன். மேல் பட்டறையைச் சேர்ந்தவனா இருந்தாலும் வீரத்திலயும் தீரத்திலயும் பெரிய ஆளு.

அந்த எளவட்டம், நடந்து வார வழியில ஆத்துக்குள்ள குளிச்சிட்டிருந்த பொம்மக்கா, திம்மக்காங்கிற அழகான பொண்ணுங்களைப் பார்த்தான். அந்தப் பொண்ணுங்களப் பார்த்ததும் அவங்க மேல தீராத மோகம் வந்துடுச்சு. அவங்க ரெண்டு பேரும் காட்டுல மாடு மேய்க்கிற அவங்கப்பா வாலப்பனுக்கு கஞ்சி கொண்டு வந்து கொடுத்துட்டுப் போகிற வழியில் குளிச்சிட்டிருந்தாக.

அத்துவானக் காட்டில அந்தப் பொண்ணுங்களப் பாத்து மோகம் கொண்ட முத்துப்பட்டன், அவங்க பின்னாலேயே போனான்.

முத்துப்பட்டன், 'உங்க ரெண்டு பேருல ஒருத்திய நான் கல்யாணம் செஞ்சிக்கிடணும்னு நினைக்கே'ன்னு வெளிப்படையாச் சொன்னான்.

அப்பெண்கள், 'இந்தக் கல்யாணம், காட்சி பத்தி எல்லாம் எங்கப்பாட்டதான் பேசிக்கிடணும்'னு சொல்லிட்டு போயிட்டாங்க.

தலைமறைவா அந்தப் பொண்ணுங்கள தொடர்ந்துபோன முத்துப்பட்டன் வாலப்பன் மாடுக மேய்க்குற எடத்தைத் தெரிஞ்சிக்கிட்டான்.

அப்பாவுக்குக் கஞ்சி கொடுத்துட்டு அந்தப் பொண்ணுங்க போன பெறகு முத்துப்பட்டன் வாலப்பன் பக்கத்தில போய் கும்பிட்டு, 'காட்டு வழியாப் போகும்போது உங்க பொண்ணுங்களப் பார்த்தேன். அவங்கள்ல ஒரு பெண்ணை எனக்குக் கல்யாணம் செஞ்சிதாங்க'ன்னு கேட்டான்.

வாலப்பனும் பதிலுக்கு முத்துப்பட்டனைக் கும்பிட்டு, 'உங்களைப் பாத்தா உயர்ந்த சாதிப் புள்ளையாத் தெரியுது. நாங்க கீழ் சாதிக்காரங்க. உங்களுக்கும் எங்களுக்கும் ஏணி வச்சாலும் எட்டாது. அதனால, உங்க முடிவை மாத்திக்கங்க'ன்னு பணிவாச் சொன்னான்.

உடனே முத்துப்பட்டன், 'ஐயா, குலம், கோத்திரம் பத்தியெல்லாம் பேசாதீங்க. நா உங்க மகள்களப் பாத்தவுடனே அவங்கட்ட என் மனசப் பறிகொடுத்துட்டேன். இனி வாழ்ந்தா உங்க மகளோட வாழ்வேன். இல்லைன்னா இந்தக் காட்டுலேயே செத்துப் போயிருவேன்'னு சொன்னான்.

முத்துப்பட்டனோட மன உறுதியைப் பார்த்து மனசு மாறின வாலப்பன், 'சரி, நீர் என் வீட்டில் ஒரு மாசமாவது தங்கி, நாங்க பாக்குற வேலை எல்லாம் பாக்கணும். எங்களப் போல சாக்கை (கோணிப்பை) விரிச்சிப் படுத்து ஒறங்கணும். எங்களப் போல உடை உடுத்

7



தணும். நாங்க சாப்பிடும் சோறைத்தான் சாப்பிடணும். சம்மதிச்சா நான் உமக்குப் பெண் தரச் சம்மதிக்கிறேன்'னார்.

முத்துப்பட்டனும் வாலப்பன் சொன்னதுக்கெல்லாம் சம்மதிச்சான்.

காதலுக்காக முத்துப்பட்டன் மாடு மேய்ச்சு, சாக்குல படுத்துத் தூங்கி, அவங்க குடிக்கும் கஞ்சியக் குடிச்சி, ஒரு மாசம் அவங்களோட வாழ்க்கைய வாழ்ந்தான்.

முத்துப்பட்டனோட கடின உழைப்பு, மன உறுதி, ஒழுக்கம் எல்லாத்தையும் பாத்து ரொம்ப திருப்தியான வாலப்பன், தம் பொண்ணுங்கள்ல ஒருத்தியை முத்துப்பட்டனுக்குக் கட்டிக் கொடுக்க நினைச்சான். ஆனா பொண்ணுக ரெண்டுபேருமே முத்துப்பட்டனைக் கட்டிக்கிட நெனைச்சாங்க.

அந்த முடிவ அப்பங்காரன்கிட்டவும் முத்துப்பட்டன்கிட்டவும் சொன்னாங்க. அதுக்கு முத்துப்பட்டன் சம்மதிச்சதால அந்தப் பொண்ணுக ரெண்டுபேரையும் முத்துப்பட்டனுக்கு வாலப்பன் மொறைப் படி ஒரு கோயிலுல வைச்சிக் கல்யாணம் செஞ்சி கொடுத்தான்.

கொஞ்ச காலம் பொம்மக்காவோடயும் திம்மக்காவோடயும் ரொம்ப சந்தோஷமா குடும்பம் நடத்தினான் முத்துப்பட்டன். ஒருநா காலையில வழக்கம்போல மாடுகளைப் பத்திக்கிட்டு மலங்காட்டுக்கு மாடுமேய்க்கப் போனான். மாடுகளோட காவலுக்கு ரெண்டு நாய்களும் போகும். அதுகளுக்

கழனியூரன்



தாமிரபரணி கரையில்...

மேற்குத் தொடர்ச்சி மலையில், அகஸ்தியர் அருவிக்கும் பான தீர்த்தம் அருவிக்கும் நடுவில் உள்ள மலைச் சரிவில் பாயும் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ளது சொரிமுத்து ஐயனார் கோயில். இக்கோயிலோடு சேர்ந்து சங்கிலி பூதத்தார், பிரம்ம ராட்சசி, பட்டவராயன் போன்ற சாமிகளின் கோயில்களும் தனித் தனியே உள்ளன. பட்டவராயன், பட்டன் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்ற சாமியின் முழுப் பெயர் முத்துப்பட்டன்.

குப் பூச்சி, காச்சின்னு பேரு. சாயங்கால நேரத்துல முத்துப்பட்டன் புல்லாங்குழல எடுத்து வாசிப்பான். புல்லாங்குழலோட இசை கேட்டதும் மாடுகளெல்லாம் ஒரு எடத்தில கூடிரும். வழக்கம்போல அன்னைக்கும் மாடுகளப் பத்திக்கிட்டு வீட்டுக்கு வரும்போது மாடுகளக் கொள்ளையடிச்சுட்டு போற கொள்ளக் காரங்க கையில அருவா, கத்தி, ஈட்டியோட மாட்டு மந்தையை மறிச்சாங்க.

கையில வேல்கம்பு வச்சிருந்த முத்துப் பட்டன், அந்தக் கொள்ளக்காரங்ககிட்ட சண்டை போட்டு அத்தனை பேரையும் குத்திக் கொன்னுட்டான்.

சண்டபோட்ட களப்புத்திர, ஆத்துல எறங்கித் தண்ணி குடிக்கும்போது, தப்பி வந்த கொள்ளக்காரங்கள்ல ஒருத்தன், பக்கத்துல கிடந்த குத்தீட்டிய எடுத்து முத்துப்பட்டனக் குத்திட்டான்.

ஈட்டி குத்திக் கிழிச்சிருச்சு. எல்லாக் கொடலும் வெளியே வந்துட்டு. இருந்தாலும் சுதாரிச்சுக்கிட்டு முத்துப் பட்டன் தன் தலையிலக் கட்டியிருந்த துண்ட அவுத்து, வெளியே வந்த கொடலை வயித்துக்குள்ள தள்ளித் துண்டை வைச்சு இடுப்பக் கட்டிக்கிட்டு, தன் வயித்துல குத்தியிருக்கிற ஈட்டியை உருவி எடுத்துக் குத்துயிரும் கொல உயிருமாக் கிடக்கிற அந்தக் கொள் ளைக்கார பாவி மேல வீசினான். குத்தீட்டிக் குறி தவறாமப் பட்டதால, கொள்ளயன் அந்த எடத்துலயே உயிரை விட்டான். உடல விட்டுக் கொடல் வெளியே வந்துட்டதால முத்துப்பட் டனும் ஆத்தங்கரையிலேயே செத்து விழுந்தான்.

முத்துப்பட்டன் செத்ததும் காவலுக்கு நின்ன காச்சி நாயும், பூச்சி நாயும் நேரே வாலப்ப வீட்டுக்குப் போயி, ஒரு நாயி பொம்மக்கா, திம்மக்காவோட சேலையைக் கடிச்சு இழுத்துச்சு. பயந்து போன பொம்மக்காவும், திம்மக்காவும், நாய்க பின்னாலேயே போனாங்க. அன்னக்கிப் பாத்து வீட்ல வாலப்பனும் இல்ல.

ஆத்தங்கரைக்கிப் போயி பாத்த பெறகு தான் என்ன நடந்திருக்கும், ஏது நடந்திருக்கும்ங்கிற விசயம் அவங்க ரெண்டு பேருக்கும் தெரிஞ்சது. முத்துப் பட்டன் மேல விழுந்து பொம்மக்காவும் திம்மக்காவும் அழுதாக.

ரெண்டு பேரும் தன் புருசனோட பிணத்துக்குக் கொள்ளி வச்சு, எரிகிற அந்த நெருப்புக்குள்ள பாஞ்சி, தம் புருச னோடவே சேர்ந்து எரிஞ்சாங்க. அதைப் பாத்த காச்சி நாயும், பூச்சி நாயும் எரிகிற நெருப்புக்குள்ள தாங்களும் பாஞ்சி உயிரை விட்டிருச்சுங்க.

இப்படி முத்துப்பட்டனோட சேர்ந்து பொம்மக்காவும் திம்மக்காவும், காச்சி நாயும் பூச்சி நாயும் சாமியாயிட் டாங்கன்னு ரெண்டு சகோதரிகளோட கதையைச் சொல்லி முடிச்சாரு ஆழ்வார் குறிச்சியைச் சேர்ந்த முத்துக்குமார்.

(தொடரும்)

இன்றைய தேதியில் தினமும் கேள்வி கேட்டு, மொபைல் போனில் எஸ்.எம்.எஸ். மூலம் நேயர்கள் பதில் சொல்லும் டீ.வி., ரேடியோ நிகழ்ச்சிகள் ஏராளமாய் இருக்கின்றன. இந்தியாவில் இப்படிப்பட்ட எஸ்.எம்.எஸ். போட்டிகளின் மூலமாகப் புரளும் பணம் சுமார் 200 கோடி ரூபாய்! இதை சேனலும், செல்போன் கம்பெனிகளும் சரிபாதியாகப் பங்குபோட்டுக் கொள்கின்றன!

ரயில்வே அமைச்சர் லாலுவின் லேட்டஸ்ட் அதிரடி இது: இப்போது பயண தினத்துக்கு அறுபது நாட்களுக்கு முன்பு முன்பதிவு தொடங்குகிறது. வரும் மார்ச் முதல் தேதியிலிருந்து பயணிகள், பயண தேதிக்குத் தொண்ணூறு நாட்கள் முன்பே முன்பதிவு செய்துகொள்ளலாம்!



லாலுவின் அடுத்த அதிரடி!

'இந்தியாவின் மோஸ்ட் வாண்டட்' என்ற க்ரைம் தொலைக்காட்சித் தொடர் மூலம் பெரும் பரபரப்பூட்டியவர் இயக்குநர் சுகிப் இலியாசி. அவர் மீது இப்போது கேஸ் போட்டிருக்கிறார் அவருடைய முன்னாள் மாமியார். 'ஆறு வருடங்களுக்கு முன் என் மகள் அஞ்சுவை சுகிப் கொன்றுவிட்டார். தன் தொலைக்காட்சித் தொடர் காரணமாக சுகிப்புக்கு காவல் துறையில் ரொம்ப நெருக்கம் உண்டு. ஆகவே கேஸை, தற்கொலை என்று சொல்லி போலீஸ் மூடி மறைத்து விட்டது' என்கிறார் அஞ்சுவின் தாயார்.



புது டெல்லி, அக்பர் சாலையில் உள்ள காங்கிரஸ் கட்சித் தலைமையகத்துக்கு சோனியா காந்தி வருகிறார் என்றால், கட்சி அலுவலகத்தில் பணி புரியும் ஊழியர்கள்பாடு திண்டாட்டமாகிப் போகிறது. முதல் நாளே அதிரடிப் பாதுகாப்புப் படையினர் கட்சி அலுவலகத்துக்கு வந்து ஒவ்வொருவரையும் துருவித் துருவி கேள்வி கேட்கிறார்கள். பாதுகாப்புக் கெடுபிடிகள் ஏகமாகி விடுகின்றன. சமீபகாலமாக சோனியா ஜன்பத்தில் உள்ள தன் வீட்டிலிருந்து, காங்கிரஸ் அலுவலகத்துக்கு காரில் போவதில்லை. இரண்டும் ஒன்றுக்கொன்று அருகில் இருப்பதால், இரண்டுக்கும் இடையே ஒரு பிரத்யேக கேட்டும், நடைபாதையும் அமைத்து விட்டார்கள்!

- எஸ்.சி.எம்.

அறுபது ரூபாய் அன்பு!

சுபமி

வீட்டில் பல பிரச்னைகள். இருந்தாலும் கொசுத் தொல்லைதான் பிரதானமாக இருந்தது இராகவனுக்கும் சுசீலாவுக்கும். கொசுக்களை விரட்ட முதலில் அவர்கள் வேப்பிலையைக் கொளுத்தி மூட்டம் போட்டுப் பார்த்தார்கள். அந்தப் புகைக்கெல்லாம் கொசுக்கள் மிரளவில்லை. பின் கொசுவர்த்திச் சுருள், மேட் என வாங்கி உபயோகித்தார்கள். பலன் ஏதுமில்லை.

"ஸ்பிரே ஒண்ணு இருக்கு. அறுபது ரூபா. வாங்கித் தெளிச்சா கொசு அத்தனையும் செத்துடும்..." என்று அலமேலு அக்கா யோசனை சொல்லவும், செலவானாலும் பரவாயில்லை என்று, "பணம் தாரேன். இன்னைக்கே ஒரு ஸ்பிரே வாங்கியாங்க..." என்றாள் சுசிலா கணவனிடம்.

அன்று மாலை இராகவன் பணம் கேட்டபோது சுசீலா ஏட்டைத் திருப்பினாள். "ஸ்பிரே வாங்க எல்லாம் இந்த மாசம் பட்ஜெட்ல நமக்கு இடமில்லே. எல்லாம் அடுத்த மாசம் வாங்கிக்கலாம்."

அடுத்த வாரம் வந்து ஒரு மாதம் தங்கப் போவதாய் சுசீலாவின் மாமியாரிடமிருந்து வந்த கடிதம்தான் சுசீலாவின் மனமாற்றத்துக்குக் காரணம் என்பது இராகவனுக்குத் தெரியாது.

கடிதத்தில் தெரிவித்ததுபோல் சுசீலாவின் மாமியார் அடுத்த வாரம் ஒரு பெரிய பார்சலுடன் வந்திறங்கினார்.

ஆரம்ப நல விசாரிப்புகளுக்குப் பிறகு தமது பையிலிருந்து ஒரு பார்சலை எடுத்தாள்.

"இங்க கொசு ஜாஸ்தின்னு வீட்ல இருந்த நெல்லை வித்து கொசுவலை வாங்கியாந்தேன்... இந்தா" என்றாள் சுசீலாவிடம்.

இதைக் கேட்டவளுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. அறுபது ரூபாயைக் கொண்டுவந்து இராகவனிடம் நீட்டி, "போய் அந்த ஸ்பிரேவ மொதல்ல வாங்கியாங்க!" என்றாள். ●



நியமன எரிச்சல்!



- அண்ணா பல்கலைக்கழகத்தின் இணை அமைப்புகளாக திருச்சியிலும், கோவையிலும் அண்ணா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த இரு இடங்களிலும், துணை வேந்தர்கள் நியமனம் குறித்து கடும் எரிச்சலில் இருக்கிறார்கள் பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர்கள். ''இரண்டு துணை வேந்தர்களிடம் தனி உதவியாளராக இருந்த ஒருவரைத் துணை வேந்தராக போட்டிருக்கிறார்கள். அவர் மீது ஏகப்பட்ட புகார்கள்; அதனால் பொறுப்பிலிருந்து இடைநீக்கமும் செய்யப்பட்டவர் அவர். அப்படியிருந்தும் அவரை மிக உயர்ந்த இடங்களின் சிபாரிசு காரணமாக துணை வேந்தராக நியமித்திருக்கிறார்கள்'' என்று சொல்கிறார்கள் பேராசிரியர்கள். இதில் டாக்டர் ராமதாஸுக்கும் அதிருப்தியாம்!



- மீண்டும் தேர்தல் நடக்கும் 100 மாநகராட்சி வார்டுகளில் போட்டியிட மனு செய்த இருபது தே.மு.தி.க.வினர், ஆளுங்கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சியினர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட துணை போய்விட்டார்கள்'' என்று விஜயகாந்த் கடுப்படைந்திருக்கிறார். சென்றமுறை அதே வார்டுகளில் போட்டியிட்ட தே.மு.தி.க. வேட்பாளர்கள், இந்த முறை மனுக்களைத் தள்ளுபடி செய்வதற்கு வசதியாக விண்ணப்பங்களை அரைகுறையாக நிரப்பித் தாக்கல் செய்துவிட்டு 'மனுக்களைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்' என்று நாடகமாடுகிறார்களாம்.

- எம்.ஜி.ஆரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தன்னை முன்னிறுத்திக் கொண்டு செயல்படும் ஜெயலலிதாவை அரசியலிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்றால், எம்.ஜி.ஆரை உயர்த்திப் பிடிக்கும் விஜயகாந்தை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தோட்டம், கல்வித் தந்தைகளான எம்.ஜி.ஆர். அனுதாபிகளிடம் ஏற்பட்டிருக்கிறதாம்!

- சஞ்சயன்

தேவமருந்து

சுக்ர சக்தி!

டாக்டர் எல்.மஹாதேவன்

மிக முக்கியமாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது குழந்தைப் பேறின்மை என்பது வேறு, ஆண்மைக் குறைவு என்பது வேறு. ஆயுர்வேதத்தில் குழந்தைப் பேறின்மையை சுக்ரதுஷ்டி என்றும், ஆண்மைக் குறைவை க்லைப்யம் என்றும் கூறுகிறோம். இந்த ஆண்மைக் குறைவைத் தவறாக விளம்பரப்படுத்திப் பணம் பறிக்கும் கூட்டமும் உண்டு.

மது அருந்துவதால் எத்தனையோ தீமைகள் ஏற்படும். அவற்றுள் ஒன்று விந்தணுக்களின் உற்பத்திக் குறைவு. விந்து போகும் பாதையில் சிலருக்கு அடைப்பு இருக்கலாம். மேலும் vas difference எனும் நாளம் இல்லாமலே இருக்கலாம். அதேபோல் ejaculatory ducts எனும் விந்தை வெளிக் கொணரும் சுரப்பிகளிலே அடைப்பு இருக்கலாம். சில நேரங்களில் விந்தானது வெளியே வராமல் மூத்திரப் பையை நோக்கி எதிர்திசையில் செல்லலாம்; இதனை retrograde ejaculation என்கிறோம். நாள்பட்ட சர்க்கரை நோய் கூட ஒரு காரணமாகலாம்.

பழங்கால மருத்துவத்தில் வாத, பித்த, கபங்களின் தாக்கத்தை வைத்து விந்தின் குறைகளைக் கண்டறிந்தார்கள். வறட்சியானது, நீர்த்தன்மை உடையது என்றெல்லாம் விந்தினை பிரித்துக் கூறினார்கள். இன்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமானால், பிரச்னை உள்ளவர்கள், ஐந்து நாட்கள் இல்வாழ்க்கையில் ஈடுபடாமல் இருந்த பின், விந்தை தரமான பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனைக்குக் கொடுக்க வேண்டும். அதனைக் கொண்டு அந்த நபருக்குக் குறை உள்ளதா, ஆண்குறி சரியாக உள்ளதா, ஹார்மோனில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிவார்கள்.

ஆயுர்வேதத்தில் மனித உடலானது ஏழு தாதுக்களால் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறார்கள். இதில் ஏழாவது தாதுவாக சுக்ர தாதுவை (விந்து) சொல்கிறார்கள். நாம் உண்ணும் உணவுதான் சுக்ர தாதுவாக மாறுகிறது என்பது ஆயுர்வேதக் கோட்பாடு. சுக்ரம் உடலுக்கு போஷாக்கு அளிக்கும் தன்மை உடையது. சுக்ரத்திலிருந்து 'ஓஜோ' சக்தி என்ற நோய் எதிர்ப்புச் சக்தி உருவாகின்றது. சுக்ரம் சிருஷ்டியை உருவாக்கும் தன்மை உடையதால், சுக்ரத்தைப் பேணுதலை முக்கிய அம்சமாக ஆயுர்வேதம் கருதுகிறது.

சுக்ரத்தை வலுப்படுத்துவதற்கு, ஆயுர்வேதத்தில் 'வாஜீகரணம்' என்ற சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம்மருத்துவம்
1. அனபத்யதா – குழந்தைப் பேறின்மை
2. க்ஷீணசுக்ரம் – அணுக்கள் குறைவு
3. குணப சுக்ரம் – விந்துக்களில் ஏற்படும் பழுப்பு என மூன்று விதங்களில் செயல்படுகிறது.

ராம்குமார் தம்பதி ஐந்து வருடங்களுக்கு முன்பு நம்மைத் தேடி வந்திருந்தனர். திருமணமாகி மூன்று வருடங்களாகியும் அவர்களுக்குக் குழந்தை இல்லை. அவர்களைப் பரிசோதனை செய்தபோது ராம்குமாருக்குப் பிரச்னை

18



* மாடல் படம்: ஸ்ரீஹரி

இருப்பது தெரிந்தது – சுக்ர துஷ்டி பிரச்னை.

இவருக்கு ஆமணக்கு, தர்பைப்புல் போன்றவற்றால் செய்யப்பட்ட கஷாயங்களையும், வைசவானர சூரணம் எனும் கடுக்காயால் செய்யப்பட்ட சூரணங்களையும் முதலில் கொடுத்துப் பசி உணர்வை ஏற்படுத்தி, அதன் பிறகு 'கல்யாண க்ருதம்' என்கின்ற நெய்யை இருபத்தைந்து மி.லி. வைத்து தினமும் இருவேளை, பதினான்கு நாட்கள் சாப்பிடச் சொன்னோம். அதன் பின்பு, தன்வந்தர தைலத்தைத் தேய்த்துக் குளிக்கச் செய்து கல்யாணக குடம் என்ற சிவதையால் செய்யப்பட்ட லேகியத்தால் மலகத்தி செய்ய வைத்தோம்.

மது அருந்துவதால் எத்தனையோ தீமைகள் ஏற்படும். அவற்றுள் ஒன்று விந்தணுக்களின் உற்பத்திக் குறைவு.

விந்துக்களை புஷ்டியாக்குவதற்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, அமுக்கராங் கிழங்கு, பாதாம் பருப்பு, நீர்முள்ளி வித்து, பூனைக்காலி வித்து, பூசணிக்காய் வித்து, உளுந்து பதிமுகம், பால் மொதப்பன் கிழங்கு, அடபதியன் கிழங்கு ஓரிதழ் தாமரை ஆகியவற்றைச் சேர்த்துச் செய்யப்பட்ட யாபனா வஸ்தி எனும் பால் கஷாயத்தை ஆசனவாய் வழியாகச் செலுத்தும் எனிமா சிகிச்சை செய்தது, நல்ல பலனைக் கொடுத்தது.

தேன் - 100 மி.லி., இந்துப்பு 10 கிராம், வஸ்தியமா யாந்தக க்ருதம், முஸ்தங்காய், அதிமதுரம் கலந்த மூலிகைக் கலவை, சுகுமாரக் கஷாயம் - இவற்றையெல்லாம் சேர்த்து ராஜயாபன வஸ்தி என்ற வஸ்தியினைச் செய்து இவருக்குக் கொடுத்தோம். சுமார் ஒரு வருட கால சிகிச்சைக்குப் பின் அழகிய ஆண் குழந்தை பிறந்தது.

மிக முக்கியமாக, குழந்தை இல்லாதவர்களைப் பரிசோதிக்கும்போது அவர்களுக்கு இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், விதை இறக்கம், விதையில் வீக்கம் போன்றவை உள்ளனவா என்பதைக் கேட்டறிந்து, அதற்கு ஏற்றவாறு சிகிச்சை அளிக்க வேண்டும்.

(தொடரும்)

தன்வந்திரி டாலர் பரிசுப் போட்டி எண் - 15

ஆறு மாதம் வரையான கைக் குழந்தைகளைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகளை எழுதி அனுப்புங்கள். முதல் பரிசாக தன்வந்திரி டாலர் பரிசளிக்கப்படும். இரண்டாம் பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் தேவமருந்து முதல் பாகம் வழங்கப்படும்.

கடைசி தேதி: 26.2.2007

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி

மணி, மந்திரம், ஔஷதம்

புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வைரம், வைடூரியம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவழம், இவை ஒவ்வொன்றால் ஆன வெளிப் பிரகாரங்களை உடைய 'சிந்தாமணி கிருஹம்' என்ற அற்புதமான கோட்டையில் அம்பிகை தன்னை பாதுகாத்துக் கொள்ள வாசம் செய்கிறாள் என்று **சௌந்தர்ய லஹரீ** என்ற மந்திர சாஸ்திரமாக போற்றப்படும் நூலின் எட்டாவது பாடலில் கூறப்பட்டுள்ளது. தன்னை பாதுகாத்துக் கொள்ள தேவியே டன் கணக்கில் இரத்தினங்களை உபயோகிக்கிறாள் எனில் பாமரர்களாகிய நமக்கு அது எவ்வளவு உபயோகமாகும்.

எனது முப்பது வருட டாக்டர் தொழிலில், ஆறு மாதத்திற்கு மேலாக வைத்தியம் செய்தும் பலனளிக்காத கேசுகளில் அவருக்கு ஏற்ற இரத்தினங்களை அணியச் செய்ததில் நல்ல குணம் கிடைத்தது. உதாரணமாக 2, 11, 20, 29 தேதிகளில் பிறந்தவர்கள் அல்லது பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை கூட்டி வரும் எண் 2 என்றாலும். தவிர, ஜூன் 21 - ஜூலை 20 தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களும் 2-ம் எண்காரர் எனப்படுவர். இவர்களுக்கு அநேகமாக ஜீரணக் கோளாறுகள் இருக்கும். எந்த மருந்தும் பலனளிக்காது. ரூ.480 விலையுள்ள 'சைனீஸ் ஜேட்' என்ற இரத்தினத்தை அணிந்த பிறகு அவர்களது வயிறு நிரந்தரமாக குணமாகியது.

இதேபோல் 3, 12, 21, 30 தேதிகளில் பிறந்தவர்கள் (அல்லது பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டினால் மூன்று ஆக வந்தாலும்) தவிர பிப்ரவரி 20 - மார்ச் 20 அல்லது நவம்பர் 21 - டிசம்பர் 21 தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களையும் 3-ம் எண்காரர் என்கிறோம். இவர்களுக்கு தலைவலி வந்தால் அது எந்த மருந்துக்கும் கட்டுப்படாத பட்சத்தில் எமிதிஸ்ட் என்ற இரத்தினம் அணிய தலைவலி இருந்த இடம் தெரியாமல் போவது பலரது அனுபவம்.

நவரத்தினங்களை அணிந்து பலன் ஏதும் ஏற்படவில்லை என பலர் சொல்வதற்கு நகைக் கடையில் சுத்தி செய்யப்படாத இரத்தினங்களை வாங்கி அணிவதே காரணம். இரத்தினங்களை சுத்தி செய்து அணிவது மிக மிக அவசியம்.

கான்சர் நோய் சீரியஸாகி சில வாரங்களே உயிர் வாழ்வாள் என்று சொல்லப்பட்ட ஒரு பெண்மணி வைடூரியம் மற்றும் மரகதம் அணிந்த பின்பு எழுந்து நடமாட ஆரம்பித்தாள். பவழம் அணிந்த பின்பு பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்தனர். வெண் பவழம் மற்றும் புஷ்பராகம் (விலை ரூ.3,800) அணிந்து கொள்ள, சர்க்கரை வியாதி (டயபிடீஸ்) குறைந்தது. இதுபோல் தாமதமான பதவி உயர்வு கோர்ட் விவகாரம் சுமுகமாக முடிந்தது. தீராத வியாதிகள் குணமானது, நீண்ட நாட்களான பிரச்சினைகள் தீர்ந்தது போன்றவை நான் அனுபவத்தில் பார்த்துள்ளேன். மலச்சிக்கல் முத்து அணிந்த பிறகும் அலர்ஜி கோமேதகம் அணிந்த பிறகும் பல வருட தோல் வியாதிகள் பவழம், நீலம், லாபிஸ் லஸூலி அணிந்த பிறகும் குணமானது. கன்னிப்பெண்கள் பவழம் அணிய திருமணம் கைகூடியது. நீலக்கல் + புஷ்பராகம் + பவழம் அணிய, வியாபாரம் இலாபகரமாக நடைபெறத் தொடங்கியது.

செல்வராஜ் நல்ல பாடகர். ஆனால் சான்ஸ் ஏதும் கிடைப்பதாக இல்லை. 'அகேட்' என்ற இரத்தினம் அணிந்த பின் இன்று இலண்டன் நிலையத்தில் இசையமைப்பாளராக இருக்கிறார். அருண்குமார் நல்ல ஓவியர். ஆனால் ஒன்று கூட விற்கவில்லை. அகேட் அணிந்த ஆறே மாதத்தில் நிறைய விற்பனையாகி இன்று கார், பங்களா என்று இருக்கிறார். இராமசாமி நடத்தி வந்த லாரி சர்வீஸ் பலத்த நஷ்டம். காரணம் அடிக்கடி நடந்த லாரி விபத்து. 'டர்க்வாய்ஸ்' இரத்தினம் ஒவ்வொரு லாரியின் டீசல் டாங்க்-ல் போட அதன் பிறகு விபத்து நிகழவில்லை.

நமது வாழ்க்கைப் பிரச்சினை, ஏழ்மை நீங்க முதலில் 'மணி'யின் (இரத்தினங்களின்) உதவியை நாட வேண்டும். இது பலனளிக்காத பட்சத்தில் மட்டுமே மந்திரங்களை உச்சாடனம் செய்ய வேண்டும். இதுவும் பலனளிக்காத ஒரு சில கேசுகளில் மட்டுமே 'மருந்து' என நம் முன்னோர் ''மணி, மந்திரம், ஔஷதம்'' என வரிசைப் படுத்தி வைத்துள்ளனர்.

பல லட்சம் மதிப்புள்ள கார், வீடு வைத்திருப்பதால் நமது வருமானம் அதிகரிக்காது. இவற்றால் அடிக்கடி செலவு நிச்சயம் உண்டு. செலவு ஏதும் வைக்காமல் பண வரவு, சௌகர்யங்கள் ஆகியவற்றை (மறைமுகமாக) தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருப்பது இரத்தினக் கற்கள் மட்டுமே!

அகேட் (Rs.480) — இந்த இரத்தினம் மட்டும் பல நிறங்களில் கிடைக்கிறது. பலன் ஒன்றே. கடவுளை சந்தோஷப்படுத்த, (தெய்வக் குற்றத்தினால் உண்டாகும் வியாதிகள், கஷ்டங்கள் நீங்க.) உடல் ஆரோக்கியம், பலம், சொத்து, இலாபங்கள், வெற்றி ஆகியவை விருத்தியாகும்.

கலை, சங்கீதம் ஆகியவற்றில் முன்னேற, நல்ல சாரீரம் (குரல் வளம்) உள்ளவர்கள் டெலிவிஷன், ரேடியோ, சபா கச்சேரிகளில் சான்ஸ் பெற உதவும். சங்கீதம் கற்பவர்கள், (fine arts) ஓவியர்கள், கலைஞர்கள் இந்த இரத்தினத்தை அணிந்து வர விரைவில் பிரபலமடைவர்.

இந்த இரத்தினத்தை ஆப்பிள் பழரசத்தில் போட்டு சாப்பிட சித்தப்பிரமை குணமாகி உள்ளது. நண்பர்களை பெறவும் அவர்களது தொடர்பு நீடிக்கவும் அகேட் பயன்படுகிறது. விவசாயிகள், பூச்செடி வளர்ப்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். ஒரு அகேட் இரத்தினம் விரலில் அணிவதோடு, மற்றொன்றை தோட்டம், விளைச்சல் நிலத்தில் புதைத்து வைக்கலாம். அல்லது ஒரு பாட்டில் தண்ணீரில் ஐந்து அகேட் இரத்தினங்களை போட்டு வெளிச்சம் படாமல் ஒரு வாரம் மூடிவைத்து பிறகு, இரத்தினங்களை எடுத்துவிட்டு அந்த தண்ணீரை ஒரு வாளி தண்ணீரில் கலந்து சிறிதளவு எல்லா செடி வேர்களிலும் ஊற்ற நல்ல விளைச்சல் உண்டாகும்.

எமிதிஸ்ட் (Rs.950) — மாலைக்கண், வாதம் (கை, கால் அல்லது ஒரு உறுப்பு செயலிழத்தல்) மாத விடாய் கோளாறுகள். குடிப்பழக்கம் நீங்க அவன் குடிக்கும் தண்ணீரில் இந்த இரத்தினத்தை போட்டு வை, அல்லது மோதிரத்தில் அவன் அணிந்து கொள்ளும்படி செய். வில்லங்கம், கோர்ட் கேசுகளில் வெற்றி பெற.

மூன்றாம் எண்காரர்களின் பலரது தலைவலி எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படாத பட்சத்தில் ஒரு பரிசோதனை செய்து பார்க்கலாம். தலைவலி வரும்போது எமிதிஸ்ட் இரத்தினத்தை கையில் (அல்லது உடல் மீது படும்படி எங்கு வேண்டுமானாலும்) வைத்திருக்க அடுத்த சில நிமிடங்களில் வலி குறைய ஆரம்பிக்கும்.

ப்ளட் ஸ்டோன் (Rs.1200) — பராக்கிரமத்தின் (வீரம்) சின்னமாக இந்த இரத்தினம் விளங்கு கிறது.

இரத்தப் பெருக்கை நிறுத்தும். மற்றவர்களிடம் நாம் ஏமாறாமல் இருக்க.

குமாரி ப்ரியாவுக்கு திருமணம் நிச்சயமாகிற நேரம். மாப்பிள்ளை வளைகுடாவில் இலட்சக்கணக்கில் சம்பாதிக்கிறானாம். எதற்கும் இருக்கட்டும் என அவளுக்கு ப்ளட் ஸ்டோன் பதித்த மோதிரம் அணிய கொடுத்தேன். எதிர்பாராத விதமாக இவளது உறவினர், மாப்பிள்ளை பற்றி விசாரிக்க, இதுபோல் பல பெண்களை ஏமாற்றி நகைகளுடன் ஓடியவன் என தெரிந்து, கையும் களவுமாக பிடிபட்டு இன்று கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறான்.

சைனீஸ் ஜேட் (Rs.480) — ஜீரணக் கோளாறுகளுக்கு மிகச் சிறந்தது. அஜீரணம், வாய்வு, வயிற்றில் புளிப்புத் தன்மை (acidity), பசியின்மை, வேளா வேளைக்கு ஒழுங்காக சாப்பிடாமல் இருப்பதால் உண்டாகும் வயிறு தொல்லைகள். 2-ம் எண்ணில் பிறந்த பல நபர்களுக்கு வயிறு (ஜீரண) தொல்லைகள் இருக்கும்.

லின்-யீ என்ற சீன அறிஞர் எழுதுகிறார்: அதிர்ஷ்டத்திற்கு 'ஜேட்' என்ற இரத்தினக்கல் அணிந்து வர அற்புத பலன்கள் நிச்சயமுண்டு.

தமிழ் நாட்டில் 'ஒரு குந்து மணி தங்கமாவது உடலில் வேண்டாமா?' என்று கேட்பது போல் சீன தேசத்தில் ஜேட் என்ற இரத்தினக் கல் ஒரு சிறிதாவது உடலில் அணிந்திருப்பர். 'மனிதருள் மாணிக்கம்' என்று நாம் சொல்வது போல் சீனாவில் "He is a piece of jade" என்று நல்ல மனிதரைப் பற்றி சொல்வார்கள். நமது நடை, உடை, பாவனை, செயல் திறன் ஆகியவற்றை அதிகரித்து அதிர்ஷ்ட திசையை நோக்கி நம்மை அழைத்துச் செல்லவல்லது 'சைனீஸ் ஜேட்.'

லாபிஸ் லஸுலி (Rs.380) — தோல் வியாதிகளை குணப்படுத்தும் (படை, வெண்புள்ளி, தோல் அரிப்பு, தடிப்பு, அலர்ஜி).

காக்காய் வலிப்பு உள்ளவர்கள் இத்துடன் இந்திர நீலம் என்ற இரத்தினம் சேர்த்து அணிய விரைவில் பலன் கிடைக்கிறது).

ஓபல் (Rs.1200) — ஞாபக சக்தியை வலுப்படுத்துகிறது. மனிதர்களுக்கு மட்டுமே உள்ள ஆறாவது அறிவு, ஆன்மீக ஆற்றல் (psychic faculties) வளர உதவும். E.S.P. உள்ளவர்கள்,

மந்திரம், மாந்திரீகம், ஜோசியத் தொழில், குறி சொல்பவர், எண் கணிதம் (நியூமராலஜி), வைத்தியத் தொழில் புரிவோர், ரே-கி (Rei-kei, Pranic Healing), இயற்கை வைத்தியம் செய்பவர்களுக்கு ஒபல் ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். இவர்களுக்கு கடவுள் அனுக்கிரகம் மிக மிக அவசியம். ஆகையால் இந்த ஒபல் இரத்தினத்துடன் தூகேட் சேர்த்து அணிவது மிக நல்லது.

பெரிடாட் (Rs.950) — கணவன்-மனைவி அன்புடனிருக்க. செல்வச் செழிப்பை கொடுக்கிறது. எவ்வளவு சம்பாதித்தும் சேமிப்பே இல்லாதவர்கள் மற்றும் ஊதாரிகள் இதை அணிய சேமிப்பில் பணம் வளர ஆரம்பிக்கும். ஊதாரிகள் பர்சில் வைத்துக் கொள்ளலாம். விரலில் அணிவது மிக உசிதம்.

டர்க்வாய்ஸ் (Rs.380) — அபாயம் மற்றும் துரதிர்ஷ்டத்திலிருந்து நம்மை பாதுகாக்கும். நீண்ட ஆயுளை கொடுப்பதால் வாகனத்தை ஓட்டிச் செல்பவர்கள், அடிக்கடி விமான பயணம் செய்வோர் மற்றும் உயிருக்கு ஆபத்தான வேலைகளில் இருப்பவர்களுக்கு டர்க்வாய்ஸ் ஒரு உறுதுணை.

ஆண்மை அதிகரிக்க, குழந்தை பாக்கியம் உண்டாக, மலட்டுத்தன்மை குணமாக.

மந்திரங்களை சுலபமாக மனப்பாடம் செய்ய உதவும். (புரோகிதர்கள் கண்டிப்பாக அணிய வேண்டும். இத்துடன் இவர்கள் ஒபல் மற்றும் தூகேட் அணிவது மிக மிக அவசியம்).

துவரமல்லி (Rs.650) — வைரம் போட வசதியில்லாதவர்கள் அதற்குப் பதிலாக துவரமல்லி அணியலாம். வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வு காண, எதிர்காலத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளை கனவில் காண முடியும்.

பச்சை நிற துவரமல்லி மாணவர்கள், வியாபாரிகள்,
சொந்த தொழில் புரிவோர் ஆகியோருக்கு உதவுகிறது.

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பச்சை நிற துவரமல்லி மற்றும் மாணிக்கம் சேர்த்து அணிந்தால் நல்ல பலன் விரைவில் கிடைக்கும்.

உலகில் தான் தனித்திருப்பதாக உணர்பவர்கள் pink நிற துவரமல்லி அணிய வேண்டும்.

மாணிக்கம் (Rs.4200) — அந்தஸ்தில் உயர, துணிவு, வீரம் பெற. நல்ல நண்பர்களை பெற, நட்பு நீடித்து நிலைக்க ஆழ்ந்த வருத்தத்தை விரட்டியடிக்கிறது. ஒன்றுக்கும் உதவாத முழு மூடர்களுக்கும், பிறப்பிலேயே மூளைச்சோர்வு உடையவர்களுக்கும் (idiots and imbeciles) மிக நல்லது. மாணிக்கம் அணிவதால் பல் சொத்தை, மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல், விஷ பாதிப்பு, வருத்தம், சிற்றின்பத்தில் அதிக ஈடுபாடு ஆகியவை நம்மை அணுகாது. தீரும் நோய்கள்: புண்கள், மூட்டு வாதம், இதயம் மற்றும் எலும்பு சம்பந்தமான நோய்கள்.

பவழம் (Rs.2300) — நீண்ட காலமாக திருமணம் தடைப்பட்ட பெண்கள் பவழம் அணிவது அவசியம். செய்கிறோம். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேரவும் இது உதவும்.

இள வயதிலேயே விதவையாவதை தடுக்கிறது. (இள வயது தம்பதிகளில் ஒருவர் நோய்வாய்ப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் டாக்டர்கள் கைவிரித்து விட்டால் இதை அணிய தனது வாழ்க்கைத் துணையை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றலாம்.)

குழந்தைகளுக்கு கண் திருஷ்டி படாமல் இருக்க.

பருவ மடைந்த பெண்கள் மன எழுச்சியினால் (emotional period) கண்டவனிடம் காதல வயப்படுதலை தடுக்க (infatuation). இதற்கு பவழத்துடன் ப்ளட் ஸ்டோன் சேர்த்து அணிவது நல்லது

தொழிலில் தடங்கல், இடைஞ்சல் வராமல் இருக்க உதவுகிறது. வயிறு (இரைப்பை) மற்றும் கல்லீரல் (liver) வியாதிகள் குணமடையும். மூல நோய் (blind piles), படை (எக்சிமா), நரம்பு தளர்ச்சி, சோர்வு, ஆண்மைக் குறைவு. [டயாபிடீஸுக்கு வெண் பவழத்துடன் மஞ்சள் புஷ்பராகம் சேர்த்து அணிய வேண்டும். சர்க்கரை நோயாளிகள் பலர் இதன் மூலம் நல்ல குணம் பெற்றுள்ளனர்.]

மரகதம் அல்லது பச்சை (Rs.3800) — எல்லா விதத்திலும் முன்னேற்றம், ஆரோக்கியம் கொடுக்கும்.

வாழ்க்கை துணைவி/துணைவன் தன் மீது அன்புடன் இருக்க.

பேரதிர்ச்சியால் ஏற்பட்ட இதய நோய்கள். இரத்த அழுத்தம் (B.P.), புண், புற்றுநோய் (கான்சர்), தலைவலி, நரம்பு வலி, அடிவயிறு, பேச்சு, நாக்கு, கண், நுரையீரல், குடல், மூக்கு சம்பந்தமான நோய்கள் குணமாகிறது.

இந்திர நீலம் (Rs.4800) — ஆரோக்கியம், செல்வம், கீர்த்தி, பலம், நீண்ட ஆயுள் கொடுக்கும் வியாபாரத்தில் இழந்த பணம் திரும்ப கிடைக்க மற்றும் நியாயமாக நமக்கு வரவேண்டி

பரம்பரை சொத்து வந்து சேர உதவுகிறது.

பெண்களின் மலட்டுத்தன்மை அகலுகிறது. கண் நோய், பார்வை கோளாறு நீங்குகிறது. தேவையில்லாத எண்ணங்களை விரட்டுகிறது.

ஆழ்ந்த துயரம், கர்வம் நீங்க. நரம்பு மற்றும் மூளை கோளாறுகள். நரம்பு சிக்கல், விட்டு விட்டு வரும் தாங்க முடியாத வலிகள், அடி முதுகு அல்லது இடுப்பிலிருந்து பாதம் வரை பரவும் வலி (sciatica), உச்சந்தலையில் தோன்றும் வியாதிகள், வழுக்கை, காக்காய் வலிப்பு. மூளை சுரம்.

'ஆ...அம்மா' என்று அலற வைக்கும், விட்டு விட்டு வரும் வலிகள். கிட்னி மற்றும் சிறுநீர்ப்பை (bladder) வேலை செய்யாமை ஆகியவை தீரும். அசுத்த இரத்த குழாய்களை சுத்தப்படுத்தும் திறன் கொண்டதால் கீல் வாத நோய்களில் (arthritis, rheumatism) நல்ல பலன் கொடுக்கிறது. வயிறு புண் குணமாகும்.

ஏழரை அல்லது அஷ்டமத்து சனி நடப்பவர்கள் தொல்லைகள் அகல இந்திர நீலம் அணிந்து திருநள்ளாறு சென்று தரிசனம் செய்து விட்டு வர ஆறு மாதத்திற்குள் பலன் தெரியும்.

கோமேதகம் (Rs.1200) — ஆரோக்கியம், செல்வம் மற்றும் சகல விதத்திலும் முன்னேற்றம் ஏற்படுகிறது. மண வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்.

'அலர்ஜி'க்கு மிக நல்லது. வயிற்றில் அதிக புளிப்புத்தன்மை (acidity), வயிறு, உணவுக்குழலில் எரிச்சல், அதிக (உடல்) சூட்டினால் வரும் வியாதிகள் தீரும். பசியை தூண்டி, ஜீரணத்தை சரி செய்கிறது.

வைடூரியம் (Rs.2800) — அரசாங்க தண்டனையிலிருந்து நம்மை மீட்டுக் கொடுக்கும். இரகசிய எதிரிகளிடமிருந்தும், நம்மை பாதுகாக்கும்.

மூடிய மில்கள், நலிந்த தொழில்கள் புத்துயிர் பெறும். முதலாளி வைடூரியம் அணிவதால் அவரது தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் (ஸ்டிரைக்), 'லாக் அவுட்', ஆட் குறைப்பு, தொழிலில் தேக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இத்துடன் 'டைகர்ஸ் ஐ' என்ற இரத்தினத்தை சேர்த்து அணிவது சாலச் சிறந்தது.

நாட்பட்ட வியாதிகள் மற்றும் உயிருக்கு ஆபத்தான கான்சர், எய்ட்ஸ், மூளையில் கட்டி, haemophilia, இரத்தப்புற்று (blood cancer), மாற்று சிறுநீரகம் பொருத்த வேண்டிய கிட்னி பழுதடைந்த நிலை போன்ற terminal illness-களில் உதவுகிறது. சில மாதங்களே உயிர்வாழ்வான் என டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் வைடூரியத்துடன் மரகதமும் அணிந்து கொண்ட பின்பு பல வருடங்கள் உயிர் வாழ்ந்துள்ளனர்.

கிட்னி ஸ்டோன் - Rs.780 — இதை அணிய சிறுநீரகம் பழுதடைந்தவர்களுக்கு நல்ல குணம் கிடைத்துள்ளது. தவிர, சிறுநீர் சம்பந்தமான பல நோய்களில் குணம் கிடைத்துள்ளது.

ஆம்! உலகில் உள்ள எல்லா நல்ல சக்திகளையும் (கடவுளின் பலம், சக்தி உட்பட) நவரத்தினக் கற்கள் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டுள்ளன. இவற்றை அணிய, நம்மிடம் உள்ள தேவையில்லாத சுபாவங்கள், மற்றவர்களுக்கு பிடிக்காத செயல், தன்னம்பிக்கையின்மை போன்ற தன்மைகள் உறிஞ்சப்பட்டு வெளியேற்றப்படுகின்றன.

சந்திப்பு

"கதையை மட்டும் நம்பிப் படமெடுக்க முடியாது!"

அதிரடிப் படங்களே தன் இயக்கத்துக்கு ஆணிவேர் என்று அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருக்கும் இயக்குநர் ஹரி, அடுத்து களமிறங்குவதும் மாஸ் ஹீரோவை வைத்துத்தான். ஹீரோ சூர்யா... படம் 'வேல்'.



'தமிழ்'ல் தொடங்கி, 'தாமிரபரணி' வரைக்கும் வெட்டுக்குத்து, அதிரடி, ஆக்ஷன்னே பட்டையைக் கிளப்புறீங்களே?

"என் படங்களில் குடும்பப் பாசம், அன்பு, காதல், சென்டிமெண்ட் ப்ளஸ் ஆக்ஷன் எல்லாத்தையும் கரெக்ட் ப்ரோபோர்ஷன்ல கலந்து கொடுக்கிறேன். சில சமயங்களில் கதையின் தன்மைக்கு ஏற்ப ஆக்ஷன் கூடுதலாயிடும். ஆனா பயமுறுத்தற மாதிரி இருக்காது.



உங்களோட படங்கள் வன்முறையைத் தூண்டுகிறமாதிரி இருப்பதை நீங்களே உணர்தீங்களா, இல்லையா?

"இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சினிமாவைப் பார்த்து எது நல்லது, கெட்டது என்று தீர்மானிக்கும் திறமை உண்டு. சினிமாவில் எத்தனையோ நல்ல விஷயங்களைச் சொல்கிறோம், அதைப் பார்த்து நல்லவர்களாக மாறியவர்கள் உண்டா? ஒரு பார்வையாளனா, இரசிகனாச் சொல்கிறேன், என் படங்கள் வன்முறையைத் தூண்டியதும் இல்லை; என்னிடம் அப்படி யாரும் இதுவரை சொல்லியதும் இல்லை."

தொடர்ந்து விக்ரம், சூர்யா, சிம்பு, சரத் என்று பெரிய ஹீரோக்களையே வைத்துப் படம் பண்ணுவது ஏன்?


"கதையை மட்டும் முழுக்க முழுக்க நம்பி படம் எடுக்க நான் சேரன், பாலா, அமீர் கிடையாது. என் கதைக்குப் பக்க பலமாக புரொடியூசர், ஹீரோ, மியூசிக், பாடலாசிரியர் என்று எல்லாரையும் சார்ந்து, நம்பித்தான் களம் இறங்குகிறேன். எனக்கு மட்டுமில்ல, எல்லா கமர்ஷியல் இயக்குநர்களுக்கும் இதுதான் அணுகுமுறை."



எல்லா ஹீரோக்களையும் வைத்துப் படம் பண்ணுகிறீர்கள். உங்கள் மைத்துனர் அருணை ஹீரோவாக வைத்துப் படம் எடுக்க ஏன்

தயங்குகிறீர்கள்?

"அவருக்கு ஏற்றக் கதையும், தயாரிப்பாளரும் கிடைத்தால் நிச்சயம் எடுப்பேன். அப்படியொரு சூழல் விரைவில் கிடைக்கும் என்று நம்புகிறேன்."



• ஹரி

'தமிழ் ஹீரோயின்களையே தமிழ்ப் படங்களில் பார்க்க முடிவதில்லை' என்ற புலம்பல் நீடித்து வருகிறதே...

"சினிமா என்றாலே 'சில்மிஷவாதிகளின் ஜங்ஷன்' என்கிற கருத்துதான் இதற்கு மிக முக்கிய காரணம். பாப்புலரா இருக்கிற த்ரிஷா, ஸ்நேகா போன்றவர்களும், ஒரு கட்டத்துக்கு மேல் அடுத்த மொழிகளுக்குப் பறந்து விடுகிறார்கள். சினிமாவைப் பற்றிய தவறான கண்ணோட்டங்கள் மாறினால் கேரள, மும்பை நடிகைகளின் ஆதிக்கம் தமிழ் சினிமாவில் குறையும்."

உங்க படத் தலைப்புகள் எல்லாம் ரொம்ப பக்தியாகவே தென்பட என்ன காரணம்?

"இது ஒரு சென்டிமெண்ட், அவ்வளவுதான்."

'கற்பூர நாயகியே' பக்திப் பாட்டை இப்படி ரீமிக்ஸ் என்கிற பெயரில் கெடுக்கணுமா?

"எந்தப் பாடலை ரீமிக்ஸ் பண்ணினாலும் ஒரிஜினல் பாட்டின் புகழ் குறைந்துவிடாது. 'தொட்டால் பூ மலரும்' பாட்டை ரீமிக்ஸ் பண்ணினார்கள். ஆனால் எந்தப் பாட்டு உங்கள் மனதில் நிற்கிறது? ஒரிஜினல்தானே!"

- மனோ விக்டர்

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**

ஹா... ஹா...ஹா...



"நீ ஒரு பொண்ணை லவ் பண்ணினியே... அவளையே கல்யாணம் பண்ணிக்கிட்டாயா? இல்லை, இன்னும் அவளையே நெனைச்சுக்கிட்டு கவலையோட இருக்கியா?"

"ரெண்டும்தான்."

- எம்.சரவணன்



"நல்ல நேரம் முடியறதுக்குள்ளாற பையன் தாலி கட்டிடட்டும்."

"ஓஹோ.. தாலி கட்டியாச்சுன்னா பையனோட நல்லநேரம் முடிஞ்சிடுமா..."

- நா.நாகராஜன்

"கபாலிக்கு என்னவொரு கொழுப்பு பாருங்க, சார்!"

"என்னய்யா?"

"இந்தத் தடவையும் இதே நீதிமன்றம்தானா... சிறப்பு நீதிமன்றம் ஏதும் கிடையாதான்னு கேட்கறான்!"

- அனன்யா




"இந்தப் புலவர் என்னைப் பற்றி நான்-ஸ்டாப்பாகப் பாடுகிறார் அமைச்சரே...."

"நான்-ஸ்டாப்பாக மட்டுமில்லை மன்னா... நான்-சென்ஸாகவும் பாடுகிறார்..."

- கே.ஆனந்தன்





"எங்கம்மாவை இரண்டு மாசமா காணலை சார்!"

"அதை ஏன் இவ்வளவு தாமதமாச் சொல்றீங்க?"

"ஒரு இரண்டு மாசமாவது என் மனைவியோட பிடுங்கலில்லாமல் நிம்மதியா இருந்துட்டுப் போகட்டுமேன்னுதான்!"

- லீலாஜி

நல்ல நேரம் முடியட்டும்!



"என்னடா சொல்றே? நம் நாட்டின் தேசியப் பறவை எதுன்னு கேட்டால் கொசுனு சொல்றே..."

"பின்னே எல்லாரையும் கைதட்ட வைக்கிறது கொசுதானே!"

- எம்.அசோக் ராஜா

தொடர்கதை



கொசு

பா. ராகவன்

7

முதலில் புகைதான் தென்பட்டது. அர்த்தமற்ற கூச்சல்களும் தபதபவென்று ஓடும் சத்தமும் வெளியை நிறைத்திருந்தது. முத்துராமனும் சாந்தியும் குப்பத்தை நெருங்கியபோது ஒரு பாதி எரிந்து நாசமாகி, சேறும் கரியுமாகக் கிடக்க, இன்னொரு பக்கத்தில் தீயை அணைக்க மக்கள் போராடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"டேய், எல்லாக் குடிசைக்குள்ளயும் உள்ள பூந்து பாருங்கடா. பெருசு ஏதாச்சும் தூங்கிக்கினு கெடக்கப் போவுது!"

யாரோ குரலெழுப்பியபடி ஓடினார்கள். வீசியடிக்கும் தண்ணீரில் அத்தனை பேரும் முழுதாக நனைந்திருந்தார்கள். கவலையும், வேதனையும், பதற்றமுமாக விரைந்த சாந்தி, தன் குடிசையை நெருங்கியபோது சட்டென்று ஒரு கணம் நின்று மூச்சு வாங்கினாள். கடவுளுக்கு நன்றி! அப்பாவும், அம்மாவும் வெளியே நின்றுகொண்டு இருந்தார்கள். ஆளுக்கொரு பக்கெட். முடிந்த அளவுக்கு முயற்சி.

"சாந்தி... வந்துட்டியா... தங்கச்சி எங்கடி?"

"தியேட்டர்ல இருக்காம்மா. அவளக் கூட்டிக்கினு வரலாம்னுதான் போனேன்..."

அவர்கள், அப்போதுதான் முத்துராமனைப் பார்த்தார்கள். சட்டென்று சாந்தியின் அப்பா, தூக்கிக் கட்டியிருந்த லுங்கியை இறக்கிவிட்டார்.

"அ... தம்பி... வாங்க, வாங்க..."

வரவேற்கக்கூட முடியாத சூழல் சட்டென்று தாக்கியது.

"இருக்கட்டுங்க... பக்கெட்ட என்னாண்ட குடுங்க.. உள்ள இருக்கற சாமான் செட்டெல்லாம் எடுத்துட்டீங்களா?"

கேட்டபடியே வேகமாகக் குடிசைக்குள் ஓடினான்.

"ஐயோ... தம்பி, வேணாம்... போகாதீங்க... எல்லாம் எடுத்தாச்சு..."

சாந்தியின் அம்மா பேசி முடிப்பதற்குள் உள்ளே பாய்ந்து ஒரு பார்வை சுழலவிட்டு அவன் வெளியே வந்துவிட்டான்.

ஒரு பத்து நிமிஷம் பதற்றத்தில் கரைந்ததும், பிராந்தியம் முழுவதும்

குளித்து முழுகிக் கருகிக் கிடந்தது. ஓலங்களும், ஒப்பாரிகளும் தேய்ந்து முனகலாகிக் கொண்டிருந்தன. சாந்தியும், அவளுடைய அம்மாவும், அப்பாவும் மூன்று மூட்டைகளில் பொருள்களைக் கட்டி எடுத்துக்கொண்டு மேட்டுப்பகுதிக்கு வந்து உட்கார, முத்துராமன் அவர்களுக்கு எதிரே உட்கார்ந்தான்.

"பாருங்க தம்பி... எம்.எல்.ஏ.வுக்குச் சொல்லிவுட்டு அர அவரு ஆவுது. இன்னும் வரக்காணம்..." என்றார் சாந்தியின் அப்பா.

"ஊர்ல இல்லியோ என்னமோ... போலீஸ்காரங்க வந்திருக்காங்களே, எம்.எல்.ஏ. வருவாரு. எப்பிடியும் வராம போவ மாட்டாரு."

எங்கோ பார்த்துக் கொண்டிருந்த சாந்தியின் அம்மா, சட்டென்று நினைவுக்கு வந்தவள் மாதிரி திரும்பிக் கேட்டான், "ஏண்டி சாந்தி... இந்த வாட்டி ஆறு மாசத்துக்கு மேல ஆயிருச்சில்ல?"

ஒரு கணம் சாந்திக்குப் புரியவில்லை. புரிந்தபோது பதற்றமானான். என்ன பேசுகிறாள் அம்மா? அதுவும் யார் எதிரே?

முத்துராமன் சிரித்துவிட்டான். "அப்பிடித்தாங்க. தீக் கூட பழகிருச்சின்னா தண்ணி மாதிரிதான். நம்மள மாதிரி குப்பத்து சனங்க இதுக்கெல்லாம் அழுதுக்கிட்டு மூலைல குந்திட்டா அடுத்த வேளை சோத்துக்கு என்ன பண்றது? எம்.எல்.ஏ. வந்து என்னா குடுக்கறாருன்னு பாருங்க. எப்பிடியும் ரெகுலர் நஷ்டஈடு இருக்கும். அப்பால நாம பேசறதப் பொருத்து மேற்கொண்டு ஏதாச்சும் தேறும்."


"நீங்க ஒண்ணு தம்பி... இங்க நாலு தலைங்க இருக்குதுங்க. கட்சிக்காரப் பசங்க. எல்லாம் பேசி வாங்கி எடுத்தாந்து தர்றது அவங்கதான். என்னா ஒண்ணுன்னா, ஒயுங்கா வரகாக வந்துருமே தவிர,



மேல் காசு எல்லாம் அதுங்க ஜோபிக் குத்தான் போவும்."

எப்போதும் போதிய இடைவெளி களில் பற்ற வைக்கப்படுகிற காலனிகள். வந்து, பார்த்து ஆறுதல் சொல்லி, செய்தித் தாளில் இடம் பிடிக்கிற உள்ளூர் எம்.எல்.ஏ. நிவாரணத் தொகையும் சாம் பார் சாதப் பொட்டலமும். எண்ணி எடுத்து நீட்டும் பணத்துக்குக் கைநாட்டு வாங்கும்போது முகத்தை அருகில் பார்த் துக்கொள்ளும் கட்சிக்காரர்கள். சற்றுத் தள்ளி இருந்து வேடிக்கை பார்க்கிற ரெவின்யூ அதிகாரிகள்.

அரசாங்கமும், அரசியலும் வேறு வேறா? இல்லையா? நீண்ட நாட்களாக முத்துராமனுக்கு இந்தக் குழப்பம் உண்டு.



பதிவு

எல்லாம் முடிந்து
கண்மூடி
உறங்குகையில்
உன் வியர்வைத்
துளிகளில்
தேடிப் பார்க்கிறேன்...
எங்கேனும்
பதிவாகியிருக்குமா
எனக்கான விருப்பம்?

- சுகந்தி ஜி. பாரதி

அவனுக்கு இத்தகைய சம்பவங்களெல் லாம் அதிர்ச்சியளித்த காலம் மலையேறி விட்டது. அடையாற்று ஓரத்தில் அவனது காலனியே ஒரு சமயம் பற்ற வைக்கப் பட்டபோது, முதல் நாள் இரவே அவ னுக்குத் தகவல் தெரிந்துவிட்டது.

"ஐயோ" என்று அவனையறியாமல் பதறியபோது, சட்டென்று சில கரங்கள் அவன் வாயை அடைத்தன.

"த... சும்மாருடா... இவனே மாட்டி வுட்றுவான் போலருக்குதே... எவன்டா வன்? இன்னா, இன்னா ஆயிருச்சி இப்ப? குடிசைன்னா பத்திக்கத்தான் செய்யும். சும்மா ஒண்ணுமில்ல. வூட்டுக்கு ஆயிரம் தந்துருவாங்க. கூரை மாத்திக் குடுத்துடு வாங்க. ரெண்டு நாளைக்குச் சோத்துப் பொட்டலம், தண்ணி பாகிட் எல்லாம் உண்டு. அரசியல்னா நாலும் இருக்கத் தான் செய்யும். இன்னிக்கி அடிக்கிற கையி, நாளைக்கி காலில அணைச்சிரும். கவலையேபடாத. போ... போய் வூட்ல இருக்கற சாமான் செட்டெல்லாம் எடுத்து பேக் பண்ணி வெச்சிரு ரெடியா. பத்திக்கினவுடனே வெளில ஓடியா... முன்னால வந்து மானத்த வாங்காத."

முத்துராமனுக்கு அப்படியொரு அனுபவம் புதிது.

"என்னண்ணே... இப்பிடிச் சொல் றீங்க... இதெல்லாம் தப்பில்லியா?"

"தபாரு முத்துராமா... உங்கப்பாரு மொத்தமா ஆயிரம் ரூவாவ பாத்து



''கபாலியோட கேஸ்ல வாய்தா வாங்கிக் கொடுத்தோமே, அதுக்கு ஃபீஸ் வந்துடிச்சா?''
''ஒரு பத்து நாள் வாய்தா கேட்டிருக்கான் சார்!''
- சீர்காழி ரேவதி

எத்தினி நாளாயிருக்கும்னு யோசிச்சிப் பாரு. அட, அவர வுடு. நீ பாத்திருக்கியா? காலு ஒடிய ஒடிய மெசினு அடிக்கற. பேண்டு தெச்சா நாப்பது ரூவா, சட்டை தெச்சா இருவது ரூவா. உம் பேட்டைல எத்தினி தலைங்க பேண்டு போடுதுங்க? கழுத எல்லாம் லுங்கிய வழிச்சிக் கட்டிக் கினு சுத்தி வர்ற கூட்டம்தானே? சாப்பிடுய்யா. ஆயிர ரூவா. எவன் தருவான்?

குடிசைக்குப் புச்சா கூரை போட்ருவாங்க. நிம்மதியா, சந்தோசமா இரு. அரசியல் தெரியணும்னா இந்த அடிப்படையெல் லாம் புரிஞ்சிக் கணும் மொதல்ல...''

முத்துராமனுக்கு ஆறவே இல்லை. வீட்டுக்குப் போய் அப்பாவைத் தனியே கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி விசா ரித்தான்.

''அப்பிடியா?'' என்று சிரித்தவர், ''ஒனக்குத்தாண்டா புச்சு. குப்பத்துல எந்தப் பெரிச வேணா கேட்டுப் பாரு. 'சர்தான், செலவுக்காச்சு'ன்னுவானுக'' என்று பேசியபடியே உள்ளே திரும்பி, ''கற்பகம்... ஏய், எங்கடி போய்த் தொலைஞ்ச... காலீல பத்திக்குதாம். எல்லாத்தையும் ஏரக்கட்டு...'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு, பீடியை எடுத்து வாயில் வைத்தபடி வெளியே போனார்.

அதிர்ச்சியாக இருந்தது அவனுக்கு. தனக்கு அரசியல் புரிந்து கொண்டிருக் கிறது என்றும் தோன்றியது. மறுநாள் காலை, அவர்கள் பேசிய நேரத்துக்குச் சற்றும் தாமதமில்லாமல் யாரோ ஒருவன் பீடியை இழுத்து ஏதோ ஒரு குடிசையில் வீசிவிட்டுப் போக, அரைமணி நேரக் கூச்சல் குழப்பத்துக்குப் பிறகு நிவாரண உதவிகள் ஜீப்பில் வந்து இறங்கின. பேப் பர்க்காரர்களும் டீவிக்காரர்களும் வந்து சூழ்ந்து கொண்டபோது, அழுதபடி அவனது தந்தையும் பேட்டி கொடுத்தார். எல்லாம் எதிர்க்கட்சி சதி!''

''த... என்னா வளவளன்னு பேசிக் கிட்டு? தம்பி வந்திருக்காரு. போய் ஒரு டீயானா வாங்கியாங்களேன்..''

சட்டென்று நினைவு கலைந்த முத்து ராமன், சாந்தியின் தந்தை என்ன பேசிக் கொண்டிருந்தார் என்பதை நினைவுகூரப் பார்த்தான்.

''டீயெல்லாம் வேணாங்க. பசங் களோட படம் பாக்கலாம்னுட்டு வந் தேன். தியேட்டர் வாசல்ல உங்க பொண்ணைப் பாத்தேன். சௌக்கிய மான்னு கேக்க வந்தா சட்டுனு பத்திக் கிச்சின்னு ஆளு வருது...''

சாந்தி சிரித்தாள். இப்படி ஒரு தரு ணத்தை அவள் நினைத்துப் பார்த்திருக்க வில்லை. எதிர்பாராத சந்திப்பு. எதிர் பாராத தீ விபத்து. எதிர்பாராத வருகை. எல்லாமே சாதாரணம் போல உட்கார்ந்து பேசுகிற டீயம். 'மாப்ள வந்திருக்காரு' என்று பதறக்கூடிய அம்மாகூட அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக எதிரே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறாள். அத்தனை சுவாதீனம் அவளுக்கு எப்படிச் சாத்தியமானது? தெரியவில்லை.

ஆனால் இந்த சுவாதீனத்துக்குக் காரணமாக வேறென்னவோ தனக்குத் தெரியாத இழை ஒன்று குறுக்கே ஓடிக் கொண்டிருக்கிறது என்று சாந்தி நினைத் தாள். சிரிக்கத் தொடங்கினாள்.

(தொடரும்)

விமர்சனம்

தீபாவளி

சின்ன இடைவெளிக்குப் பிறகு எழிலோட இயக்கத்துல வந்திருக்கற இன்னொரு காதல் படம். இவ்ளோ நாள் ஜெயம் ரவியை ஒரு விளையாட்டுப் பையனாத்தான் பார்த்திருந்தோம். தன்னால எப்படிப்பட்ட கேரக்டரையும் செய்ய முடியும்னு இந்தப் படத்தின் மூலமா நிருபிச்சிருக்கார். 'மூன்றாம் பிறை'யோட க்ளைமேக்ஸிலிருந்துதான் 'தீபாவளி' ஆரம்பிக்குது.

'பில்லு' கேரக்டர்ல ராயபுரத்துலேர்ந்து புறப்படுற ரவி, பெங்களூர் வந்து பண்ற அட்டகாசங்கள் அலம்பல் ரகம். 'சுசி, சுசி'ன்னு காதலிக்காக



அவர் உருகித் தவிக்கிறது கண்ணீர் ரசம்! மொத்தக் கதையையும் தன் தோள் மேல தாங்கி நடிக்கிறது ஒரு ஹீரோயினுக்கு ரொம்பச் சவாலான விஷயம். பாவனா சாதிச்சுட்டாங்க.

ஒரே ஒரு சீன்ல வந்தாலும் ரகுவரன் நடிப்புல ஆழம் அதிகம். வி.எம்.சி. ஹனீபா, தேவதர்ஷினி, மீனாள், விஜயகுமார்னு பலரும் தனிச்சுத் தெரியறாங்க. வில்லனா வர்ற லால் நடிப்புல நல்ல முதிர்ச்சி. காமெடி டிராக்னு எதுவும் இல்லாமயே, அதுக்காக தனியா யாரையும் பயன்படுத்தாமயே அந்தந்த கேரக்டர் மூலமா சிரிப்பை வரவழைச்சிருக்கறது நல்ல முயற்சி.


யுவனோட பின்னணியில அங்கங்கே டைட்டானிக் வாசனை. ஆனா, பாடல்கள் ஏறுமுகம். குறிப்பா, அவரே பாடியிருக்கற 'போகாதே...' உள்ளத்தை உருக்குது. விஜய் மில்டனோட கேமரா விளையாண்டிருக்கு. ராயபுரம் இவ்ளோ அழகா! செல்வகுமாரோட ஆர்ட் டைரக்ஷன் யதார்த்தத்தின் மறுபக்கம். ராயபுரம் ஏரியா செட் கண்ணுக்குள்ள நிக்குது. ஷங்கர் தயாளனோட மின்னல் வசனங்களுக்கு உயிர் அதிகம்.

சிக்கலான கதையைச் சீராகச் சொன்னதுக்கு எழிலைப் பாராட்டலாம். க்ளைமாக்ஸ் ரொம்ப இயற்கையா அமைஞ்சிருக்கு. ஆக்ஷன் காட்சிகள்ல இன்னும் கவனம் செலுத்தியிருக்கணும். லாரில மோதியும் கத்திக் குத்து வாங்கியும் ஹீரோ மீண்டு எழுறது, எத்தனை பேர் வந்தாலும் அடிச்சி துவம்சம் பண்றது, மறந்துபோன ஞாபகங்களை வைச்சே படம் பண்றதெல்லாம், நாம பார்க்கறது தமிழ் சினிமாதான்னு மீண்டும் மீண்டும் நிருபிக்குது.

- லஜ்ஜாவதி

போட்டி

பரிசு ரூ.2000/-



பரீட்சைக்குத் தயாரா?

இது பரீட்சை காலம். எங்கு பார்த்தாலும் 'ஒழுங்காப் படி...' 'டி.வி. பார்க்காதே' என்று ஒரே அட்வைஸ் மழை. அதனால் நாங்களும் உங்களை விடப் போவதில்லை. உங்கள் பரீட்சை கால நினைவுகளை எங்களுக்கு எழுதுங்கள். சுவாரஸ்யமான, சுருக்கமான எட்டு அனுபவங்களுக்கு தலா ரூ.250/- பரிசு.

'பரீட்சை அனுபவம்' என்று அஞ்சலட்டையின் முகவரிப் பகுதியில் எழுத மறக்காதீர்கள்.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி : 26.2.2007

காவிரி

தமிழக – கர்நாடக விவசாயிகள் ஆவலாக எதிர்பார்த்துக் காத்திருந்த, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு பதினாறு வருடங்களுக்குப் பிறகு வழங்கப்பட்டிருக்கிறது. இத்தீர்ப்பு தங்களுக்குச் சாதகமாக இல்லை என்று கர்நாடகாவில் தினமொரு போராட்டம், பேரணி நடந்து வரும் நிலையில், தமிழக விவசாயிகளின் மனநிலையை அறிய காவிரிப் பாசன விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தின் செயல் தலைவர் மகாதானபுரம் வெ.ராஜாராமிடம் பேசினோம்.

• வெ. ராஜாராம்



“இந்தத் தீர்ப்பினை (சில குறைகள் இருந்தபோதிலும்) ஏற்புடையதாகவே எங்கள் சங்கம் கருதுகிறது. இரு மாநில விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் இணைந்த 'காவிரிக் குடும்பம்' என்கிற அமைப்பு, கடந்த நான்காண்டுகளாக இரு மாநில விவசாயிகளிடையே நல்லெண்ண உணர்வினை உருவாக்கி வைத்துள்ளது. 1991-ல் இடைக்காலத் தீர்ப்பு வெளியான சமயத்தில் கர்நாடகாவில் வெடித்த பெரும் கலவரங்கள் அளவுக்குத் தற்போது நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தபோது அசம்பாவிதச் சம்பவங்கள் பெருமளவில் நிகழவில்லை. சில இடங்களில் சிறுசிறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனால், இதனை அரசியலாக்காமலும், மொழி மற்றும் இனப் பிரச்னையாக மாற்றாமலும் இருந்ததற்கு 'காவிரிக் குடும்பம்' அமைப்பின் தெளிவான சிந்தனையும் ஒரு காரணம். அதனால்தான், தீர்ப்பின் அடிப்படையில் அவரவருக்கு நேர்ந்திருக்கும் குறைகளைக் களைந்திட இரு மாநில அரசுகளுமே மேல்முறையீடு செய்வதெனத் தீர்மானித்துள்ளன.

காவிரி சம்பந்தமான 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் செல்லுபடியாகும் என்றும் நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறது. மேலும், பிற்காலத்தில் கர்நாடகாவில் புதிதாக அணைகள் ஏதும் கட்டப்பட்டாலும், கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவிலிருந்து தமிழகத்துக்குத் தரப்பட வேண்டிய 192 டி.எம்.சி. தண்ணீர் அளவைக் குறைத்துவிடக் கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளது. இது தமிழக காவிரிப் பாசன விவசாயிகளுக்கும் பெரும் ஆறுதல் தருகிறது!” என்றார்.

“காவிரிக் குடும்ப அமைப்புக்கு தெளிவான சிந்தனை உண்டு!”

இச்சங்கத்தின் செயலாளர் மன்னார்குடி ரங்கநாதன் நம்மிடம் பேசும்போது, “தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுவை என நான்கு மாநிலங்களுக்குமான தேவை சுமார் ஆயிரத்து இருநூறு டி.எம்.சி. தண்ணீர். இதில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கிடைப்பது எழுநூற்று நாற்பது டி.எம்.சி. தண்ணீர். மொத்தப் பற்றாக்குறை நானூற்று அறுபது டி.எம்.சி. பிரச்னையே இதில்தான் மையம் கொண்டுள்ளது.

உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் வெளிப்படையாகப் பேசினால், நடுவர் மன்றத் தீர்ப்பு எந்த மாநிலத்துக்கும் முழுமையாகத் திருப்தியளிக்கும்படி ஒரு நல்ல தீர்வினைக் காண முடியாது என்பதே உண்மை. அதேபோல இறுதித் தீர்ப்பில் எந்தவொரு மாநிலத்துக்கும் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ தண்ணீர் அளவு சொல்லப்படவில்லை என்பதும் நிதர்சனம். இரு மாநில விவசாயிகளுமே தங்களது மனசாட்சி

"ஆறுதல் தந்த தீர்ப்பு!"

யின்படி இதனை ஏற்றுக்கொள்வது சிறந்தது" என்றார்.

"கேரளாவுக்குத் தரப்பட வேண்டியது முப்பது டி.எம்.சி. தண்ணீர். கர்நாடகாவின் கபினியிலிருந்து இருபத்தொரு டி.எம்.சி.யும் தமிழ்நாட்டின் பவானியிலிருந்து ஆறு டி.எம்.சி.யும், அமராவதியிலிருந்து மூன்று டி.எம்.சி.யும் தரப்பட வேண்டும். தமிழகம் ஒன்பது டி.எம்.சி. தண்ணீரை, தனக்கு வந்து சேரும் நீர் வரத்திலிருந்தே தர வேண்டியுள்ளது.

அதேபோல புதுவைக்குத் தரப்பட வேண்டிய ஏழு டி.எம்.சி.யையும், பிலிகுண்டுலுவிலிருந்து வரவிருக்கின்ற 192 டி.எம்.சி. தண்ணீரிலிருந்துதான் தமிழகம் தர வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குப் பத்து டி.எம்.சி., கடலில் கலக்கும் நான்கு டி.எம்.சி.யும் தமிழ்நாட்டு ஒதுக்கீட்டிலேயே அடங்கும். ஆக தமிழகப் பாசனம், குடிநீர், தொழிலகப் பயன்பாடுகளுக்கு கர்நாடகாவிலிருந்து 171 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே கிடைப்பதாகக் கணக்கில் கொள்ள வேண்டும்.

இதனைச் சமன் செய்ய தமிழக ஒதுக்கீடான 192 டி.எம்.சி.யுடன், மேற்கண்ட இருபத்தொரு டி.எம்.சி.யையும் சேர்த்து, பிலிகுண்டுலுவிலிருந்து தமிழ்நாட்டுக்கு மொத்தம் 213 டி.எம்.சி. தண்ணீர் விடப்பட வேண்டும் என்றே இறுதித் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கப்பட வேண்டும்" என்கிறார் தமிழ்நாடு காவிரிப் பாசன விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தின் தொழில்நுட்ப ஆலோசகரும், பொதுப் பணித் துறையின் ஓய்வுபெற்ற மேற்பார்வைப் பொறியாளருமான என்.நடராஜன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



* நடராஜன்



+2

கல்வி என்றால் சரஸ்வதிதானே! அதனாலதான் இந்தத் தொடர்ல பேசின எல்லா ஸ்டேட் டாப்பர்களும் பெண்களாவே அமைஞ்சுட்டாங்க. விதிவிலக்கா என்னை மாதிரி சில ஆண்களும் பெண்களோடு போட்டிப் போட்டு முதலிடம் பிடிக்கறோம். சரி, தேர்வு நெருங்கிடுச்சு; டென்ஷன் வேண்டாம். என்னுடைய டிப்ஸை ஃபாலோ பண்ணுங்க.

- புதுசா எதையும் இனி படிக்காதீங்க! இதுவரைக்கும் என்ன படிச்சீங்களோ, அதையே ஆழமாப் படிங்க... போதும். கஷ்டமான கேள்வித்தாள் ஒண்ணைத் தயாரிச்சு, அதை மூணு மணி நேரத்துல எழுத முடியுமான்னு பாருங்க. இது சாத்தியமாயிட்டா, போர்டு எக்ஸாம்ல மூணு மணி நேரம் கூடுதலாத்தான் தெரியும்.
- தேர்வுக்கு முன்பே ஒரு மார்க், இரண்டு மார்க், ஐந்து மார்க், பத்து மார்க் ஒவ்வொண்ணுக்கும் எவ்வளவு மணி நேரம் ஒதுக்கலாம்னு முடிவு பண்ணிடுங்க. ரெண்டு மார்க்குகளுக்கு இருபது நிமிஷம் ஒதுக்கினா, அதுக்கு மேலே ஒரு நொடிகூடத் தாண்டக் கூடாது. இந்தக் கட்டுப்பாடு எல்லாக் கேள்விகளுக்கும் இருக்கணும். க்ரூப் ஸ்டடி எல்லாம் இந்தக் கடைசி நேரத்துல வச்சுக்காதீங்க. பெரும் ஆபத்து!
- பேப்பர் திருத்துபவரையும் கொஞ்சம் மனசுல வச்சுட்டு விடைகள் எழுதணும். தாள் ஓரத்துல எழுத வேண்டாம். ஒரு பக்கத்துல ரெண்டு மார்க் கேள்விகள் மூணு எழுதினா போதும். பத்து மார்க் கேள்விகளை நடுப்பக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டாம்.
- ஐந்து மார்க், பத்து மார்க்குகளுக்கான தியரியை எழுதும்போது விடைகளை அழகாப் பிரிச்சுக்கணும். உதாரணமா, இயந்திரத்தைப் பத்தி எழுதும்போது ஃபார்முலா, செயல்திறன், ஆதா



யங்கள்னு வகைப்படுத்தி எழுதணும். முக்கியமான நாலு பாயிண்ட்களை முதல்ல எழுதிட்டுப் பிறகு அதை விளக்குங்க. படங்களை முதல்ல வரைஞ்ச பிறகு அதைபத்தி விரிவா எழுதுங்க.

● ப்ளூ, ப்ளாக்னு ரெண்டு வகை பேனாக்கள் கைவசம் இருக்கணும். முக்கியமான தலைப்புகள், வரிகளை ப்ளாக் பேனாவுல அடிக்கோடிடணும். யாரும் நம்ம விடையை முழுசாப் படிக்க மாட்டாங்க. அடிக்கோடிடும்போதுதான் நாம சரியா எழுதியிருக்கோம்னு உணர்த்த முடியும்.

● தேர்வு எழுதும்போது புதுசா எதையும் யோசிக்கக் கூடாது. எல்லா பதில்களும் நீங்க ஸ்கூல்ல பலமுறை எழுதினது தான்.

● தேர்வு சமயங்கள்ல சாப்பாடு, தூக்கம் எல்லாம் சரியா இருக்கணும். ஒரேயடியா இருட்டு வாழ்க்கை வேண்டாம். கோயிலுக்குப் போகலாம்; சிரிச்சுப் பேசலாம். ஆனா, டி.வி. மட்டும் ம்ஹூம்!

● கணிதத் தேர்வுக்கு நீண்ட நேரம் எடுத்துக்க மாட்டீங்க. கணக்குப் போடும்போது முதல் நாலு லைன் சரியா அமைஞ்சுட்டா விடை எப்படியும் சரியா

வித்யாசாகர், சென்னை டி.ஏ.வி. பள்ளி மாணவர். 2000-ஆம் வருடத்தின் ஸ்டேட் ஃபர்ஸ்ட். மதிப்பெண்கள் 1181. பிட்ஸ் பிலானியில் பி.ஈ. முடித்துவிட்டு நேஷனல் யுனிவர்சிட்டி ஆஃப் சிங்கப்பூரில் எம்.எஸ். (கம்ப்யூட்டர் சயின்ஸ்) முடித்தவர். தற்போது அதே பல்கலைக்கழகத்திலுள்ள ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றி வருகிறார்.

குறையை அழகா மறைச்சிடும். சுமாராப் படிச்ச என் நண்பர்கள் சிலர் அழகான கையெழுத்தால நிறைய மார்க்கை அள்ளினாங்க.

● ஆங்கிலம் இரண்டாவது தாள்ல கவிதையை விவரிக்கும்போது, கூடவே அந்தக் கவிதையிலுள்ள முக்கியமான வரிகளையும் எழுதுங்க. மார்க் பிச்சிக்கும். அறிவியல் போன்ற மற்ற பாடங்கள்ல உங்க இங்கிலீஷ் திறமையைக் காண்பிக்க வேண்டாம். இங்கே இலக்கணங்கள் எல்லாம் இரண்டாம்பட்சம்தான். கேட்ட கேள்விக்குச் சரியான விடை எழுதினா போதும்.

● மூணு மணி நேரம் முடியும் வரை

ஸ்டடி வேண்டாம்!"

அமைஞ்சிடும். இயற்பியல் தேர்வு நம்ம நேரத்தை நல்லா சாப்பிடும். பெரும்பாலும் தியரி கேள்விக்குப் பதிலா கணக்கு, ஈகுவெஷன் கேட்கிற கேள்விகளைத் தேர்ந்தெடுக்கணும். தியரிக்கு முப்பது லைன் எழுதணும்னா கணக்குகளுக்குப் பத்து வரிகள் எழுதினா போதும்.

● கையெழுத்து முத்து முத்தா இல்லைங்கிற கவலை வேண்டாம். ஒவ்வோர் எழுத்துக்கும் வரிக்கும் இடையே நல்லா இடம்விட்டு எழுதுங்க. ப்ளாக் பேனாவுல கட்டாயம் கோடிடுங்க. இதெல்லாம் உங்க

தேர்வு எழுதக் கூடாது. கால் மணி நேரம் முன்னதாக முடித்து, அந்த நேரத்தை விடைகளைச் சரி பார்க்கறது, அண்டர் லைன் பண்றதுன்னு பேப்பரை அழகு படுத்தக்கூடிய விஷயங்களுக்கு ஒதுக்கிடணும். நல்லாப் படிச்ச எல்லோராலும் 1160 மதிப்பெண்கள் வாங்க முடியும். அதுக்கு மேலே வாங்கறது எல்லாம் இந்தச் சின்னச் சின்ன சூட்சமங்கள்லதான் இருக்கு.

- ச.ந.கண்ணன்

வித்யாசாகர்

வட்டமேஜை

புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் கிரன் தேசாயின் பேட்டி எதிர்பாராத இன்ப அதிர்ச்சி!

- சி.பரத், சென்னை - 82

ரேவதியின் கவிதை அருமை. ஓர் அழகிய சிறுகதையைத் தனக்குள் சிப்பிக்குள் முத்தாய் ஒளித்து வைத்திருந்தது.

- எம்.மணிபாரதி, தேனி

'விட்டு விடுதலையாகி', 'நீடிக்கும் வினாக்குறி' இரண்டு சிறுகதைகளும் துறவு, உறவை விளக்கியது அருமை!

- சு.இந்துமதி, நெய்வேலி

'தேர்தலில் நிற்பதும் தோற்பதும்கூட ஜனநாயக மரபுகளை வலுப்படுத்தவே செய்யும்' எனும் தலையங்க வரிகள் சிறப்பானவை!

- கே.என்.பாலகிருஷ்ணன், கும்பகோணம்

ஏரல் ஸ்ரீ சேர்மன் அருணாசல சுவாமி வாழ்வில் நடந்த அற்புதங்களைச் சொன்ன விதம் உணர்வுபூர்வமான உன்னதம்!

- பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்


'பாலிடிக்ஸ் பஜார்' அரசியல்வாதிகளுக்கு 'படா பேஜார்' தரும் பகுதி என்றால், எங்களுக்கோ அது 'படுஜோர்'!

- வே.ந.கதிர்வேல், வேலூர்

இசை விழாவில் அரசு நுழைந்தால் அரசியலும் நுழைந்து விடுமே... அதுதான் கவலையாக உள்ளது!

- குவளை எழில், சென்னை - 92

தேனி வளர்ப்புக் கட்டுரை எங்



நாத்திகனையும், ஆத்திகனாக்கும் சிறப்பான கட்டுரைத் தொடராக அமைந்துவிட்டது என் கடவுள்... என் தோழன்...

- இராஜேஸ்வரி ராமகிருஷ்ணன், எரகுடி

'என் கடவுள்... என் தோழன்...' ஒவ்வொரு வாரமும் ஏதோ ஒரு விதத்தில் மனதைத் தொட்டதுடன், கடவுளை நண்பனாகப் பார்க்கும் பரவசத்தையும் கொடுத்தது.

- எம்.ராஜா, வால்பாறை

சுவாமி சுத்தானந்தாவின் எழுத்தைத் தமிழ்ப்படுத்திய சிவசங்கரியின் வாக்கியங்களில் சுவை அதிகம்.

- கே.மஞ்சுளா, கோவை

சுவாமி சுத்தானந்தாவின் 'God My Best Friend' என்னும் ஆங்கிலப் புத்தகத்தின் தமிழ் வடிவம்தான் கல்கியில் தொடராக வந்த 'என் கடவுள்... என் தோழன்...'. இப் புத்தகத்தின் வெளியீட்டு விழா வரும் பிப்ரவரி 20ஆம் தேதி மாலை 6.30 - 8.00 மணி வரை எம்.சி.டி.எம். சிதம்பரம் செட்டியார் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடைபெற உள்ளது. மேலும் பிப்ரவரி 20- 24ஆம் தேதி வரை சுவாமி சுத்தானந்தாவின் அருளுரையும் நடைபெற உள்ளது. காலை தியானம் பிப்ரவரி 21 - 24ஆம் தேதி வரை காலை 6.45 முதல் 7.45 வரை, எல்டாம்ஸ் சாலையிலுள்ள தத்வலோகா அரங்கத்தில் நடைபெறுகிறது.



'மனிதர்களிடம் அன்போடு நடந்து கொள்பவர்கள் சொர்க் கத்தை அடைய வாய்ப்பு உண்டா?' என்னும் கேள்விக்குத் தராசின் பதில் நெஞ்சைத் தொட்டது!

- பி.இராஜேந்திரன்,
லோயர் அணைக்கட்டு

முந்துக்கள் மூன்று கட்டுரை வைரமாக இனித்தது!

- வெ.லட்சுமிநாராயணன்,
வடலூர்

யாரோடு பரத்துக்குக் காதல் என்று ஆவலோடு எதிர்பார்த்துப் படித்தேன். மூவரோடும் என்று சொல்லி முத்துக் குளித்து விட்டாரே!

- எம்.சர்க்கரை, கானத்தூர்

சிப்பிக்குள் முத்து!

களைப் போன்றவர்களுக்கு மிக்க பயனுள்ளதாக இருந்தது.


- டி.இராமகிருஷ்ணன்,
செட்டியார்பட்டி

மறுக்கிறார் செந்தமிழன்!

தங்களது 04.02.2007 இதழின் 'பதுங் கும் அதிகாரிகள் - படுத்தும் கோஷ்டிகள்' என்கிற கட்டுரையில், நான் கண்ணைக் கட்டி காட்டில்விட்டதுபோல இருப்பதாக வும், பாக்யராஜ் தலைமையில் எனது திருமணம் நடைபெற்றதாகக் குற்றச் சாட்டு உள்ளதாகவும் செய்தி வெளி யிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையில் சென்னையில் உள்ள அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களிடத்தில் பேசி அவர்கள் பதிலும் வெளியிடப்பட்டுள்ளது.

பாக்யராஜ் தலைமையில் எனது திருமணம் நடைபெற்றது என்பது முற்றி லும் தவறானது. எனக்கு இந்துமத, வன்னியர் சம்பிரதாயப்படிதான் திருமணம் நடைபெற்றது. தங்களது நிருபர் என்னிடம் விளக்கம் கேட்டிருந்தால் என் திருமணப் பத்திரிகையையும், புகைப்பட ஆல்பத்தை யும் காண்பித்திருப்பேன். ஆனால், என்னிடம் இதற்கு விளக்கம் கேட்கப்படவில்லை.

சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யக்கூடிய பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறேன். கட்சிக்காரர்களும், பொது மக்களும் என்னை எப்போதும் சந்திக்கும் நிலையில் தான் உள்ளேன். எனது கவனத்துக்குக் கொண்டு வரும் பிரச்னைகளை என்னால் முடிந்தவரை தீர்த்தும் வருகிறேன்.



- ஜி.செந்தமிழன்,
(சைதை சட்டமன்ற உறுப்பினர்)

சிறுகதை

குழந்தை பசியில் அழுதது. இரண்டு இட்லி... அல்லது ஒரு பன் வாங்கிக் கொடுக்கலாம்..

ஆனால், கையில் காசு இல்லை. நடவு வேலை கிடைக்கவில்லை. காலில் வேலிக் கருவை முள் குத்திய இடத்தில் வீங்கிச் சீழ் வைத்து வலித்தது.

'என்ன செய்வது?' யோசித்து யோசித்து ஒரு வழியும் தெரியாது கலங்கினாள் உமா.

'இந்தக் குடிகாரப் பயலைக் கட்டிக்கிட்டு என்ன சுகத்தைக் கண்டோம்?'

கூடத்தில் மாட்டியிருந்த இறந்துபோன கணவனின் புகைப் படத்தைப் பார்த்துக் கோபம் வந்தது.

பொழுது விடிந்தால்... பொழுது போனால் சாராயம்... கையில் நாலு காசு கிடைத்தால் சூதாட்டம்...

கேட்டால் அடி... உதை... இரண்டு வருட அவஸ்தை.. வயிற்றில் குழந்தை இருக்கும்போதே போய்ச் சேர்ந்தான்.

நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து இந்தப் பிள்ளையை வளர்க்கலாம்... வேலைக்காரி என்றால் ஒரு மாதிரி பார்ப்பவர்களால் அதுவும் பாதியில் நின்றது.

'பட்ட காலில் படும்... கெட்ட குடியே கெடும்...' என்ற பழமொழியை மெய்யாக்க குழந்தைக்கு அடிக்கடி நோய்... அதில் தட்டுமுட்டுச் சாமான்... தோடு... மூக்குத்தி எல்லாம் போனது.

'ச்சே! என்ன வாழ்க்கை இது' என்ற சலிப்பும், 'எதுக்குத்தான் வாழணும்?'



என்ற கேள்வியும் அடிக்கடி எழுந்ததன் விளைவே...அந்தத் துயரமான முடிவு!

'குழந்தையையும் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்வது...'

அப்பா - அம்மா ஆதரவு கிடையாது. கூடப் பிறந்த தம்பி திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.

சாவது என்ற முடிவுக்கு வந்த பிறகு 'எப்படி?' என்ற கேள்வி வந்தது.

கமலா கந்தசாமி

பத்து விரல் பாட்டி!

பச்சைக் குழந்தையைத் தூக்கில் மாட்ட மனசு வரவில்லை....

பூச்சி மருந்து வாங்கக் காசில்லை.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டாள். அங்கே தான் அரளி மரம் இருந்தது.

"அம்மா பசிக்குதும்மா..." குழந்தை அலமு கண் கலங்கினாள்...

"பசி இன்னைக்கு மட்டும்தான்... இனி பசிக்கவே பசிக்காது..."

வாய்விட்டுப் புலம்பினாள் உமா.

"அம்மா பசிக்குதும்மா... இட்லி வேணும்..." கோயிலுக்கு அருகில் இருக்கும் 'இட்லிக்காரப் பாட்டி' வீட்டைப் பார்த்ததும் அலமு அடம் பிடித்தாள்...

வெறும் வயிற்றோடு குழந்தையைச் சாகடிக்க மனசு வரவில்லை.

"சரி... வா... கடன் கேட்டுப் பார்க்கறேன்"

"அலமுக்குப் பசிக்குது பாட்டி... ரெண்டு இட்லி இருக்குமா?"

"அடி என் ராசாத்திக்கு இல்லாத இட்லியா... எனக்குன்னு நாலு எடுத்து வச்சிருக்கேன், இந்தா..."

குழந்தையை வாரி முத்தமிட்ட இட்லிக்காரப் பாட்டி... ஒரு தட்டில் இரண்டு இட்லி வைத்து நீட்டினாள்...

"பாட்டி, உங்களுக்கு...?" வாங்கத் தயங்கினாள் உமா.

"அட... இந்தக் கெழத்துக்கு என்ன? ஒருவேளை சாப்பிடலேன்னா உயிரா போய்டப் போவுது..."

அவள் யார்? பெயர் என்ன? வயது என்ன? யாருக்கும் தெரியாது... எல்லோருக்கும் 'இட்லிக்காரப் பாட்டி'.

"எதுக்குப் பாட்டி தள்ளாத வயசுலயும் இட்லிக் கடை போட்டுக் கஷ்டப் படுறீங்க?"

ஒருமுறை உமாவே கேட்டிருக்கிறாள்.

"நம்மகிட்டே நாலு காசு இருக்கணும்டி... செத்தாகூட வரட்டி... விறகு வாங்கிக் கொளுத்த காசு வேணுமே... உடம்புல வலு இருக்கிறவரை சும்மா இருக்க முடியுமா என்ன...?"

பாட்டி அன்று சொன்னது நினைவுக்கு வந்தது...

"பத்து விரலால சம்பாதிச்சி, அஞ்சு விரலால அள்ளித் திங்கறேன்... ஆனா... வர வர உடம்பு முடியலே... நீயும் வேலைவெட்டி இல்லாமத்தானே இருக்கே... சாயந்திரம் வந்து மாவரைச்சி ஒத்தாசை பண்ணு... உனக்கும் பாப்பாவுக்கும் ரெண்டு வேளை சாப்பாடு ஆச்சு... முடிஞ்சா... நீயே ஒரு இட்லிக் கடை போடு..."

சட்டென்று உமாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன சொன்னீங்க பாட்டி... பத்து விரலா?"

"அட... நமக்கு எத்தனை கையி? ரெண்டு. அதுல எத்தனை விரலு? பத்து...! ரெண்டு கையால வேலை செஞ்சு, ஒரு கையாலதானேடி அள்ளிச் சாப்பிடறோம்?"

பாட்டி சொல்லிச் சிரிக்க, உமாவுக்குப் புதிதாய்ப் பிறந்த உணர்வு.

குழந்தையை மார்போடு அணைத்தபடி நம்பிக்கையுடன் சொன்னாள்.

"சாயங்காலம் அரிசி, உளுந்து ஊறப் போட்டு வையுங்க பாட்டி... நான் வந்து அலசி, ஆட்டுக்கல்லுல அரைச்சி கரைச்சி வைக்கிறேன்... காலையில வந்து இட்லியும் சுட்டுத் தர்றேன்." ○

போராட்டம்

“தட்டிக் கேட்கத் தயங்க மாட்டேன்!”

நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளைக் கடுமையாக விமர்சனம் செய்த ஆற்காடு வீராசாமி மீதும் அதை வழிமொழிந்த முதல்வர் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் போட்டு, நீதிமன்றத்தின் உயர் தன்மையை அவர்கள் ஒப்புக்கொள்ளச் செய்திருக்கிறார் கே.ஆர்.ராமசாமி என்கிற டிராஃபிக் ராமசாமி. “அது எவ்வளவு உயர்ந்த இடமாக இருந்தாலும் அநீதிகளையும் அக்ரமங்களையும் அடாவடித்தனங்களையும் தட்டிக் கேட்கத் தயங்கவே மாட்டேன்” என்கிறார் டிராஃபிக் ராமசாமி. ‘டிராஃபிக்’ அடைமொழி எப்படி ஒட்டிக்கொண்டது?

1960களில் ஊர்க்காவல் படை துவங்கிய போது, அதில் முதல் நபராகச் சேர்ந்தவர் ராமசாமி. அப்போது அவர் பி அண்ட் சி மில்லில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். கூடவே போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் சேவையில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். குறிப்பாக, உயர்நீதிமன்றப் பகுதிகளில் சுறுசுறுப்பாகப் பணிசெய்த அவருடைய பெயருடன் டிராஃபிக்கும் ஒட்டிக் கொண்டது.

பின்பு மில் வேலையிலிருந்து வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டு முழு நேர சமூக சேவகராக மாறினார் ராமசாமி. “முதலில் மக்கள் பிரச்னைகளைப் பத்திரிகைகளுக்குக் கடிதம் மூலம் எழுதிக் கொண்டிருந்தேன். பின்னர் 1998ல்தான் பொது நல வழக்குகள் மூலம் நீதிமன்றக் கதவுகளைத் தட்டத் துவங்கினேன்” என்று சொல்லும் ராமசாமி, இது வரை 35க்கும் மேற்பட்ட பொதுநல வழக்குகளைப் போட்டிருக்கிறார். நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்று இடம், ஆட்டோ மீட்டர், அரசு ஊழியர் வேலை நிறுத்தம், விதிகளை மீறிக் கட்டப்பட்டிருக்கும் வணிக வளாகங்கள், ஹெல்மெட் அணிதல் என்று சமூகத்தின் சகல பிரச்னைகளையும் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்து, உரிய நிவாரணத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றிருக்கிறார்.

“அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோர் ஆரம்பத்தில் என் மீது கோபப்பட்டாலும், சுய நலம் கலவாத என் பொதுப் பணியைப் பாராட்டத் தொடங்கிவிட்டார்கள்” என்கிறார். மீன்பாடி மோட்டார் வண்டிகள் சகட்டு மேனிக்குப் போய் விபத்துகளை உண்டாக்கியதால், கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கிவிட்டார் ராமசாமி. இதனால் கடுப்படைந்த ஒருவன், பாரிமுனையில் ராமசாமியைக் கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டான். இவரது வழக்கின் விளைவாக தி.நகர் வணிகக் கட்டடங்கள் இடிக்கப்படும் நிலையில் இருக்கின்றன. “முப்பது லட்சம் வரை எனக்கு விலை பேசினார்கள். ‘போங்கடா’ன்னு சொல்லிட்டேன்” என்று கூறும் ராமசாமியின் வயதென்ன தெரியுமா? எழுபத்து மூன்று!





சென்னை மாநகராட்சியின் நூறு வார்டுகளுக்கு மறுதேர்தல் நடைபெறுகிறது. இதில் 59ஆவது வார்டில் போட்டியிடும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் திருமதி தேவி குறிப்பிடத்தக்கவர்.

சென்ற அக்டோபரில் உள்ளாட்சித் தேர்தல் நடந்தபோது ஆளும் கட்சியால் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகத்தை அனுபவித்தவர் தேவி.

"காலை ஆறரை மணிக்கே சின்னபாபு தெருவிலிருக்கும் மாநகராட்சிப் பள்ளி வாக்குச்சாவடிக்குச் சென்றுவிட்டேன்.

"உயிர் போனாலும் பரவாயில்லை!"

எட்டரை மணிக்குத் தி.மு.க.வினர் கும்பலாக வந்தனர். வந்தவுடன் நேராக ஓட்டுச் சீட்டு வைத்திருந்த ஊழியரிடம் போய் அவற்றைப் பறித்துக்கொண்டனர். நாங்கள் பிடுங்கி மீண்டும் ஊழியரிடம் கொடுத்தோம். போலீஸ் வேடிக்கை பார்த்துக் கொண்டே நின்றது.

மதியம் வாக்குச்சாவடியைவிட்டு வெளியே வந்து நின்றேன். அப்போது குவாலிஸ் காரிலிருந்து கறுப்பு பேண்ட், வெள்ளைச் சட்டையுமாக ஒரு கும்பலுடன் ஆளும் கட்சிப் பிரமுகர்கள் வந்து இறங்கினார்கள். அந்தப் பகுதி ஆளும் கட்சிப் பிரமுகர் என் அருகில் வந்து வசைபாடி, என் கன்னத்தில் பளாரென்று அறைந்து விட்டார். எதிர்பாராத அடி என்பதால் கீழே விழுந்தவள்; சமாளித்து எழுந்தேன். இதற்குள் ஒருவர் என் முடியைப் பிடித்து சுவரோடு சுவராக டங்கென்று தலையை மோதினார். வலி பொறுக்க முடியாமல் மீண்டும் கீழே விழுந்தேன். பின் முக்கிய பிரமுகரின் தம்பி காலால் என் வயிற்றில் மிதித்தார்.

அப்புறம் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. மருத்துவமனையில் கர்ப்பப்பை பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டேன். ஒரு மாத காலம் சிகிச்சை எடுக்க வேண்டியதாகிவிட்டது. என்னைத் தாக்கிய அந்த நபருக்குச் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி காரணமாக ஓட்டு கேட்டிருக்கிறேன்." என்ற தேவியிடம்,

'எந்த தைரியத்தில் மீண்டும் தேர்தலில் நிற்கிறீர்கள்?' என்றோம்.

"உள்ளாட்சித் தேர்தல் விவகாரம் ஏற்கெனவே நீதிமன்றத்தில் அலசப்பட்டுவிட்டதால் இந்தமுறை நியாயமாக நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

வன்முறை எந்த உருவத்தில் வந்தாலும் சந்திப்பேன். உயிரே போனாலும் பரவாயில்லை."

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

சலனம் நீக்கும் சக்தி

23

சுதா சேஷய்யன்

பண்டாஸுரனை ஒன்றுமில்லாமல் அழித்தவள், அவனது சூன்ய நகரத்தையும் அழித்தாள். அவனையே சூன்யமாக நிற்க வைத்தாள் - காமேசுவரனின் அஸ்திரத்தைக் கொண்டு.

அதன் பிறகு என்ன ஆயிற்று...?

பிரம்ம உபேந்திராதி மஹேந்த்ராதி தேவ ஸம்ஸ்துத வைபவா

- சுற்றியிருக்கக்கூடிய எல்லோரும் துதித்தார்கள். அவளுடைய வைபவத்தைச் சொல்லிப் பிரார்த்தித்தார்கள் - யாரெல்லாம் பிரார்த்தித்தார்கள் என்றால், சிருஷ்டி தெய்வமான பிரம்மா, உபேந்திரன் என்கிற மஹா விஷ்ணு - இந்திரனுக்குச் சகோதரராகத் தோன்றியவர் என்பதால் அவருக்கு உபேந்திரன் என்று பெயர் - ஸ்திதிக்குத் தலைவரான விஷ்ணு அவள் வைபவத்தைச் சொல்லித் துதிக்கிறார். மஹேந்திரன் - ருத்ரன் பிரார்த்திக்கிறார். தேவர்களெல்லாம் பிரார்த்திக்கிறார்கள். அப்படிப் பிரார்த்திக்கப்படுகிற **வைபவா**வாக இருக்கக் கூடியவள் இன்னொன்றும் பண்ணினாள். அடுத்து அவள் என்ன செய்தாள் என்பதைச் சொல்கிற அடுத்த நாமாவளியைப் பார்ப்பதற்கு முன்னால், இந்தப் பண்டாஸுரன் வரலாறு எதைக் குறிக்கிறது என்று பார்க்க வேண்டும்.

வெறும் கதையா?

யாரோ ஒரு பண்டாஸுரன்; அவனை ஸம்ஹரிக்க அம்பாள் லலிதாம்பிகையாக வடிவமெடுத்து வந்தாள் என்பதைச் சொல்வதற்குத்தான் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமமா? இதைச் சொல்வதற்குத் தான் லலிதோபாக்கியானமா?


பதினாறு வயது குமரியாக- லலிதாம்பிகையாக- நெருப்பிலிருந்து தோன்றினாள்; காமேசுவரனை மணம் புரிந்து கொண்டாள். இருவருமாக ஸ்ரீபுரத்தில் தங்கினார்கள். அதற்கப்புறம்தானே பண்டாஸுரனுடன் சண்டை ஆரம்பமாயிற்று? பண்டாஸுரன் அனுப்பிய அஸ்திரங்கள் என்ன; பதிலாக அம்பாள் என்ன மாதிரி அஸ்திரங்களை அனுப்பினாள் என்பதை விவரமாகச் சொல்லாமல் 'பிரத்யஸ்த்ர வர்ஷிணி'- பதிலுக்குப் பதில் அஸ்திரங்களை அனுப்பினாள் என்கிறது சஹஸ்ரநாமம்.

ஆனால், இது பற்றி விவரமாக லலிதோபாக்யானத்திலும் அதைவிட அதிகமாக தேவி மஹாத்மியத்திலும் உண்டு.

பண்டாஸுரன் என்ன மாதிரியான அஸ்திரங்களை அனுப்பினான் என்பதைப் பார்த்தோம் - தூக்கத்தை, மயக்கத்தை, மந்திரத்தை, தந்திரத்தை, யந்திரத்தையெல்லாம் அனுப்புகிறான்.

மந்திரத்தை அனுப்பினான் என்றால் என்ன அர்த்தம்? ஏதோவொரு பலம் - உயர்வாக இருக்கக்கூடிய ஒரு மந்திர பலம் - அதை அனுப்புகிறான்.

தந்திரம் என்றால்...? சாதாரண நடைமுறையிலே தந்திரம் என்று எதைச் சொல்லுவோம்? தந்திரத்தால், மாந்திரீகத்தால் இல்லாத ஒன்றை உற்பத்தி


ஸ்ரீ அபீதகுஜாம்பாள்-திருவண்ணாமலை



செய்ய முடியும் என்று கருதுகிறோம் - அப்படியானால், பண்டாஸுரன் தந்திரத்தை அனுப்பினான் என்கிறபோது, இல்லாத ஒன்றை, இருப்பதுபோல் தோன்றச் செய்கிற அஸ்திரத்தை அனுப்பினான் என்று அர்த்தம்.

இந்த அஸ்திரங்களால் சக்திகளெல்லாம் கீழே விழுந்தார்கள் - மந்த்ரிணி, வாராஹி தவிர, கீழே விழுந்தவர்களையெல்லாம் அம்பாள் மீண்டும் எழுப்பினாள்.

- ஒன்றுமே இல்லாத சில விஷயங்களைப் பார்த்துவிட்டு, ஏதோ பெரிதாக இருப்பதாக நினைத்து, ஒவ்வோர் ஆத்மாவும் - ஒவ்வொரு ஜீவனும் சலனப்பட்டு, அதுதான் பிரதானம் என்று நினைத்து, அந்த நிலையற்ற விஷயத்துக்குப் பின்னால் போகிறது அல்லவா? அப்படி ஓடிப் போய் விழுகிற ஜீவன்களை அம்பாள் தான் காப்பாற்றுகிறாள்; எழுப்புகிறாள்!

பண்டாஸுரன் கதை ஏதோ ஓர் அஸுரனைப் பற்றியது இல்லை. கதை எப்படி ஆரம்பிக்கிறது?

காம தகனம் நடக்கிறது; அதிலிருந்து தோன்றிய சாம்பல் அசுர வடிவமாகிறது; அந்த அசுரன்தான் பண்டன். பண்டன் என்றால் நல்லவன்; நல்லவனே அசுரனாக மாறுகிறான்!

ஜீவனின் சலனம்!

அப்படியானால் இதற்கு என்ன அர்த்தம்? இந்த ஜீவன், பண்டாஸுரனாக மாறிவிடக் கூடாது என்பதைத்தான் இக்கதை சொல்கிறது. இறைவன் படைக்கிறபோது நன்றாக இருக்கக்கூடிய இந்த ஜீவன், பரமாத்மா தன்னுடைய ஸ்வரூபத்திலிருந்து வெளிப்படுத்தும்போது நல்லவனாக இருக்கக் கூடிய ஜீவாத்மா, பூமிக்கு வந்தவுடனேயே - பிறவிப் பெருங் கடலில் விழுந்தவுடனேயே, ஸம்ஸார ஸாகரத்தில் விழுந்தவுடனேயே - இங்கே கிடைக்கக் கூடிய எல்லா விஷயங்களும் கிடைத்தவுடனேயே, ஏதோ 'இந்த வாழ்க்கையில் நாம் சாதிப்பதுதான் பெரிது' என்று நினைத்து, ஆணவத்திலேயும், அகங்காரத்திலேயும், மமகாரத்திலேயும் சிக்குண்டு அசுரத்தன்மையை அடைகிறது. எப்படி நல்லவனான பண்டன் பண்டாஸுரனாக மாறினானோ, அப்படி ஜீவாத்மாவுக்கு அசுரத்தன்மை சேர்கிறது.

இந்த அசுரத்தன்மை என்ன மாதிரி ஆயுதங்களைப் பிரயோகம் பண்ணுகிறது என்றால், தூக்கம், மயக்கம் போன்ற அஸ்திரங்கள். இவை ஒவ்வொரு ஜீவனுக்கும் இருக்கக்கூடிய சலனங்கள்! 'இன்னும் கொஞ்சம் தூங்கலாமே, இன்னும் ஐந்து நிமிடங்கள் தூங்கலாமே' என்கிற சலனம். - இவைதானே பெரும் இடையூறுகளை உண்டு பண்ணுகின்றன!

மந்திரத்தைப் பிரயோகித்தான் பண்டாசுரன் என்று பார்த்தோம். மந்திரம் என்பது என்ன? இல்லாத ஒன்றை இருக்கிறாற்போல் செய்கிறதே, அதுதான்

மந்திரம். சம்ஸார ஸாகரத்தில் பிறவிப் பெருங்கடலில் இருக்கிறோமே... அப்படி அதிலே இருப்பதுதான் பெரிதாக நமக்குத் தோன்றுகிறது-இந்த மாயையைக் குறிப்பது தான் பண்டாசுரனின் தந்திர அஸ்திரம்.

தூக்கமும் மயக்கமும் சின்ன விஷயங் கள் மாதிரி தெரியும். ஆனால் அந்தச் சின்ன விஷயங்களினால் பெரிதாக ஏதேனும் காணாமல் போய்விடும்!

ஐந்து மணிக்கு எழுந்து கொள்வதற் காக 4.50க்கு அலாரம் வைத்துக் கொள் கிறோம். அது அடிப்பதற்கு முன்பாகவே- 4.40க்கே - எழுந்து, அதன் தலையில் ஒரு தட்டு தட்டிவிட்டுத் தூங்கிப் போய்விடு கிறோம்... அன்று சாயங்காலம் என்ன சொல்கிறோம்...? மனசுக்குள் அவரவர் மனசாட்சி பேசும்: "அஞ்சு நிமிஷம் மனச் சலனப்பட்டு, எழுந்திருக்காமல் விட்டுவிட் டேனே... எழுந்திருந்தால் வேலைகளை யெல்லாம் முடித்திருக்கலாமல்லவா?" என்று.

சின்ன சலனங்கள் எங்கோ வெளியிலே யிருந்து வரவேண்டும் என்பதில்லை! யாரோ இலட்ச ரூபாய் கொடுத்தார்கள் அல்லது ஒரு கோடி கொடுத்தார்கள் - அதனால் சலனப் பட்டோம் என்று இல்லை... சின்ன, அன்றாட விஷயத்தில் சலனப்படும் போதே வாழ்க்கை எத்தனை தூரம் தடம் புரண்டு போகிறது!

பொதிந்து கிடக்கும் சக்தி

அப்படியானால் மனித வாழ்க்கை யைக் கீழே தள்ளக்கூடிய விஷயம் இந்தச் சலனங்கள்; சுர்ப்புகள்.

– இது எல்லாவற்றுக்கும் பொருந்தும். உலகத்திலே பெரிய இலஞ்ச - ஊழல் நடந்ததென்றாலும் சரி, ஏதோ ஒன்றைச் சாதிக்க முடியாமல் போயிற்று என்றாலும் சரி...

இன்றைக்குப் படிக்க வேண்டிய பாடத்தைப் படிக்கவில்லையே என்று ஏழாம் வகுப்புப் பையன் வருத்தப்பட்டா லும் சரி...

– எல்லாவற்றுக்கும் அடிப்படை, ஏதோ ஒன்றைப் பார்த்து, அதனால் ஏற்படக் கூடிய கண நேர சலனம்!

இந்தச் சலனம்தான் உறக்கமாகவும் மயக்கமாகவும் தந்திரமாகவும் பண்டாசு ரன் அனுப்பிய அஸ்திரங்கள்!

இவற்றுக்கு ஆட்பட்டு சக்திகள் விழுந்தபோது மந்த்ரிணியும் வாராஹியும் மட்டும் விழவில்லை...

மந்த்ரிணி எங்கேயிருந்து வந்தவள்...? இக்ஷு கோதண்டத்திலிருந்து வந்தவள். வாராஹி எங்கிருந்து வந்தவள்...? பஞ்ச பாணங்களிலிருந்து வந்தவள்.

இதற்கென்ன அர்த்தம்...? நம் மனத்தை யும் இந்த்ரியங்களையும் கொண்டுபோய் அம்பாளிடம் போட்டுவிட்டோமானால், அவை எந்தவிதச் சலனத்துக்கும் ஆட்படாமல் இருக்கும்.

அதனால்தான் பண்டாசுரன் கதை வெறும் கதை அல்ல; வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் புராணம். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் வெறும் நாமாவளி அல்ல; அந்தத் திருநாமங்களுக்குள்ளே எவ்வளவு சக்தியைப் பொதித்து வைத்தார்கள்!

அம்பாளுக்கே 'சக்தி என்ற திருநாமம் என்றால், அந்த சக்தியை நமக்குக் கொடுக் கக் கூடியவளாக அவள் இருப்பதால்தான்.

(தொடரும்)



போட்டி முடிவு

ப்ரேக் இல்லை ஒதுங்கு!

கடந்த 31.12.2006 இதழில் எஸ்.எம்.எஸ். ஜோக் எழுதச் சொன்னாலும் சொன்னோம்... குவிந்துவிட்டன கடிதங்கள். சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூ.250/- பரிசு பெறும் எஸ்.எம்.எஸ். ஜோக்குகள்...

டிராஃபிக் போலீஸ்: நில்லு! நில்லு! உன் பைக்ல ஹெட்லைட் இல்லையே...

பைக்கில் வந்தவர்: முதல்ல நீங்க ஒதுங்கி நில்லுங்க சார்... என் பைக்ல பிரேக்கே இல்ல...!

- ராம் ஆதிநாராயணன், தஞ்சாவூர்

அவன்: லவ் மேரேஜுக்கும் அரேன்ஜ்டு மேரேஜுக்கும் என்ன வித்தியாசம்?

இவன்: நாமலே கிணத்துல போய் விழறது லவ் மேரேஜ்; பத்துப் பேரு சேர்ந்து தள்ளி விட்டா அது அரேன்ஜ்டு மேரேஜ்.

- மு. செந்தில்குமார், திருச்சி

கடவுளிடம் நீர் கேட்டேன்; நதியைக் கொடுத்தார்.

பூ கேட்டேன்; தோட்டம் கொடுத்தார்.

வீடு கேட்டேன்; அரண்மனை கொடுத்தார்.

பணம் கேட்டேன்; உன் செல் நம்பர் கொடுத்தார்.

நான் எப்போது வர நண்பா?

- சுதா ஹரன், பெங்களூரு

ஆசிரியர்: 1869-ல் என்ன நடந்தது?

மாணவர்: தெரியல சார்.

ஆசிரியர்: முட்டாள். காந்தியடிகள் பிறந்த வருடமல்லவா... சரி, 1873ல் என்ன நடந்தது?

மாணவர்: காந்தியடிகளுக்கு நாலு வயசு நடந்தது சார்.

- ஜான் பிரிட்டோ, திண்டுக்கல் - 3

கண்டக்டர்: எல்லோரும் டிக்கெட் எடுத்தாச்சா?

பயணி: பஸ் போற வேகத்தைப் பார்த்தா அப்படித்தான் தோணுது கண்டக்டர்!

- சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

அப்பா: டேய்! பக்கத்து வீட்ல போய் சுத்தியல் வாங்கிட்டு வா!

மகன்: இல்லைன்னு சொல்லிட்டாங்கப்பா.

அப்பா: சரியான கஞ்சப் பசங்க! சரி, நம்ம வீட்ல இருக்கிற சுத்தியல எடு.

- துளிர், மதுரை


"டாக்டர்... நான் 'சிம் கார்டை' முழுங்கிட்டேன்."

"கையை விட்டு எடுக்க வேண்டியதுதானே..."

"கையை விட்டேன் சார்... 'நாட் ரீச்சபிள்'னு வருது."

- புவனா நித்திஷ், மேலகல்கண்டார் கோட்டை




Milky Way Cell Tech
Low models, Camera models, Blackberry, PDA MOBILES
C168
N93
P310
N70
W850
E50
Now available AIRTEL Blackberry
Blue tooth
Charger
Battery
MMC
Panel
Headphone
on
WORLD SPACE
SATELLITE RADIO
Authorised Channel partner for TATA Sky
PREPAID CONNECTION FOR AIRTEL&AIRTEL DATA CARD
PCB PICTURE SPEAKER MIC,SERVICING OF MOBILES.
Our Special:
Softwares, Phone Backup, Ringtones, MP3,
Songs / Themes, Smart Movies, Antivirus,
Games
Easy Installment, Exchange
All Cards Accepted
Milky Way Cell Tech
No.94 Habibullah Road,T.Nagar,Chennai - 17
Tel: 28342020,28342929 Fax: 42125090
Mobile: 9840066110-8.
milkyway.celltech@yahoo.com
"SERVICE IS OUR WAY OF LIFE"

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No. TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.



நம் ஊருக்கு வரும் சுற்றுலா பயணிகள், தங்களுக்குப் பிடித்த இடங்களை சுற்றிப்பார்க்கும் சமயங்களில் பல்வேறு அனுபவங்களைச் சந்திக்க நேரிடும். பேருந்தில் முண்டி அடித்துக்கொண்டு ஏறுவது, அனுமதிச் சீட்டு பெற வரிசையில் காத்திருப்பது, தகவல்களுக்காக தவிப்பது என அவர்கள் சிரமப்படும் ஒவ்வொரு சமயத்திலும், அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, நாம் விட்டுக் கொடுத்து உதவுவது மிகவும் முக்கியம்.

தமிழகத்தில் வந்து தங்கும் நாட்களில் நல்ல அனுபவங்களைச் சந்திப்பதும், தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பிய பிறகும் இந்த சுகமான நினைவுகளை திரும்பத்திரும்ப அசைபோடுவதும்தான் அவர்களை மீண்டும் மீண்டும் தமிழகத்திற்கு வரச்செய்யும். வெளிமாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தமிழகத்திற்கு சுற்றுலா பயணிகளாக வரும் நம் விருந்தினர்கள் பொன்முட்டையிடும் வாத்துகள். அவர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை.



தமிழ்நாடு சுற்றுலாத்துறை

தமிழ் நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா ரோடு, சென்னை-600 002.
போன்:25380583, 25388785, 25361640 ஃபேக்ஸ் : 25361385,25366633